567

# TAMIL MALAR VACHAKAM

Book I For Form I

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1-DEC 1949

BY

T. V. Chengalvaraya Mudaliyar

&

Miss. A. Vedambal, B.A., L.T.

567/4-49

VISWA & CO.,
MADRAS. 5.

TB
031(6)
N49
88538

# தமிழ்மலர் வாசகம்

## மலர் ஒன்று

(முதற் பாரத்துக்குரியது)

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1-DEC 1949
MADRAS

ஆசிரியர்கள் :

T. V. செங்கல்வராய முதலியார்,

தமிழ் விரிவுரையாளர், அர்ச். சூசையப்பர் கலாசாலை, பெங்களூர்.,

&

Miss. A. வேதாம்பாள், B.A., L. T.,

தமிழ் ஆசிரியை, அர்ச். யூப்ரஸீஸ் பெண்கள்

உயர்தரக் கலாசாலை, பெங்களூர்.

பிரசுரகர்த்தர் :

ஜி. எஸ். விஸ்வா & கம்பெனி

திருவல்லிக்கேணி ஹைரோட், சென்னை - 5.

காபி ரைட்] 1949 [விலை ரூ. 1

முதற் பதிப்பு - 1949
இரண்டாம்பதிப்பு - ஆகஸ்டு - 1949

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
88538
சென்னை-600 008.

TB
031(6)
N49

Approved for class use by the Madras Text Book Committe, Vide, Fort St. George Gazette Part I-B, page 8, dated 12-7-'49.

துரைத்தனத்தாரால் வெளியிடப்பட்டுள்ள
புதிய பாட இயலின்படி தயாரிக்கப்பெற்றது.

சாது அச்சுக்கூடம், இராயப்பேட்டை

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1-DEC 1949
MADRAS

# முகவுரை

தமிழ் மாணவர்களிடையில் தமிழ்மலர் வாசகம் மலர்ந்துளது. இது அண்மையில் அரசியலார் அறுதியிட்டு வெளிப்படுத்திய புதிய பாட இயலின் (Syllabus) படி, அமைந்துளது. அப்பாட இயலிற் காட்டப்பட்ட வெவ்வேறு பகுதியும், உரிமை பெற்ற இந்நாட்டு இளந்தமிழ் மாணவரை வெவ்வேறு துறைகளில் முன்னேற்றி ஊக்குவிக்க வேண்டுமென்னும் கருத்துடையதாதல் பற்றி, இம்மலரும் அத்தகைய நிலையில், பலவகைப் பாட இதழ்களுடன் மலர்ந்து ஒளிர்கின்றது.

பாடந்தோறும், இந்நாட்குரிய முறையில் புதிய சொல்லும் சொற்றொடரும் பொருளும் அமைந்து, அருஞ் சொற்பொருளுங் கொண்டு, மாணவர்கள் அவற்றிற் பழகத்தக்க பயிற்சிகளும் வினாக்களும் கட்டுரைத் தலைப்புகளும் ஆசிரியர் வரலாறுகளும் துணை நிற்க, இம்மலர் அழகு செறிந்து அவர்களைத் தமிழறிவிலும் இந்நாளைய வாழ்க்கைத் துறையிலும் மெல்லமெல்ல ஈர்த்துச் செல்லும் என்பது துணிபு. இன்னும், பழமொழிகளும் உவமைகளும் ஆங்காங்கு இன்மணம் வீசுகின்றன. இவையேயன்றிப் பாடத் தலைப்புகளின் கீழாகத் திருக்குறள் முதலியவற்றினின்றும் ஆன்றோர்கள் கூறிய அறிவுரைச் செய்யுட்கள் பொருந்து மிடந்தோறும் அத்தலைப்புகளுக்குத் துணையாகத் துலங்குந்திறம் ஓர் புது முறை அமைப்பாகும். மேலும் கால நிலைக் கேற்ற வண்ணம் பழங்கருத்துகள் புதுப் போர்வையுடன் மிளிர்கின்றன.

இதன் தமிழ்நடையும் முதல் பார மாணவரின் தமிழ் முன்னேற்ற முறையில் எழுதப்பெற்று, அவ்வகுப்பு மாணவர் படிக்கப் பார்த்த நிலையினதாம்.

இதன்கண் பழையனவும் புதியனவும், உரியனவும் எளியனவும், அழகியனவும் ஆழ்ந்தனவு மாகிய செய்யுட்கள் மாணவர்கள் மனக்கிளர்ச்சிக் கினியனவாக, ஏறக்குறைய 400 வரிகள் உள்ளனவாய்ச் சேர்க்கப்பட்டுள்ளன. அவை அவ்வப்பள்ளி மாணவர்களுடைய நிலைக்கேற்ப, ஆசிரியர்கள் 300 வரிகளைத் தேர்ந்தேற்றுக் கொள்ளும் வசதி அமைய, தொகுக்கப்பெற்றுள்ளன.

அழகு, மணம், மலர்ப்பொடி, தேன், இனிமை ஆகிய நற்பண்பின் வளம்பெற்ற மலரைப் பெரியோர் இளையோர்க் களித்து நுகர்விப்பதுபோல், ஆசிரியர்கள் தம்மாணவர்க்கு இத்தமிழ் மலர் வாசகத்தை நுகர்விக்குமாறு அருள, நம் அருந்தமிழன்னை அருள்கனிவாளாக.

பெங்களூர்
1—4—'49

ஆசிரியர்கள்.

# வாழ்த்துப் பாடல்கள்

## 1. கடவுள் வாழ்த்து

எல்லாஞ்செய் வல்லதெய்வம் எங்குநிறை தெய்வம்
என்னுயிரிற் கலந்தெனக்கே இன்பநல்குந் தெய்வம்
நல்லார்க்கு நல்லதெய்வம் நடுவான தெய்வம்
நற்சபையி லாடுகின்ற நடராஜ தெய்வம்
கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளும் தெய்வம்
காரணமாம் தெய்வம்அருட் பூரணமாம் தெய்வம்
செல்லாத நிலைகளெல்லாம் செல்லுகின்ற தெய்வம்
சிற்சபையில் விளங்குகின்ற தெய்வமதே தெய்வம்.

—வடலூர் - இராமலிங்க அடிகள்

## 2. தமிழ் வணக்கம்

ஓங்க லிடைவந்(து) உயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத்(து) இருள்கடியும் - ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன்(று) ஏனையது
தன்னேர் இலாத தமிழ்.

—பழம் பாடல்

## பொருளடக்கம்


பக்கம்

1. அசோக நாடும் அசோகர்களும் ... 1
2. வள்ளுவரின் வாழ்க்கை நலம் ... 10
3. ஔவையார் தூது ... 17
4. பரமார்த்த குருகதை i ... 24
5. பரமார்த்த குருகதை ii ... 32
6. இராஜ ராஜேசுவரம் ... 37
7. சர். ஜகதீச சந்திரபோஸும் அவர்கண்ட வியத்தகு காட்சியும் ... 46
8. தமிழ் வளர்ச்சி ... 52
9. சுப்பிரமணிய பாரதியார் ... 57
10. பழங்காலத்திய ஊர்திகள் ... 63
11. ஜேம்ஸ் வாட்டும் ஜியார்ஜ் ஸ்டீவென்சனும் ... 74
12. செஞ்சி மகிழ் செலவு ... 81
13. நம் உரிமையும் நம் கொடியும் ... 92
14. இந்தியாவும் கிராமத் தொழில்களும் ... 100
15. பாரியும் அவன் மகளிரும் ... 107
16. இசை இன்பம் ... 115

செய்யுட் பகுதி :—

1. கடவுள் வணக்கம் ... 118
2. இயற்கை அழகு ... 121
3. அறவுரை ... 124
4. திருக்குறள் ... 131
5. தொடர்நிலைச் செய்யுள் ... 133
6. பல்சுவைப் பாடல்கள் ... 140



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1-DEC 1949
MADRAS

# தமிழ் மலர் வாசகம்

## மலர் ஒன்று

### 1. அசோகநாடும் அசோகர்களும்

நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாடா வளந்தரு நாடு. (குறள்)

1. உலகில் உள்ள நாடுகளில் மிகவும் பழமையும், சிறப்பும், நாகரிகமும் உள்ளது நாவலந் தீவாகிய நம் நாடு. இதனை வடமொழியில் சம்புத் தீபம் என்பர். துஷ்யந்தன் மகனான சிறந்த பரத சக்கரவர்த்தியாலும் அவன் பின்னோராலும் ஆளப்பட்டமையால் இது பாரத நாடாயிற்று. பிற நாட்டார் இந்தியா என்ற பெயர் தந்தனர் இதற்கு. இந்நாடு, மக்கள் உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாத இயற்கைப் பொருள் வளம் எல்லாம் அமையப் பெற்றுள்ளது. மக்கள் யாவரும் இயற்கையுடன் ஒருங்கு இயைந்து வாழ்ந்தால், அவர்களுக்குச் சோகமில்லாதிருக்கச் செய்ய வல்லது இந்நாடு. ஆகவே, இது அசோக நாடாகும்.

2. மக்கள் இனிமையுடன் மகிழ்ந்திருக்கக் கூடிய நாட்டின் திறத்தை வள்ளுவர் அழகாக விளக்குகின்றார். அது குறைவில்லாத விளைவினைச் செய்யும் உழவரையும், தக்க அறவோரையும், கேடில்லாத செல்வமுடையவரையும் உடையதாகும்; அளவிறந்த பொருள் உடைமையால் பிற நாட்டாராலும் விரும்பத் தக்கதாகும்; கேடற்ற மிக்க விளைவை உடையது;

பிற நாட்டினர் தன்னை நாடி வந்தபோது அவர்களைத் தள்ளாமல் ஏற்றுக் காக்கும் என்றாலும், தன்னைக் காக்கும் நாடுகாவலருக்கு வேண்டிய பொருளை முழுவதும் உடம்பட்டுக் கொடுக்கும். அதனிடத்தில் மிக்க பசியும், நீங்காத நோயும், புறப்பகையும் சேர்தல் இல்லை. தம்முள் மனம் மாறுபடும் கூட்டத்தாரும், உள்நாட்டுப் பகைவரும், ஆட்சி முறையைக் கெடுக்கும் குறும்பரும் அங்கு ஏற்பட்டால் ஆட்சியாளரும் நன்மக்களும் அவர்களை அடக்கி ஒடுக்கி விடுவார்கள். அது பகைவரால் கெடுக்கப்படாது; ஒருகால் கெட்டாலும் தன்வளங் குன்றாது செழுமைகொண்டதாகும். இவ்வளவு திறத்தையும் நம்நாடு பெற்றிருப்பதால் தான், பாரதியாரும், “பாருக்குள்ளே நல்ல நாடு—எங்கள், பாரத நாடு” என்று இதனைப் புகழ்ந்துள்ளார். பல நாட்டினரும் இதன் இயற்கைச் செயற்கை வளங்கண்டு உவந்து வந்து இதில் குடிபுகுவாராயினர்; பலர் இதில் அடைக்கலமும் கொண்டனர். பொதுவில் யாவரும் இந்நாட்டில் சோகம் அற்று இருந்தனர். எனவே, இதனை அசோக நாடு என்பதற்குத் தடையாதுளது?

தன்னில் உள்ளாரும் தன்னை யடைந்தாரும் சோகம் இல்லாமல் வாழச்செய்ய வல்ல இயற்கை வளம் படைத்த இந்நாட்டு நன்மக்களும் தம்முடைய அரும்பெரும் நற்செயல்களால் இதனிடத்துள்ள இயற்கை வளத்துடன் இனிய செயற்கை வளத்தையும் பெருக்கி வந்தனர். மக்களுயிரைத் தம்முயிர்போல் பாராட்டி நடுநிலைமை தவறாத மன்னரும் மாட்சிமையுடன் இந்நாட்டை ஆண்டு காத்து வந்தனர். இந்நாட்டு மக்களும் மன்னரும் தமக்கும் மற்றவர்களுக்கும் சோகம் தோன்றாதபடி வாழ்ந்து அசோகராயினர். அவர்களுள், மக்களில் ஒருவரையும் மன்னரில் ஒருவரையும் குறித்துக் கீழ்க்காண்போம்.

# I



3. இந்நாட்டு அசோக மக்களுள் தலைசிறந்த, தன்னலம் அற்ற உழைப்பாளிகள் பலர் இருந்தனர். அவர்கள் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என அறைந்தனர்; இன்னும் "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என இயம்பினர். அவர்கள் தம் வாழ்நாள் முழுவதும் தமக்கென வாழாப் பிறர்க்குரியாளர்களாக வாழ்ந்து வந்தனர். அவர்கள் இம் முயற்சியிலும் செயலிலுமே தம்முயிர் விட்டவருமாவர். இத்தகைய மக்களில் ஒருவராகி, நம்முடன் வாழ்ந்து, நம் நலமே தம் நலமாகக் கருதி உழைக்கும் உழைப்பிடையில் தம் உடல், பொருள், ஆவியை அளித்து மகிழ்ந்த அசோகர் காந்தியடிகள் ஆவார். இவர் வரலாற்றை அறியாதவர் இந்நாட்டில் இல்லை. இவர் சிறப்பாக இந்நாட்டு

மக்கள் விடுதலைக்கும் இனிய வாழ்க்கைக்கும் பொதுவாக உலக மக்களின் நல்லுண்மை வாழ்க்கைக்குமே பாடுபட்டு வந்தார்; இந்நாட்டிலும் பிற நாட்டிலும் வாழும் இந்திய மக்களின் அசோக வாழ்க்கையின் பொருட்டே தம்முடல் அருமையினையும் பாராட்டாமல் உழைத்தார்; பெரும் பொருள் ஈட்டுதற்குரிய தம் பாரிஸ்டர் தொழிலையும் கைவிட்டுத் தம் பொருள் தேட்டத்தையும் மறந்தார். இப்பெரியார் உள் நாட்டிலும் வெளிநாட்டிலும் தம் மக்களுக்காகப் பெருந் துன்பங்களையுங் களிப்புடன் ஏற்ருர். எனினும் அடிகள், தம் மக்களின் துன்ப விடுதலைக்காகப் பிறருக்குத் துன்பம் இழைக்காதவராகி, ஆட்சியாளருக்கு என்றும் பணியாமல், அறவாள் (துன்புறுத்தாமல்) ஏந்தி நின்ருர். இவர் இதைக்கொண்டு எவர்க்கும் அஞ்சா ஆண்மையர் ஆகிய ஆங்கிலேயரை இந்நாட்டினின்றும் அகற்றினர்; இந்நாட்டு அடிமைத்தளையை யறுத்து, இது சுதந்திரம் பெறச் செய்தார். உரிமை பெற்ற இந்நாட்டு மக்கள் ஒன்றுபட்டு இன்பமுடன் வாழச் செய்வதில், தம் கருத்தைச் செலுத்தினர் இக்காந்தியடிகள். இதனுலேயே இவர்தம் ஆருயிரையும் இழந்தார். தலைசிறந்த இப்பெரியார் தம் உயிர்விடும் நேரத்திலும் அசோகராகவே விளங்கினர். இவருடைய அருமை, பெருமை, தன்னலமின்மை, தூய்மை, அறக்கொள்கை யிவைகளைக் கொண்டு நாம் இவரை அடிகள் என்கிறேம்.

4. இத்தகைய பெரியாருடைய தனி வாழ்க்கை மிகவும் மெச்சத்தக்கதாகும். இவர் "உண்பது நாழி உடுப்பது நான்கு முழம்" என்று எண்ணும் தமிழனைக் கண்டார். உலகில் எளிய வாழ்வு வாழ்ந்து, தனிப் பேராண்மை படைத்து வரும் அவனது அரிய நிலையை நினைத்து நினைத்துப் பார்த்தார். ஆகவே, இதனையே உலகினர்க்கு எடுத்துக் காட்டாக விளக்க எண்

ணினர். எண்ணியவர் தாமும் அவ்வாறே, தனக்கெனவாழாத் தன்னந்தனித் தமிழனாக வாழ்ந்து வந்து என்றும் அழியாப் புகழ் எய்தினர்.

## II



5. இனி, மன்னரில் அசோகராகத் திகழ்ந்தவரைக் காண்போம். இவர் இந்நாட்டில் மௌரிய அரச குலம் அமைத்த சந்திரகுப்தரின் மகனான பிந்துசாரனின் மகனாவார். இவர் பிறந்தவுடன் நிகழ்ந்தனவும் இவரிடத்துத் தோன்றியனவுமான சில குறிகளைக் கண்ட இவர் பெற்றோர் இவருக்கு அசோகர் எனப் பெயரிட்டனர். இவர் இளமையில் மிகவும் கொடியவராக இருந்தார். இவர் அரசாளத் தொடங்கின

தும் பல கொடுமைகள் இழைத்தார். இவருடைய ஆட்சி கலிங்கநாடு தமிழ் நாடுகள் தவிர இந்தியா முழுவதிலும் பரவியிருந்தது. ஆகவே, இவர் இவ்விரண்டையும் தம் ஆளுகையில் சேர்த்துக்கொள்ள எண்ணினர். அதற்கென ஒரு பெரும் படையை முதலில் கலிங்கத்தின்மீது செலுத்தினர். கலிங்கம் அடிபணிந்தது. ஆயினும் அப்போரில் பலர் இறந்து பட்டனர். இந்நிலை அசோகரது உள்ளத்தை உருக்கி மிகவும் இளகச் செய்தது. இவ்வாறு பலருடைய உயிரழிவில்லாமல் தமிழ் நாட்டை எவ்வாறு அடிபணிய வைப்பது என்று அசோகர் எண்ணினர். அவருக்குத் தமிழ்நாட்டாருடைய மானமிழக்கா மறப்பண்பு தெரிய வந்தது. தமிழர்கள் "மான மிழந்தபின் வாழாமை முன்னினிது" எனக் கருதுபவர் என்பதை உணர்ந்தார். தமிழ் நாட்டாரைப் போரின்றி, எவ்வாறு பணிய வைப்பது என்பதைப்பற்றி யோசித்துக் கொண்டிருந்தார்.

6. இவ்வேளையில் "பால பண்டிதர்" என்னும் பௌத்த முனிவர் ஒருவர் அசோகரிடம் வந்தார். அவர் புத்த பகவான் அருளிய உண்மை அன்புநெறியை அசோகருக்கு இனிமையாகப் புகட்டினர். அதைக்கேட்ட அசோகர் தம் கொடிய செயல் அனைத்தையும் விட்டார். தமிழ்நாடு தம் அடி பணிய வேண்டும் என்ற எண்ணத்தினை அறவே மறந்தார்; எங்கும் எம்மக்களும் அன்புடன் இன்ப வாழ்க்கை வாழ வேண்டும் என்று எண்ணினர். இதற்காக, அன்புநெறி புகட்டவல்ல பல பௌத்தத் துறவிகளை இந்தியா முழுவதும் அனுப்பி, இந்நெறியைப் பரப்பினர். அவர்கள் அசோகருக்கு அடிபணியாத் தமிழ் நாட்டிற்கும் சென்றனர்; அங்கிருந்து ஈழத்திற் (இலங்கைக்) கும் சென்றனர். வேறு பலர் இந்தியாவைக் கடந்து சீனம், கடாரம் (பர்மா), சாவகம் (ஜாவா) முதலிய இடங்களுக்கும் சென்று யாவர்க்கும் அன்புநெறி

புகட்டினர். அசோகர் அவர்களை அனுப்பியதல்லாமல், ஆங்காங்குத் தூண்கள் நாட்டி அவற்றின்மீது புத்த




பகவான் காட்டிய அன்பு நெறியையும், மக்கள் வாழ வேண்டிய உயர்ரிய ஒழுக்கப் பண்புகளையும் தீட்டி வைத்தார்.

7. இச்செயல்களால், மக்கள் எங்கும் அன்பு பூண்டு ஒற்றுமையுற்றனர்; புலால் உணவும் மயக்கக் குடியும் விட்டு உயர்ந்த ஒழுக்கமுடையவர்களாகித் தம் உரிமை இழவாமல் இன்ப வாழ்க்கை செலுத்தி வந்தனர். எங்கும் சோகம் நீங்கும் வழிகளை அவர் அமைத்தபடியால், "அசோகர் உண்மையாகவே அசோகராயினர்" என்று யாவரும் வாழ்த்தினர்.

8. அவ்வாறு அசோக மக்களும் மன்னரும் வாழ்ந்த இந்த அசோகநாட்டு மக்களாகிய நாம், அன்பு நெறியைக் கைவிட்டு ஒழுக்கம் இழந்து ஒற்றுமை குலைந்தமையால், உரிமை இழந்து அடிமைகளாய் இன்பமின்றிச் சோகங் கொண்டு வாழ்வோமாயினோம். காந்தி அடிகளாரின் அறப்போர் வெற்றியால், அடிமைத்தளையற்று உரிமை உற்ற நாம், மீண்டும் அன்பு நெறியால், என்றும் அசோகராக வாழ்வோமாக. உலக மக்களும் அசோகராக வாழ்வதற்கு உழைப்போமாக. ஆண்டவன் அருள் செய்வாராக.

## அரும்பொருள்

இன்றியமையாத - இல்லாது பொருந்தாத. அறவோர் - அற ஒழுக்கமுள்ள பெரியோர். உவந்து - மகிழ்ந்து. அடைக்கலம் - புகலிடம். தலைசிறந்த - முதன்மையான சிறப்புள்ள. ஈட்டுதல் - சாம்பாதித்தல். தேட்டம் - தேடுதல். தூய்மை - பரிசுத்தம். எய்தினர் - அடைந்தார். திகழ்ந்தவர் - விளங்கியவர். நிகழ்ந்தன - நடந்தன. அடிபணிந்தது - கீழ்ப்பட்டது. மறப்பண்பு - வீரக்குணம். தீட்டி வை - எழுதி வை. தளை - விலங்கு.

## பயிற்சி

1 விடை தருக :—

1. நம் நாட்டுக்கு விளங்கும் பெயர்களும் பெயர்க் காரணங்களும் யாவை?

2. நல்ல நாட்டுக்குரிய பண்புகள் யாவை ?
3. நம் நாட்டைக் குறித்துப் பாரதியார் கூறியது யாது ? ஏன் ?
4. நம் நாடு அசோக நாடானது எவ்வாறு ?
5. அசோக மக்கள் யார்? அவர் இயல்பு யாது ?
6. காந்தியடிகள் அசோகர் ஆனது எவ்விதம் ?
7. காந்தியடிகளின் ஆயுதமும், அவர் வெற்றியும் யாவை ?
8. அசோக மன்னர் யார்? அவர் இயல்பு யாது?
9. அவருடைய கலிங்கப் போரால் விளைந்தது யாது ?
10. தமிழரின் நல்லியல்பு யாது ?
11. அசோகர் அன்புநெறி பரப்பிய தெவ்வாறு ?
12. இந்தியர் அடிமைத்தளையுண்ட காரணமும், அதிலிருந்து மீண்ட விதமும் யாவை ?

II வாக்கியங்களில் அமைத்திடுக :—

இன்றியமையாத, அடைக்கலம், அடிபணி, அடிமை வாழ்வு, வெற்றி, உரிமை, பரவியது, அன்புநெறி.

III அறம் / புண்ணியம் × மறம் / பாபம் — இவை எதிர்ச்சொற்கள்

அறவோர், இன்பம், வெற்றி, பகை, பரலி இவற்றிற்குரிய எதிர்ச்சொற்கள் தருக.

IV நினைத்து நினைத்து, இது ஒன்றை ஒன்று தொடர்ந்து அடுக்கி வந்து, ஊன்றி நினைத்து என்னும் பொருள் தருதலால் அடுக்குத் தொடர். இதைப்போல் வாவா, எடுஎடு, பார்பார் என்பனவும், அடுக்கி வந்து தனித் தனியாகப் பிரித்துச் சொன்னாலும் பொருள் தரும். ஆகவே இவைகளும் அடுக்குத்தொடரேயாம். இவைபோல் மூன்று உதாரணம் தருக.

குளுகுளு என்னும் தொடரைத் தனியாகப் பிரிக்க இயலாது. இது எப்போதும் இரட்டையாகவே வரும், ஆகையால் இது இரட்டைக்கிளவி (கிளவி - சொல்).

இதுபோல்வன : சரசர, படபட, மடமட என்பனவாம்.

V (a) தக்க சொற்கள் அமைக்க :—

1. இந்நாட்டில் உழைப்பாளிகள் ———

2. ——— அறவாளால் ஆங்கிலேயரை வென்றார்.

3. அசோகர் நாடெங்கும் ——— அனுப்பினார்.

(b) மேற்படி வாக்கியங்களில் உங்களால் அமைக்கப்பட்டவை என்ன சொற்கள் ?

---

## 2. வள்ளுவரின் வாழ்க்கை நலம்



மனைத்தக்க மாண்புடைய ளாகித் தற்கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை.

1. நெடுங் காலத்துக்கு முன்னே, சென்னையைச் சார்ந்த மயிலாப்பூரிலே திருவள்ளுவர் என்ற பெரியார் ஒருவர் இருந்தார். அவர் தமிழிலும் வடமொழியிலும் உள்ள நூல்கள் பலவற்றையும் கசடறக் கற்றிருந்தார்.

அவர் கேள்வி ஞானமும் உள்ளவர். அவர் தமிழிலே திருக்குறள் என்ற நூலை இயற்றினர்.

2. நாயனர் தவத்திலும் தலைசிறந்து விளங்கினர். அவரிடம் பல மாணவர்கள் படித்து வந்தனர். அக்காலத்திலிருந்த வள்ளல்களும் அரசர்களும் அவருக்கு வணக்கம் செலுத்தி வந்தார்கள். அவருடைய புகழ் நாடு எங்கும் பரவியிருந்தது.

3. அக்காலத்தில் காவிரிப்பாக்கம் என்னும் ஊரில் மார்க்கசகாயர் என்ற வேளாளர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் சிறந்த செல்வர். அவருக்கு வாசுகி என்னும் பெயருள்ள மகள் உண்டு. மார்க்கசகாயரின் நன்முயற்சியால் வாசுகியார் கல்வி கேள்விகளில் வல்லவராயினர். தாம் மணக்கப்போகும் கொழுநரையே மகளிர் தெய்வமாகக் கொள்ளவேண்டுமென்றும், அக் கொழுநர் சொற்களைத் தவருது கடைப்பிடித்து ஒழுகுதலே மனைவியரின் கடமையென்றும் அவர் கற்பிக்கப்பட்டிருந்தார். அவர் சிறந்த பண்புகளைப் பெற்று, மணத்திற்கு உரிய பருவத்தை அடைந்தார்.

4. மார்க்கசகாயர் பல வழிகளிலும் ஆராய்ந்து தம் மகளுக்கு ஏற்ற மாணவர் திருவள்ளுவரே என்று உறுதி கொண்டார். இவ்வாறிருக்கையில் ஒரு சமயம் மழையில்லாமையால் காவிரிப்பாக்கத்திலுள்ள விளைநிலங்களெல்லாம் நன்ருக விளையாமற் போயின. திருவள்ளுவர் உள்ளமுவந்து அவ்வூருக்கு ஒரு முறை எழுந்தருளுவாராஞல், விளைவில்லா வயல்களெல்லாம் செழித்து விளங்கும் என்று மார்க்கசகாயருக்குச் சிலர் கூறினர்கள். ஆகவே, அவர் மயிலாப்பூருக்குச் சென்று, அப்பெரியாரைக் கண்டு வணங்கித் தம் ஊருக்கு ஒருமுறை வரவேண்டுமென்று விண்ணப்பிக்க, அவரும் அவ்வாறே மனமிரங்கிச் சென்றனர். அவருடைய திருவடிகள் அவ்வூரிற் பட்டவுடனே

வானம் நல்ல மழையைப் பொழிந்தது. வயல்களி லெல்லாம் நீர் நிரம்பியது.

5. அதைக்கண்டு மார்க்கசகாயர் மனமகிழ்ந்து வள்ளுவரை நோக்கி, 'ஐய, தங்கள் வரவால் நான் அடைந்த பேற்றை என்னென்று சொல்வேன் ? என் நன்றியைத் தங்களுக்குச் செலுத்தும் முறையை அறியேன். எனக்கு வாசுகி என ஒரு மகள் இருக்கின்றாள். அவள் சிறந்த கல்வியும் சீரிய ஒழுக்கமும் பெற்றிருக்கின்றாள். அவள் தங்கள் சொற்களைத் தவறாமல் கடைப்பிடித் தொழுகும் இயல்பு அமைந்தவள். அவளைத் தங்களுக்கே திருமணம் செய்விக்க மனங்கொண்டிருக்கிறேன். அவள் மனமும் அவ்வாறே இருக்கின்றது. தாங்கள் என் வேண்டுகோளை அன்புடன் ஏற்றுக்கொள்ள வேண்டும்' என்று வேண்டினார்.

6. அதற்கு வள்ளுவனார், "தங்கள் மகளின் பெருமைகளைப் பிறர் கூறவும் கேட்டிருக்கிறேன். என்றாலும், நான் கொடுக்கும் மணலை அவள் சமைத்துக் கொடுக்க வல்லவளானால் யான் அவளை மணம் புரிய ஒப்புவேன்!" என்று கூறிச் சிறிதளவு மணலை அள்ளி மார்க்கசகாயர் கையிற் கொடுத்தார்.

7. அம்மணலை அவர் ஏற்று வாசுகியாரிடம் கொடுத்து, "நங்காய், வள்ளுவர் என் வேண்டுகோளுக்கு இரங்கி உன்னை ஏற்றுக்கொள்ள இசைந்துள்ளார். உன் நல்வாய்ப்பை மெச்சுகின்றேன்; ஆனால் அவர் இம்மணலைக் கொடுத்து இதனை நீ சோறாக்கித் தரல்வேண்டும் என்று விரும்புகிறார். இதற்கு நின் கருத்து யாது ?" என்றனர்.

8. அச்சொற்களைக் கேட்ட வாசுகியார், "என் அருமைத் தந்தையீர்! மணாளரின் சொற்படி நடப்பதே மகளிரின் கடமையென்று தாங்கள் எனக்குக் கற்பித்திருக்கின்றீர்களன்றோ ? நான் ஏன் கவலைப்பட வேண்டும் ? அம்மணலைக் கொடுங்கள்" என்று

கூறித் தந்தையை வணங்கி மணலைப் பெற்றுக் கொண்டு அடுப்பை மூட்டி அதனைச் சோருகச் சமைத்துத் தந்தார். நம்பிக்கை யுள்ளவர்களுக்கு அரியது எது? இதைக்கண்ட வள்ளுவர் முதலிய அனைவரும் மிக வியந்தனர். வள்ளுவர் வாசுகியாரின் குணத்தை மெச்சி, அவரை நல்லதொரு நாளில் மணந்துகொண்டார். அவ்விருவரும் மயிலாப்பூருக்கு வந்து மனமொத்து இல்லறம் நடத்தினர்.

*9.* தமக்கு ஒழிந்த வேளைகளில் வாசுகியார் நூற்ற நூலைக்கொண்டு வள்ளுவர் துணிகள் நெய்து, குற்றம் அற்ற அத்தொழிலால் கிடைக்கும் ஊதியத்தைக்கொண்டு, தம் வாழ்க்கையை நடத்தி வந்தார். வாசுகியம்மையார் தம் கணவரைத் தம் உயிர்போலக் காத்து வந்து, அவருக்கு வேண்டிய பணிவிடைகளை மிகவும் கருத்தாகச் செய்து வந்தார். அவ்விருவரும் ஏழைகளுக்கு அன்னமிட்டும், விருந்தினரை வரவேற்றும், துறவிகளைப் போற்றியும் தம் இல்லறத்தை இசைபட நடத்தி வந்தனர்.

*10.* ஒரு நாள் வள்ளுவர் உண்டு கொண்டிருந்த போது வாசுகியார் கிணற்றிலிருந்து நீர்க்குடமொன்றை இழுத்துக்கொண்டிருந்தார். அப்பொழுது வள்ளுவர் விரைந்து தம் மனைவியாரை அழைக்க, அவர் கயிற்றை அப்படியே விட்டு விட்டு வந்து, கொழுநரை யடைந்து அவர் ஏவினதைச் செய்து திரும்பினர். அது வரையில் அவர் விட்டுச் சென்ற குடமும் கயிறும் அவ்வண்ணமே தொங்கிக்கொண்டிருந்தன.

*11.* மற்றொரு நாள் வாசுகியார் தம் கொழுநருக்குப் பணிவிடை செய்துகொண்டிருந்தார். அச்சமயம் வாசலில் ஒருவன் பிச்சைக்கு வந்து நின்றான். அவன் குரலைக்கேட்ட அம்மையார், 'சற்று நேரம் பொறுக்க' என்று சொல்லித் தாம் செய்துவந்த பணியிற் கருத்தாக இருந்தார். வந்தவன் சற்று நேரம் பொறுத்து

மறுபடியும் கூவினான். அதற்குள் வாசுகியும் கை யொழிந்து, சோற்றுடன் வாசலில் வந்தார். தன்னைச் சிறிது பொழுது காக்க வைத்ததற்கு அப்பிச்சைக் காரன் வெகுண்டு அம்மையாரை உற்றுப் பார்த்தான். அதைக் கண்டு அம்மையார் அவனை நோக்கி, "கொக் கென்று நினைத்தனையோ கொங்கணவா?" என்று கூறிச் சோற்றை அவனுக்கிட்டார்.

12. அச் சொற்களைக் கேட்ட இரப்பாளன் திடுக்கிட்டான். ஏனென்றால், அவன் கொங்கணம் என்ற நாட்டிலிருந்து வந்தவனே. அவன் ஒரு காட்டில் நீண்ட காலம் தங்கித் தவம் செய்து அரிய ஆற்றல் களைப் பெற்றிருந்தான். அவ்வாற்றல்களால் அவன் தான் நினைத்ததைச் செய்து முடிக்க வல்லவனா யிருந் தான். அவன் வரும் வழியில் ஒரு மரத்தடியில் தங்கி யிருந்தபோது அம்மரத்திலிருந்த ஒரு கொக்கு அவன் மீது எச்சமிட்டது. உடனே அவன் கோபத்துடன் அதனை உற்றுநோக்க, அவனுடைய தவத்தின் வலிமை யால் அப்பறவை எரிந்து போயிற்று. பிச்சைக்கு வந்த தன்னை வாசுகியார் காக்க வைத்ததால் அவன் கோப மடைந்து, அவருக்குத் துன்ப முண்டாக்க எண்ணியே அவரைச் சினந்து பார்த்தான். ஆனால் அவரை ஒன் றும் செய்ய முடியவில்லை. பெருங் கற்பு வாய்ந்த அவ் வம்மையாரின் முன் அவன் தவ வலிமை பயனற்றுப் போயிற்று. அன்றியும், தான் காட்டில் கொக்கை எரித்த வரலாற்றை அவர் எவ்வாறு உணர்ந்திருக்கக் கூடும் என்றெண்ணி அவன் அஞ்சித் திகைத்தான். அவர் தன்னைச் சபித்து விட்டால் என்னசெய்வது என்றும் அவன் அஞ்சி நடுங்கினான்.

13. அவன் அம்மையாரின் கால்களில் விழுந்து, "தாயே! தங்கள் பெருமையை நான் இப்பொழுதுதான் கண்டேன். கற்புடையவர்களின் கோபத்தை ஒரு வராலும் பொறுக்க முடியாது. தங்கள் மேன்மையை

அறியாமல் நான் செய்த குற்றத்தை மன்னிக்க வேண்டுகிறேன்" என்று கெஞ்சினன். வாசுகியார் அவனை மன்னித்து "மனைவிமார்களுக்குத் தம் கணவரைப் போற்றுதலே பெருந் தவமாகும்; அதன் பெருமையை நீ இன்றேனும் அறிந்துகொள். உன் வலிமையை நினைத்துச் செருக்குக் கொள்ளாதே" என்று கூறி, அவனுக்கு விடை கொடுத்து அனுப்பினர்.

14. இவ்வாறு தம் கற்பால் அரிய ஆற்றல்களைப் பெற்ற அம்மையார் நீண்டகாலம் தம் கணவருடன் கூடி இல்லறம் நடத்தி வாழ்ந்து வந்தார். இவ் வாசுகியாரால் வள்ளுவரின் வாழ்க்கை தலைசிறந்த நலம் பெற்றது. அவ்விருவரின் பெருமையைத் தமிழ் நாட்டினர் இன்றும் பெரிதும் கொண்டாடி வருகின்றனர். மயிலாப்பூரில் அவர்கள் ஆலயம் விளங்குகின்றது. நாள்தோறும் பலர் அங்குச் சென்று திருவள்ளுவரையும் வாசுகியம்மையாரையும் வணங்கி வழிபட்டு வருகின்றனர்.

## அரும்பொருள்

மாண்புடையள் - மாட்சிமையுடையவள். தற்கொண்டான்- தன்னை மனைவியாகக் கொண்ட புருஷன். கொழுநர் - புருஷர். கடைப்பிடி - உறுதியாகக்கொள். உள்ளம் - மனம். பேற்றை - செல்வத்தை. சீரிய - சிறப்பான. வாய்ப்பு - அதிருஷ்டம். வியந்தனர் - அதிசயித்தனர். இல்லறம் - மனைவியும் கொழுநனும் கூடிச் செய்யும் தருமம். இசைபட - புகழ் உண்டாக. ஊதியம் - இலாபம். வெகுண்டு - கோபித்து. இரப்பாளன் - பிச்சைக்காரன். ஆற்றல் - சக்தி. எச்சமிட்டது - மலம் கழித்தது. திகைத்தான் - மயங்கினன். சபித்து - கடிந்து சொல்லி. செருக்கு - கர்வம். கற்புடையவர் - பெற்றோரும் கணவனும் கற்பித்தபடி ஒழுகுபவர்.

1 விடை தருக—

1. வள்ளுவர் யாவர்? அவர் அருமை பெருமை யாது?
2. வாசுகியாரைப்பற்றி அறிவது யாது?
3. மார்க்கசகாயர் மனமகிழ்ச்சிக்குக் காரணம் யாது?
4. அவர் வேண்டுகோள் யாது?
5. வாசுகியார் வள்ளுவரை மணந்தது எவ்விதம்?
6. வள்ளுவர் தம் வாழ்க்கைக்கு மேற்கொண்ட தொழில் யாது?
7. இல்லறமாவது யாது?
8. வாசுகியாரின் இரண்டு அற்புதச் செயல்கள் யாவை?
9. வள்ளுவரின் வாழ்க்கை நலம் சிறந்ததெவ்விதம்?

11 மேலே அரும்பொருளின் கீழ் உள்ளவைகளில் தொடர் மொழிகளை எடுத்துக் காட்டி, ஒவ்வொன்றையும் ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்திடுக.

111 ஒரு வாக்கியத்தின் முக்கிய பகுதிகள் யாவை?

1V இருபொருள்கள் தந்து தனித்தனி வாக்கியங்களில் அமைத்துக் காட்டுக :— நூல், நெய், மகிழ்.

V இப்பாடத்தின் ஒவ்வொரு பிரிவிற்கும் தக்க தலைப்புத் தருக.

V1 எதிர்ச்சொல் தருக :— நல்வாய்ப்பு ; மூட்டி ; விரும்பு.

V11 கீழ்வரும் வாக்கியங்களைச் சேர்த்து ஒரே வாக்கியமாக மாற்றுக :—

சென்னையைச் சார்ந்தது மயிலாப்பூர். அதில் வள்ளுவர் வாழ்ந்தார். அவர் ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் இருந்தார்.

V111 தனித்தனி வாக்கியங்களாகப் பிரித்து அமைக்க :—

வள்ளுவருடைய திருவடிகள் அவ்வூரிற் பட்டவுடனே, வானம் நல்ல மழை பொழிய, வயல்களிலெல்லாம் நீர் நிரம்பியது.

## 3. ஒளவையார் தூது

### (உரையாடல்)

*அன்பறி(வு) ஆராய்ந்த சொல்வன்மை தூதுரைப்பார்க்கு இன்றி யமையாத மூன்று.*

### I

*[காஞ்சியில் ஆண்ட தொண்டமான் படைச் செருக்கால் தகடூரில் ஆண்ட அதியமான்மீது படை செலுத்த முயல்வதை உணர்ந்த அதியமான் அருளு டையவனுதலால் வீணே இரு திறத்திலும் உயிரழிவு நேரும் என்று கவலைகொண்டு தொண்டமானின் படையெடுப்பைத் தடுக்கவல்ல சூழ்ச்சியைக் கருதிக் கொண்டிருந்தான். அவ்வேளையில் அதியமானிடம் ஒளவையார் என்னும் நல்லிசைப் புலமை மெல்லிய லார் வந்தனர்.]*

அதியமான் :—*[எழுந்து] வருக! வருக!! எம்பெரு மாட்டியாரே வருக! வணக்கம்!*

ஒளவையார் :—*வாழ்க! வாழ்க!! அரசே வாழ்க! என்ன, ஏதோ குறைபாடு உடையவர் போல் காண்கிறீர்?*

அதி :—*ஒன்றுமில்லை. தங்கள் நிறைந்த அருள் ஆசி உள்ள வரையில் எனக்கு நேரத்தகும் குறை யாதுளது?*

ஒளவை:—*தங்கள் அழகிய முகக்குறியை நோக்குமிடத் துத் தங்களுக்கு உடல் நலக் குறைவொன்றும் இல்லை! ஆயின், தங்கள் உள்ளத்தில் யாதோ கவலை குடிகொண்டிருப்பதாகத் தோன்றுகிறது.*

அதி :—*ஆம்! கவலை குடிகொண்டுள்ளது உண்மையே!*

ஒளவை :—*அரசே! அக்கவலையின் காரணத்தையான் உணரலாகுமோ?*

அதி :—மூதறிவுடையீர்! அன்பிற் சிறந்த அருட் குண முடைய தாங்கள் உணரலாகாததுமுளதோ?

ஔவை :—ஆயின் அரசே! சொல்லுக.

அதி :—காஞ்சித் தொண்டமான் என்மேற் படை யெடுக்க முயல்வதாக ஒற்றர் மூலம் தெரிய வரு கிறது.

ஔவை :—இதற்காக, மானமிழுக்கா வீரராகிய தாங் கள் கவலையுறலாமா, அரசே!

அதி :—அருளம்மையீர்! போரில் தோல்வி யடை வேன் என்ற அச்சம் எனக்கு ஒரு சிறிதும் இல்லை; இருதிறத்திலும் வீணே உயிரழிவு நேருமே என்ற கவலை தான் எனக்கு!

ஔவை :—ஆம்! தங்கள் அருளுடைமைக்குத் தக்கதே எண்ணுகிறீர்! மேலிட்டு யாது சூழ்ந்துள்ளீர்?

அதி :—அன்புடைய பெரியீர்! தாங்கள்தான் இப் போர் நடக்காதபடி தடுக்க வேண்டும்; தாங்கள் இதற்காக அருள் காட்டி எனக்கு உதவ வேண் டும்.

ஔவை :—அரசராகிய தங்களால் தடுக்க முடியாதது என்னால் எப்படி முடியும்? மேலும் யான் பெண் பால்; அதிலும் கிழவியாயிற்றே!

அதி :—தங்களாலா முடியாது! முடியும். தாங்கள் மனம் உவந்து தொண்டமானிடம் தூது சென்று, இப்போரைத் தடுக்க வேண்டும். பெண் பாலாருக்கே அன்பு கனிந்த உள்ளம் உண்டு. தாங்கள் கல்வி கேள்வி அறிவுகள் நிறைந்துள்ளீர். தங்கள் முதுமை தங்களுக்கு நிறைந்த அனுபவத் தைத் தந்துளது. தங்களுடைய புகழும் பெரு மையும் எங்கும் பரவி யுள்ளது. மேலும் தாங் கள் கடமை யுணர்ந்து, காலம் கருதி, இடம்

அறிந்து எண்ணித் தக்கது உரைக்கும் ஆற்றலுடையீர். ஆகவே, என் வேண்டுகோளைத் தடுக்காமல், தொண்டமானிடம் தூது சென்று இப்போரைத் தடுத்துப் பல உயிரழிவு நேராதபடி அருள் செய்ய வேண்டுகின்றேன். போய் வருவீராக.

ஔவை :—என்னால் முடியத் தகுவது இதுவாயின், யான் எவ்வாறு மறுப்பேன். ஆண்டவன் அருளைத் துணை கொண்டு முயல்வேன். அவர் அருள் புரிக.

அதி:—மிகவும் நன்றி! தங்கள் வழிநடை முதலியவற்றிற்கான உதவிகள் அனைத்தும் செய்விக்க அமைச்சர்களுக்குக் கட்டளையும் அனுப்புகின்றேன். வணக்கம்.

ஔவை :—வாழ்க! வாழ்க!! அரசே! யான் போய் வருகிறேன். தங்கள் கருத்து நிறைவேறுவதாக!

## II

[தன் அரண்மனைப் படைக்கலக் கொட்டிலுக்கு அடுத்த கூடத்தில் அமர்ந்திருந்த தொண்டமானிடம் தடையின்றி ஔவையார் நேரே சென்றனர்.]

தொண்டமான் :—[எழுந்து] எம் தாயே! வருக! வணக்கம், வருக! வருக!!

ஔவை :— வாழ்க! வாழ்க!! அரசே வாழ்க! தாங்கள் நலந்தானே?

தொண் :—தங்கள் ஆசியாலும் ஆண்டவன் அருளாலும் நலமே! தாங்கள் எங்கிருந்து வருகின்றீர்கள்!

ஔவை :—தங்களைப் போலும் என்னிடம் அன்பு பாராட்டும் தகடூர் வள்ளல் அதியமானிடமிருந்து வந்துள்ளேன்.

தோண் :—ஓகோ அதியமானிடமிருந்தா ?

ஔவை :—ஆம் ! ஏன் ?

தோண் :—அவ்வதியமான் சற்றுப் படைச் செருக்குற்று, என்னை இகழ்வதாகக் கேள்வி. தங்களுக்குத் தெரியுமா ? அவன் கொட்டத்தை அடக்கப் படையும் திரட்டி யுள்ளேன்.

ஔவை:—அப்படியா ! எனக்குத் தெரியாது. ஆயின் அதியமான் செருக்குடையவனைத் தங்களைப் பகைத்திருப்பதாக எனக்கு ஒன்றும் புலப்படவில்லை. தங்களை இகழ்ந்தான் என்பது கேள்வி வாயிலாகத்தானே ?

தோண்:—ஆம் ! கேள்வி வாயிலாகத்தான். அவன் இகழ்ந்திருக்கக்கூடும் என்பதை யான் உணர்வேன்.

ஔவை :—அதியமான் இகழ்ந்திருக்கக் கூடும் என்று தாங்கள் ஆராயாமல் உறுதி கொள்வதாயின், யான் மேற்கூற வேண்டுவது என்ன இருக்கின்றது ? காரியம் மிஞ்சிவிட்டது. போகட்டும் ! அதியமானை வெல்வதற்குப் போதிய படை திரட்டி விட்டீரா ?

தோண் :—ஆகா ! திரட்டி விட்டேன். அப்படைக்கு வேண்டிய படைக்கலங் (ஆயுதங்) களைக் காட்டுகின்றேன். வந்து பார்ப்பீராக. (அடுத்துள்ள படைக்கலக் கொட்டிலுக்கு ஔவையாரை அழைத்துச் சென்று) இத்தகைய படைக்கலங்கள் அவனிடம் உண்டா ?

ஔவை :—இல்லை ! அரசே, இல்லை, இல்லை ! தங்களுடைய படைக்கல்ங்கள் எல்லாம் மயிற்பீலி அணியப்பட்டு, மலர் மாலையும் சூட்டப்பட்டுள்ளன ! இவற்றின் காம்புகள் அழகாகச் செய்யப்பட்டுள்ளன ! இவை நெய் பூசப்பட்டு அகன்ற இக்கோயிலில் மிக்க காவலை யுடையன. யாவும்

வரிசைப்பட ஒழுங்காக வைக்கப்பட்டு ஒளிர்கின்றன. இவை இருக்கும் இடத்தினின்று அசைக்கப்படாமல் உள்ளனபோலும் காண்கின்றன. அதியமான் படைக்கலங்களோ, பல



போரில் பல பகைவர்களைக் குத்திக் குத்திப் பக்கமும் நுனியும் சிதைந்துள்ளன. ஆகவே, அவை கொல்லனது சிறிய கொட்டிலில் பண்படுத்தும் படியாக விழுந்து கிடக்கின்றன. அவற்றைப் பண்படுத்துவதில் கொல்லன் கையும் ஓய்வதில்லை. (அதியமான் படைக்கலத்தை இகழ்வது போலும் அவற்றின் பயனைப் புகழ்ந்து, தொண்டமான் படைக்கலத்தைப் புகழ்வது போல இகழ்ந்தனர்.)

தோண் :—(உள்ளம் சிறிது குன்றி) அம்மையீர் ! என்னோடு போரிட வல்ல வீரரும் அங்குள்ளாரோ !

ஔவை :— (புன்சிரிப்புடன்) அரசே ! தாங்கள் போர் செய்ய எண்ணியது என்னே ! அவனுட்டில் பாம்பு போன்ற வீரர் உளர்.

தோண் :—(சிறிது இறுமாந்து), என்ன! என்ன! அவர்கள் அவ்வளவு கோழைகளா ? புற்றில் புகுந்தொளிக்கும் பாம்புபோல் போருக்கு அஞ்சி ஓடி ஒளிவார்களோ ? அதனுற்றான் அதியமானை அஞ்சி என்கிறார்கள் போலும்.

ஔவை :—தாங்கள் கொண்ட கருத்து தவறு, அரசே! அடிக்குங் கோலுக்கு அஞ்சாது சீறி படமெடுப் பாயும் பாம்புக்கு நிகரான தம் உயிருக்கு அஞ்சாத வீரர் பலர் உளர். பாம்பென்றால் படையும் அஞ்சுமல்லவா ? அதுபோல் அவர்கள் முன் எந்தப் படையும் நிற்க அஞ்சும். அதனுற்றான் அவர்கள் தலைவனாகிய அதியமானும் அஞ்சி எனப் பெற்றான்.

தோர்ண்:—(ஐயத்துடன்) அதியமான் படைஞர் அவனிடத்து உண்மை யுள்ளவர்களா ?

ஔவை:—அரசே ! தாங்கள் உண்மை உணர்ந்தால் இவ்வாறு கேட்க மாட்டீர். அவன் நிறைந்த செல்வமுடையனாயின் நாள்தோறும் பலர்க்கும் சிறக்க உண்வும் பொருளும் அளிப்பன். அச் செல்வம் குன்றுமாயின், வறியவர் தலைவனாகி மிகப் பலராகிய அவரிடையில் தானும் ஒருவனாக இருந்து உள்ள சிறு உணவையும் பகிர்ந்து உண்பான். இத்தகைய தலைவனிடத்துப் படைஞர் உண்மையுள்ளவர்களா என்று ஐயப்படலாமோ ?

தொண் :—(நாணமும் அச்சமும் கலந்த நிலையில் சிறிது சாய்ந்து) அப்படியாயின் அதியமானும் ஒரு சிறந்த வீரனோ?

ஔவை :—அதற்கேது ஐயம்?

தொண் :—ஆயின் அருமைத்தாயே! அவன்மீது படையெடுப்பதில் பலன் இல்லையோ?

ஔவை :—ஆம்! யாதொரு நற்பலனும் இல்லை! வீணே பல உயிரழிவுதான் நேரும். போர்துணிதல் அறிவுடைமைக்கு அழகாகாது.

தொண் :—ஆயின், இன்றுடன் அவ்வெண்ணத்தை விட்டேன். அருமைத்தாயாரே! அவனுடன் நட்புக் கொள்ளவும் விழைகின்றேன். தாங்கள் இதற்கு அருள் கூர்ந்து துணை செய்ய வேண்டும்.

ஔவை :—அரசே! தங்கள் அறிவுடைமைக்கும், உயிர்கள் மீதுள்ள அன்புடைமைக்கும் மெச்சுகின்றேன். தாங்களும் அதியமானும் நண்பு கொள்ளற்கு உரியவர்களே! நீவிர் இருவீரும் நண்பர்களாக வாழ்வீர்களாக. நானும் ஆவன செய்வேன். விடை தருவீராக.

தொண் :—அன்புருவாய அம்மையீர்! நன்றி! நன்றி!! தங்கள் அருளுடைமைக்கு மிகவும் நன்றி!

ஔவை :—வணக்கம், வாழ்க! வாழ்க!! அரசே நீடு வாழ்க!

## அரும்பொருள்

சொல்வன்மை - சொல் சொல்லுந் திறம். தூது - ஒருவிஷயத்தைக் குறித்து இரண்டிடத்திலும் ஒன்றுபடக் கூறுதல். இருதிறம் - இரண்டு பக்கம். படையெடுப்பு - போர் செய்யச் சேனை கூட்டிச் செல்வது. நல்லிசை - நல்லறிவு. புலமை - அறிவுடைமை. மெல்லியலார் - மென்மை வாய்ந்த பெண்

பாலர். மூதறிவு - மிகுந்த அறிவு. ஒற்றர் - வேற்றுரில் ஒன்றி யிருந்து விஷயம் அறிபவர். சூழ்ந்து - ஆராய்ந்து. கோயில் - அரண்மனை. இறுமாந்து - கருவித்து. நிகர் - ஒப்பு. ஐயம் - சந்தேகம். விழைகின்றேன் - விரும்புகின்றேன். கூர்ந்து - மிகுந்து.

## பயிற்சி

I விடை தருக.

1. ஔவையார், அதியமான், தொண்டமான் இவர்களுடைய பண்புகளைத் தனித்தனி கூறுக.
2. ஔவையாரின் தூதின் திறமை யாது?

II வாக்கியங்களில் அமைக்க:—
முகக்குறி, ஒற்றர், நேராதபடி, செருக்கு, படைக்கலம்.

III பாம்பு போன்ற வீரர். இத்தொடரில் வீரருடைய பண்புக்கு பாம்பின் குணம் ஒப்பிடப் பட்டுள்ளது. இப்படி ஒப்பிடுவதே உவமையாகும்.

IV இந்தப்பாடத்தில் உள்ள வேறு உவமை ஒன்றை எடுத்து விளக்கிக் காட்டுக.

V பெற்றோர் சொல் கேட்காத உன் நண்பனைத் திருத்தும் முறையில் ஒரு பக்கத்தில் ஒரு உரையாடல் (சம்பாஷணை) எழுதுக.

---

# 4. பரமார்த்த குரு கதை

## ஆற்றைக் கடத்தல் - பாகம்—1

பேதமை என்பதொன்(று) யாதெனின் ஏதங்கொண்(டு)
ஊதியம் போக விடல்

1. அநியாயபுரியிலே 'அஞ்ஞான நிலையம்' என்றொரு மடம் இருந்தது; அந்த மடாதிபதியே பரமார்த்த குரு என்பவர். மட்டி என்றும், மடையன் என்றும்,

பேதை என்றும், மிலேச்சன் என்றும், மூடன் என்றும் ஐந்து சீடர்கள் அவரை அடுத்திருந்தார்கள். அவர்கள் நிழல்போலஅவரை விடாது பின்பற்றித் திரிந்தனர்.

2. ஒருநாள் பரமார்த்த குரு இந்த ஐவரும் தம்மைச் சூழ்ந்து வரப் பயணம் புறப்பட்டுக் கால்நடையாகக் கிராமாதிகளுக்குச் சென்றார். அவர் தாம் சென்ற இடங்களிலெல்லாம் பழைய சீடர்களைக் கண்டு, அவர்களுடைய க்ஷேமலாபங்களை விசாரித்தறிந்து மடத்துக்குத் திரும்பி வந்துகொண்டிருந்தார். அப்போது இராக்காலமாயிருந்தும் வெண்ணிலாவின் உதவியால், சீடரும் அவரும் இளைக்காமலும் வழியில் தங்காமலும் நடந்து வந்தார்கள்.

3. இரவு மூன்றாம் சாமமாயிற்று. ஒரு சிற்றாறு குறுக்கிட்டது. குரு அந்த ஆற்றைக் கடக்க அஞ்சிச் சீடர்கள் ஐவரோடும் அதன் கரையில் தங்கினார். சற்றுப் பொறுத்து அவர் மிலேச்சனை நோக்கி, "இந்த நதி மிகவும் கொடியது; ஒரு சமயம் விழித்திருக்கும்; ஒருசமயம் தூங்கும். ஆகையால் இது விழித்திருக்கையில் நாம் இதனைக் கடப்பது பிசகு" எனக் கூறி அதனுடைய நித்திரையைச் சோதிக்க அவனுக்குக் கட்டளையிட்டார்.

4. அவன் குருமொழியைச் சிரமேற்கொண்டு அங்ஙனமே அதனைச் சோதிக்கச் சென்றான். அவன் தன் கையிலிருந்த சுருட்டுப் பற்றவைக்கும் கொள்ளியைத் தூர நின்றுகொண்டு அந்நதி ஜலத்தில் தோய்த்தான். தண்ணீரிற் கொள்ளி படலும், 'சுறீர்' என்று அது புகைந்தது. அதனைக் கண்டவுடன் அவன் பதறிவிழுந்து பதைத்துத் துடித்துப் பரிதவித்து எழுந்து ஓடி வந்து குருவைக் கண்டு, "ஐயனே, நதியைக் கடக்க இது நல்ல சமயம் அன்று; அது விழித்திருக்கிறது. அதை நான் கொள்ளியால்

தொட்டவுடனே அது, ஒரு கரு நாகம்போலச் சீறிக் கொதித்துக் கரிந்து புகைந்து என்மேற் பாய்ந்து என்னைக் கொல்ல வந்தது; நான் தப்பிப் பிழைத்ததே தம்பிரான் புண்ணியம் என்றான். அதற்குக் குருநாதர் "தெய்வச் செயலைக் கடக்க யாராலாகும்? அது தூங்குமட்டும் நாம் சற்றுப் பொறுப்பதே உத்தமம்" என்று கூறினார். ஆகவே, அவர்கள் அறுவரும் அங்கிருந்த ஓர் அடர்ந்த பூஞ்சோலையில் மறைவாகத் தங்கியிருந்தார்கள்.

5. அங்கே அவர்கள் பொழுது போக்காக அந்த ஆற்றின் விசேஷங்களைக் குறித்துப் பலவாறு பேசிக் கொண்டிருந்தார்கள். அவர்களில் மட்டி என்பவன், "சுவாமி! இந்த ஆற்றின் மோசத்தைப்பற்றியும், தந்திரத்தைப் பற்றியும், கொடுமையைப் பற்றியும், எனது பாட்டனார் சொல்ல நான் பல முறை கேட்டிருக்கிறேன். என் பாட்டனார் ஒரு பெரிய வியாபாரி; ஒருநாள் உப்புப் பொதி ஏற்றின இரண்டு கழுதைகளை ஓட்டிக்கொண்டு, அவரும் அவருடைய கூட்டாளியும் இந்த ஆற்றைக் கடந்து வந்துகொண்டிருந்தார்கள். அப்போது கோடைக்காலம். ஆகையால், நட்டாற்றில் குளிர்ந்த ஜலத்தில் அவர்கள் குளித்துக் கழுதைகளையும் குளிப்பாட்டினார்கள். அவர்கள் அக்கரைக்குப் போனபிறகு, கழுதைகள் பாரமின்றிச் சுளுவாக நடக்கக் கண்டார்கள். உள்ளிருந்த உப்பால் உப்பியிருந்த கோணிப் பைகள் சுருங்கியிருக்கக் கண்டார்கள். அவற்றின் வாய்கள் தைத்தவை தைத்தபடியே இருந்தன. அவைகளின் உள்ளிருந்த உப்பைத் தோலிருக்கச் சுளை விழுங்கி போல, இந்த ஆறு அடியோடு தின்றுவிட்டது. அப்போது அவர்கள் இந்நதியைப்பார்த்து, 'ஓ திருட்டாறே! நீ உப்பைத்தின்ற மயக்கத்தினாலல்லவா! எங்களையும் எங்களுடைய

கழுதைகளையும் தின்னுமல் விட்டு விட்டனே? அந்த மட்டும் நல்ல சகாயம் செய்தனே! தெய்வச் செயலால் நாங்கள் பிழைத்தோம்; தெய்வமில்லாமலா பொழுது போகிறது, பொழுது விடிகிறது! எங்களுக்குக் கெட்டி ஆயுசு' என்று சொல்லிச் சந்தோஷப்பட்டுக் கொண்டு வீடு போய்ச் சேர்ந்தார்கள்" என்று கூறினுன்.

6. பிறகு பேதை என்பவன், "சில வருஷங்களுக்கு முன்னே, நான் சிறியவனுய் இருக்கையில், இந்த ஆறு செய்த தந்திரங்கள் பலவற்றில் ஒன்றைச் சொல்லுகிறேன், கேளுங்கள் சுவாமி! ஒரு நாள் ஒரு நாய் மாமிசத் துண்டைத் தனது வாயிற் கௌவிக் கொண்டு இந்த ஆற்றைக் கடக்க நீந்தி வந்துகொண்டிருந்தது. அது இதன் நடுவில் வருகையில், இது தன்னிடத்திலும் ஒரு பெரிய மாமிசத் துண்டிருப்பதாக அந்த நாய்க்குக் காட்டிற்று. ஐயோ! நாய்க்கு என்ன தெரியும்? மிருகம், பாவம்! அது தனது வாயிலிருந்த துண்டை விட்டு அந்தப் பெரிய துண்டைக் கௌவப்போயிற்று. வாய்த்தவிடும் போய் அடுப்பு நெருப்பும் இழந்தவள்போல், அது ஏமாந்து அக்கரை சென்றது. இப்படி இதன் களவிற்கு அளவில்லை" என்ருள்.

7. இப்படி இவர்கள் பேசிக்கொண்டிருக்கையில் அங்கே ஒருவன் குதிரையேறிவரக் கண்டார்கள். ஒரு சாண் அளவு ஆழமுள்ள தண்ணிரில் கொஞ்சமேனும் அஞ்சாமல், அவன் தன் குதிரைமேலிருந்தபடியே அவ்வாற்றைச் 'சரசர' வென்று கடந்து கடுகிவந்தான். அதைக் கண்ட சீஷர்கள் அதிசயம் அடைந்து, "அடடா, எங்கள் குருமணிக்கும் ஒரு குதிரையிருந்தால் அவரும் அஞ்சாமல் ஆற்றில் இறங்குவாரே! அவரைச் சார்ந்த நாங்களும் அவரோடு பயமில்லாமல் இவ்வாற்றில் இறங்கலாமே! ஒறு சிறு

குதிரை இல்லாததனால் அல்லவா நாங்களும் குருபுங்க வரும், இப்படி இங்கே தியங்கியிருக்க நேர்ந்தது! இனி, எந்த விதத்திலாயினும் ஒரு குதிரை வாங்குவதே உத்தமம் என்று தங்களுக்குள் தீர்மானித்துக் கொண்டார்கள். குருவினிடத்திலும் அதைப் பற்றி அறிவித்தார்கள். அவர், "இப்போது இதைப்பற்றிப் பேசுவதற் பிரயோஜனம் என்ன? நாம் இருக்கும் இந்த ஆபத்திலிருந்து தப்பிப் பிழைத்த பிறகல்லவோ, குதிரை வாங்கப் போகிறோம்! இதைப்பற்றிப் பிறகு பேசிக்கொள்ளலாம். இப்போது பொழுது விடியும் சமயம்; சூரியன் தோன்றப் போகிறான்; நாழிகை ஆகிறது. மடத்திற்குப் போக வேண்டுமே! ஆகையால், ஆற்றின் தூக்கத்தை மறுபடியும் சோதியுங்கள்" என்று சீடர்களுக்குக் கூறினார்.



8. அப்படியே மடையன் சென்று அந்தக் கொள்ளிக் கட்டையை நதியின் தண்ணீரிலே தோய்த்

தான். அதன் நெருப்பு அதற்குமுந்தியே அவிந்து போய் இருந்ததால், ஆற்றில் கொஞ்சமேனும் புகை கிளம் பாதது கண்டு, அவன் அதிக சந்தோஷமடைந்து, ஓடி வந்து குரு முதலியோர்களை நோக்கி, "இதுதான் நல்ல சமயம்! இச் சமயம் தப்பினால் வேறு சமயம் கிட்டாது. எல்லோரும் சீக்கிரம் எழுந்து வாருங்கள்! சந்தடிபண் ணாதீர்கள்; பேசப்படாது; பேச்சுக் குரலே கேட்கப் படாது. ஆற்றுக்கு நல்ல தூக்கவேளை; இப்போது நமக்குக் கொஞ்சங்கூடப் பயம் இல்லை" என்றான். இந்த நல்ல சங்கதியை மடையன் சொல்லக் கேட்ட மற்றவர்களெல்லாரும், உடனே ஒருமிக்க எழுந்து வாயைத் திறவாமல் ஊமைகள் போல ஒருவரோ டொருவர் சைகை செய்து பேசிக்கொண்டு, ஆற்றில் இறங்கினார்கள். ஆற்றில் அலை ஓசை கிளம்பாதபடி, அவர்கள் தமது கால்களைத் தூக்கித் தூக்கி ஒவ்வோ ரடியாகத் தண்ணீர்க்குள் வைத்து, ஊன்றி ஊன்றி மனம் திடுக்கிட்டுப் பதைபதைக்க ஆற்றைக் கடந்து அக்கரை ஏறினார்கள்.

9. கரை ஏறின உடனே அவர்கள், தமது பழம் பாட்டை மறந்து சந்தோஷத்தால் தலைகால் தெரியா மல் கூத்தாடினார்கள். அப்போது மூடன் அவர்களை நோக்கிச் "சந்தோஷப்படுவது ஒருபுறம் இருக்கட்டும்; நாமெல்லாம் சரியாய் வந்து சேர்ந்தோமா? எண்ணிப் பார்த்தாலல்லாவோ தெரியும்?" என்று தன்னைக் கூட்டாமல் விட்டு மற்றவர்களை எண்ணினான். அறு வரில் ஒருவர் குறையக் கண்டான்; பயந்தான்; "அப்பப்பா! அம்மம்மா! ஐயையோ! ஐவர் இருக் கிறோமே! அறுவரில் ஒருவன் ஆற்றோடு போய்விட் டானே!" என்று குருவைப் பார்த்துக் குழறிக் குழ றித் தேம்பி அழுதான். அதைக்கண்ட குருமூர்த்தி அவனை, "அழாதே! என்ன செய்யலாம்! ஈசன் கட்

டனுக்கு எதிர் உண்டா?" என்று கையுயர்த்தி, எல்லோரையும் வரிசையாய் நிறுத்தி, ஒருமுறை, இருமுறை மும்முறை தமது கைவிரலை நீட்டிச் சுட்டிச் சுட்டி எண்ணி எண்ணிக் கணக்குப் பார்த்தார். சீடனைப்போலவே குருவும் தம்மை நீக்கி எண்ணினர்; ஆகையால் ஐவரே இருக்கக் கண்டார். என்ன செய்வார்! அவர் மூடனை நோக்கி, "ஆம், ஆம்! அப்பா! நீ சொன்னது சரியாயிருக்கிறது. ஐவரே இருக்கின்றோம்; அறுவரில் ஒருவனை ஆறு விழுங்கி விட்டது" என்று சொல்லி விசனப்பட்டார். பிறகு, மட்டி, மடையன், பேதை, மிலேச்சன் ஆகிய நால்வரும் தனித்தனி எண்ணிப் பார்த்தார்கள். அவனவனும் தன்னை நீக்கி எண்ணினன். ஆகையால் ஐவரே இருந்தார்கள். ஆறும் பேரைக் காணமல், அறுவரில் ஒருவனை ஆறு விழுங்கி விட்டதென்று அவர்கள் தீர்மானித்துக் கொண்டார்கள்.

## அரும்பொருள்

பாமார்த்த குரு - மேலான பொருளை நாடும் குரு.
அஞ்ஞானம் - அறியாமை. நிலையம் - இருப்பிடம்.
கிராமாதிகள் - கிராமம் முதலியவை. வகித்து - தாங்கி.
பரிதவித்து - துன்புற்று. மதக்கம் - மயக்கம்.
உகந்த - விரும்பிய. புங்கவர் - உயர்ந்தவர்.
தியங்கி - மயங்கி. பழம்பாடு - பழைய கஷ்டம்.

## பயிற்சி

1. விடை தருக.

   1. பரமார்த்த குருவின் ஊரும், மடமும், செயலும் யாவை?
   2. அவருடைய சீடர்கள் யாவர்?
   3. மிலேச்சனுடைய அறியாமை யாது?
   4. மட்டி கூறிய ஆற்றின் மோசம் யாது? விளக்குக.

5. ஆற்றைப்பற்றிப் பேதை கூறிய கதை யாது?
6. சீடர்கள் தங்கள் குருமணிக்குக் குதிரை ஒன்று இருக்க வேண்டும் என்றதேன்?
7. மடையனுடைய மடத்தனம் யாது?
8. மூடனுடைய மூடச்செய்கை யாது?
9. பரமார்த்த குருவும் பரம முட்டாள் என்பது எவ்வாறு பொருந்தும்?

11 "தப்பிப் பிழைத்தது தம்பிரான் புண்ணியம்." இது ஒரு பழமொழி. யாராவது தாங்கள் ஆபத்திலிருந்து தப்பிப் பிழைக்கும்போது கடவுள் அருளால் பிழைத்ததாகப் பெரியோர் இப்பழைய மொழியை கூறுவது வழக்கம்.

1. இதுபோலும் பழமொழிகள் பல உண்டு. இந்தப் பாடத்தில் வரும் பழமொழிகளை எல்லாம் சொல்லுக.
2. யாதாயினும் இரண்டு பழமொழிகளை இரண்டு வாக்கியங்களில் தக்கபடி அமைத்துக் காட்டுக.

111 இப்பாடத்தில் வரும் உவமைகளை எடுத்து விளக்குக.

1V இப்பாடத்தின் ஒவ்வொரு பிரிவுக்கும் தலைப்புத் தருக.

1. இதில் வந்துள்ள அடுக்குத்தொடர் இரட்டைக் கிளவிகளை எடுத்துக் காட்டுக.
2. அவற்றைத் தனித்தனி வேறு சிறு வாக்கியங்களில் அமைத்துக் காட்டுக.

V1 பிரித்துக் காட்டுக:—

விசாரித்தறிந்து, நட்டாறு, கௌவப்போயிற்று, ஒருவரோடொருவர்.

V11 எதிர்ச்சொல் தருக:—

நிழல், சிற்றூறு, தூங்கும், பிழைத்தது, உத்தமம், இறங்கினார்கள், சந்தோஷம்.

# 5. பரமார்த்த குரு கதை

## ஆற்றைக் கடத்தல்

### பாகம்— II

1. குருசுவாமி, அலறி அலறித் தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தார். குரு அழ ஆரம்பிக்கவே, சீடர்கள் "கூ, கூ" என்று கூச்சலிட்டுப் பிரலாபித்தார்கள். எல்லாரும் ஒன்று சேர்ந்து, அழுதுகொண்டே ஆற்றை நோக்கி "ஓ, கள்ள நதியே! கொடும்பாவியாறே! கொலைகார நதியே! 'கொலை', களவு, கள், காமம், குருநிந்தை' யென்னும் பஞ்சமா பாதகங்களைப் பறக்கடித்து, அதனால் சாந்தமே ஒருருவெடுத்தாற் போன்ற எமது பரம குருநாதராகிய பரமார்த்த குருவினிடத்திற் பக்தி மிகுந்த சீடனை ஒரு கணற்போதிற் கொள்ளை கொண்டாயே! உனது களவே களவு! இவ்வளவு சூது மனிதர்க்கும் கிடையாது! வாயின்றி வயிறின்றிக் காலின்றிக் கையின்றி இருந்த இடத்தில் இருந்தபடியே இத்தனைத் தந்திரமாக உளவறிந்து களவு புரிந்து உன் பசியைத் தணித்துக் கொண்டாயே; நீ பழங்கள்ளன். உனது களவின் உளவை அரசன் அறிந்து, உனக்கும் எங்களைப் போல் உடம்பிருந்தால் கடுந்தண்டனை விதிப்பான்! உனது திருட்டளவு இதுவரையில் அகப்படாமலே நீ தப்பித்துக் கொள்கின்றாய்! உனது மனம் என்ன, கல்லோ! இரும்போ! மண்ணாங்கட்டியோ! அல்லது வயிரமோ! நீ எத்தனை நாளைக்கு வாழப்போகிறாய்! திருட்டுப் பிழைப்பும் ஒரு பிழைப்பா! 'பலநாள் திருடன் ஒரு நாளைக்ககப்பட்டுக் கொள்வான்' என்பதறியாயா? உனது கள்ள உள்ளமே உன்னை வறளச் செய்கிறது. இல்லாவிட்டால், நீ என்றைக்கும் ஒரு விதமாக அலைபுரண்டோடி நீர் நிரம்பி யிருக்கமாட்டாயா! உனது ரூபம் ஜலரூபம்.

ஆனாலும் பிறந்த இடம் கல்லல்லவா? நீ புகுந்த இடம் மண்ணல்லவா! கல்லைப் போலக் கடினமாகவும் மண்ணைப் போலப் பசையற்றும் உள்ள உனது வஞ்ச நெஞ்சமே நெஞ்சம்; உனக்கு வருவது பஞ்சம்; உனது உருவெல்லாம் நஞ்சம்" என்று ஆற்றை வாயில் வந்தபடியெல்லாம் வைது பித்தர்களைப் போலப் பேசிக்கொண் டிருந்தார்கள். அது வரையில், ஆற்றோடு போனவன் இன்னானென அவர்களில் ஒருவனும் அறியவில்லை; அவன் யாவன் எனவும், இன்ன பேர் உடையான் எனவும், அவர்கள் தெரிந்து கொள்ளவுமில்லை.

2. அந்தச் சமயத்தில் வழிப்போக்கன் ஒருவன் அங்கு வந்து அவர்கள் படுந்துயர் கண்டு பரிதாபங் கொண்டு "ஏனையா வருந்துகிறீர்கள்? உங்களுக்கு என்ன குறை நேரிட்டது? யாராவது இறந்தார்களா? சொல்லுங்கள்" என்று கேட்டான். அதற்கு அவர்கள், நடந்த விருத்தாந்தத்தை விபரமாய்க் கூறினார்கள். அவன் அவர்கள் முழுமூட சிரோமணிகள் என்றறிந்து கொண்டு "அடடா! அது இலேசான காரியம் அன்று; ஆற்றோடு போனவனை மீட்டுக் கொண்டு வருவதென்றால் சாமானியமா? என்னைப் போல் வல்லவன் முனைந்தாலன்றி மற்றொருவரால் ஆகிற காரியமா அது? ஆகாதாகாது! நானோ, மந்திர வித்தையில் மகா நிபுணன்! தந்திர வித்தையில் சாமர்த்தியக்காரன். மந்திர வித்தை யான் சொன்னபடிக்கு ஆடும்; அதர்வண வேத மந்திரக்காளி நான் சொன்னபடி கூத்தாடுவாள்; குட்டிச் சாத்தான் என்னைக் கண்டவுடன் குட்டிக் கரணம் போடுவான்; காட்டேரி, முனியப்பன், மோகினி, யட்சணி முதலிய தேவதைகள் என்னைக் கண்டவுடன் சலாம் செய்து எனக்கெதிரில் ஒதுங்கி நின்று நான் இட்ட வேலையைத் திட்டமாய்ச் செய்யும். எனக்கு நீங்கள் நல்ல வெகுமதி செய்யச்

சம்மதித்தால் எனது வல்லமையை இப்போதே காட்டுகிறேன். ஆற்றோடு போனவனை அரைநொடியில் வரவழைக்கிறேன்; என் திறமையைப் பாருங்கள்" என்றான்.

3. உடனே குருநாதர், கப்பல் கவிழ்ந்து ஜலத்தில் அலையும் ஒருவன் கரையைக் கண்டது போல மனமகிழ்ந்து, அவனை நோக்கி, "அப்பா! வழுக்கி விழுகையில் எங்களுக்கு ஊன்றுகோல் போலக் கோலுங் கையுமாய்ப் புண்ணியவான் நீ, எங்கள் குல தெய்வம் போல் எங்கிருந்து வந்தாயோ! தெய்வமே உன்னை இங்கழைத்து வந்துவிட்டது. நீ செய்யப் போவது அசாத்தியமான பெரிய காரியம். நாங்களோ இப்படி அப்படி ஏழைகள் அல்லர்; ஏழைகளில் முதன்மையானவர்கள். உனது காரியத்தின் அருமை பெருமை அறிந்து, அதற்கு ஈடாக நாங்கள் உனக்கு என்ன வெகுமதி செய்யப் போகிறோம். உன் பிள்ளை குட்டிகளுக்குப் புண்ணியமாகும். எப்படியாவது உன் மனம் இரங்கி ஆற்றோடு போனவனை நீ வரவழைத்துத் தந்தால் உன்னைக் கையெடுத்துக் கும்பிடுவோம். 'நன்றி மறவேல்' என்றபடி நீ செய்யும் நன்றியை நாங்கள் சாகுமட்டும் மறக்க மாட்டோம். எங்கள் வழிச் செலவுக்கு நாற்பத்தைந்து பணம் முன்றானையில் முடிந்து வைத்துக் கொண்டிருக்கிறோம்; வேண்டுமானால், அதை உனக்குக் கொடுத்துவிடுகிறோம். கொஞ்சம் தயவு செய்ய வேண்டும்" என்றார்.

4. அதற்கவன் சம்மதித்தான்; தன் கையிற் பிடித்திருந்த நீண்ட தடியை அவர்களுக்குக் காட்டினான். அது உருண்டு வழுவழுப்பாய் உலக்கைப் பருமனுக்குக் கொஞ்சம் குறைந்திருந்தது. அவன் அவர்களை நோக்கி, "நான் சொன்ன மந்திர ஜாலவித்தை இந்தச் சொக்குமாந்தடியில்தான் இருக்கிறது. நீங்கள் அனைவரும் வட்டவடிவமாக நின்று குனிந்து கொள்ளுங்கள். நான் உங்களுக்கு மத்தியில் இந்தத்

தடியுடன் நின்று, உங்கள் ஒவ்வொருவர் முதுகிலும் ஒவ்வோரடி கொடுக்கிறேன் ; அதனை வாங்கிக்கொண்டு அவனவனும் அவனவன் பேரைச் சொல்ல வேண்டியது ; நான் கணக்கெண்ணி ஆற்றோடு போனவனொடு ஆறுபேரைக் காட்டுகிறேன் " என்றான். அதற்கவர்கள் சம்மதித்து அங்ஙனமே வட்டமாய் நின்றார்கள்.

5. மந்திர வித்தைக்காரன் அவர்களுக்கு இடையில் நின்று, தன் கைத்தடியால் ஓங்கிக் கொஞ்சமேனும் அஞ்சாமல், குருவின் நடுமுதுகில் நன்றாய் உறைக்க ஓர் அடி கொடுத்தான். அவர், " அப்பப்பா! போதும் போதும் ; நான் தான் பரமார்த்த குரு " என்றார். மந்திரக்காரன் 'ஒன்று' என்று கணக்காக்கினான். மறுபடியும் அவன் சிறிதும் பின் வாங்காமல், மட்டியின் நடுமுதுகில் உறைப்பாக ஓர் அடி அடித்தான். அவன், " ஐயையோ ! முதுகு பிளந்து போச்சே ! போதுமப்பா ! போதும் ; நான் தான் மட்டி " என்றான். மந்திரக்காரன் 'இரண்டு' என்று கணக்கேற்றினான். திரும்பவும் அவன் தைரியமாக மடையன் நடுமுதுகில் உறைக்க ஓர் அடி படாரென்றடித்தான். அவன் 'அம்மம்ம ! முதுகு கிழிந்ததே ! நிறுத்தப்பா ! நிறுத்து ; நான் தான் 'மடையன்' என்றான். மந்திரக்காரன் 'மூன்று' என்று கணக்கேற்றினான். இன்னும் அவன், அதிக தைரியமாகப் பேதையின் நடு முதுகில் உரமாக ஓர் அடி படீர் என்றடித்தான். அவன், " ஹரி! ஹரி! போதும், போதும் ; நோகுது ; முதுகு போகுது, போகுது! நான் தான் பேதை" என்றான். மந்திரக்காரன் 'நான்கு' என்று கணக்கேற்றினான். பின்னும் அவன் சற்றும் பயப்படாமல், மிலேச்சன் நடுமுதுகில் நன்றாய்ப்படும்படி ஓர் அடி கொடுத்தான். அவன் " சிவ சிவா ! முதுகு பிளந்தது ; போதும், போதும். ஒன்றே போதும், நான் தான் "மிலேச்சன்" என்றான் ; மந்திரக்காரன்

'ஐந்து' என்று கணக்கேற்றினன். கடைசியாய் அவன், மிகவும் உக்கிரமாக, மூடன் முதுகில் உரைக்கும்படி ஓர் அடி படார் என்றடித்தான். அவன் "ஐயையோ! என் முதுகு போச்சே; முதுகு போச்சே! போதும்! போதும்! ஒன்றே போதும், நான்தான் மூடன்" என்றான். மந்திரக்காரன், 'ஆறு' என்று கணக்கேற்றினன். எல்லோரும் அதிசயமடைந்து, தங்களில் ஒருவனும் குறையாமல் இருக்கக் கண்டார்கள்; அவர்கள் அந்த மந்திரக்காரனை வாழ்த்தி மெச்சித் துதித்து அவனுக்குத் தாங்கள் சொன்னபடி பணத்தை அவிழ்த்துக் கொடுத்துவிட்டுப் போனார்கள்.

## அரும்பொருள்

வறள - வற்ற. படுதுயர் - மிக்கதுன்பம். பரிதாபம் - இரக்கம். நேரிட்டது - உண்டானது. முனைந்தால் - முன் வந்தால். நிபுணன் - வல்லவன்.

## பயிற்சி

1 விடை தருக:—

1. குருவும் சீடரும் ஆற்றை வைததைச் சுருக்கிக் கூறுக.
2. வழிப்போக்கன் குரு சீடர்களை மூட சிரோமணிகள் என்று எவ்வாறு அறிந்தான்?
3. ஆற்றோடு போனவனை மீட்டுக் கொடுக்கக் கூறிய ஒப்பந்தம் யாது?
4. வழிப்போக்கன் ஆறுபேரைக் காட்டியது எப்படி?

11 1. இப்பாடத்தில் வரும் பழமொழிகளை எடுத்துக் காட்டுக.

2. இதில் உள்ள உவமைகளை எடுத்து விளக்கிக் காட்டுக.
3. அந்தப் பழமொழிகளையும், உவமைகளையும் தனித்தனியாகச் சொந்த வாக்கியத்தில் அமைத்துக் காட்டுக.

111 இதில் வரும் இரட்டைக் கிளவிகளையும் அடுக்குத் தொடர்களையும் தனித்தனி வாக்கியத்தில் அமைக்க.

IV இதில் உள்ள ஒவ்வொரு பிரிவுக்கும் தலைப்புத் தருக.

V பிரித்துக் காட்டுக :—

ஒருரு, உளவறிந்து, பசையற்று, வரவழை, அவனவன்

VI 'சலாம்' இது இந்துஸ்தானிச் சொல். ஆகவே இது திசைச் சொல். இதுபோல் இரண்டு சொல்லுக.

---

## 6. இராஜராஜேசுவரம்

*தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்*
*தோன்றலில் தோன்றாமை நன்று.*

1. ஒரு நாட்டின் மேன்மையை அறிவதற்கு அந்நாட்டிலுள்ள கட்டிடங்கள் சிறந்த கருவிகளாகும். தமிழர்கள் மிகப் பழைய காலம் முதற்கொண்டு கட்டிடம் கட்டுவதில் கைதேர்ந்தவர்களாக இருந்து வந்திருக்கிறார்கள். ஏறக்குறைய ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முன்பு, காவிரிப்பூம்பட்டினம், மதுரை, வஞ்சி, காஞ்சி போன்ற நகரங்களிலிருந்த அரண்மனைகளையும், கோயில்களையும், வீடுகளையும் பற்றி அக்காலத்தில் எழுதப்பெற்ற தமிழ் நூல்கள் விளக்கமாய்க் கூறியுள்ளன. ஆனால், அவற்றுள் பெரும்பாலானவை இப்பொழுது காணப்படவில்லை. ஏனென்றால் அக்காலக் கட்டிடங்கள் எல்லாம் செங்கற்களாலும் மரத்தாலுமே கட்டப்பட்டவை.

2. ஆனால் கி. பி. ஏழாம் நூற்றாண்டு முதல் கருங்கல்லைக் கொண்டு கட்டிடம் கட்டும் வழக்கம் தமிழ்நாட்டில் ஏற்பட்டது. அத்தகைய கட்டிடங்கள் அழியாமல் நீண்ட காலம் நிற்கும் தன்மையுள்ளன. இப்பொழுது தென்னிந்தியாவில் காணப்படும் பழங் கட்டிடங்களுள், பலவகைகளிலும் சிறப்பானது தஞ்சாவூரிலுள்ள இராஜராஜேசுவரம் என்ற சிவபிரான் கோயிலே ஆகும்.

3. ஏறக்குறைய ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னே தஞ்சாவூரில் இராஜராஜ சோழன் என்ற அரசன் ஆண்டு வந்தான். அவன் வீரம், கல்வி, கொடை முதலிய குணங்களில் மேம்பாடடைந்திருந்தான். அவன் பல பகைவர்களையும் வென்று தன் நாட்டை மிகப் பெரியதாக்கிக் கொண்டான். அவன் இருபத்தொன்பதாண்டுகள் முடிசூடி வாழ்ந்தான். அவன் சிறந்த சிவபக்தன். அவன் தன் வெற்றிகளுக்கு அறிகுறியாகச் சிவபிரானுக்கு மிகப் பெரிய கோயிலொன்றைத் தஞ்சையிற் கட்டவேண்டுமென்று எண்ணி, அதற்கு வேண்டிய எல்லாவற்றையும் சேகரிக்கத் தொடங்கினான். அக்கோயிலைக் கட்ட அவனுக்கு ஆறு ஆண்டுகள் பிடித்தன. அதற்குத் தன் பெயரே அமைய 'இராஜராஜேசுவரம்' என்ற பெயரையிட்டான்.

4. தஞ்சைக்குச் சென்றால், அக்கோயில் சிவகங்கைக் கோட்டையின் தென் பாதியிலிருப்பதைப் பார்க்கலாம்.



5. கோட்டையைச் சூழ்ந்துள்ள அகழியையும் சுவரையும் கடந்து உட்சென்று 'கேரளாந்தகன்'

என்னும் பெயருள்ள முதற் கோபுரத்தைத் தாண்டிச் சிறிது அப்புறம் சென்றால், இராஜராஜன் திருவாசல் என்ற இரண்டாம் கோபுரத்தை அடையலாம். அதனையும் தாண்டினால், ஏறக்குறைய ஐந்நூறடி நீளமும் இருநூற்றைம்பதடி அகலமுமுள்ள ஒரு பெரிய முற்றம் காணப்படும். அதையும் தாண்டி அப்பாலே சென்றால், ஒரு பெரிய மேடையின்மீது ஒரு பெரிய நந்தியின் உருவம் சுவாமியை நோக்கிப் படுத்திருக்கும் நிலையில் அமைந்திருப்பதைக் காணலாம். அஃது ஒரே கல்லில் செதுக்கப்பட்டிருக்கிறது. அது பன்னிரண்டடி உயரமும், பத்தொன்பதரை அடி நீளமும், எட்டேகால் அடி அகலமுமுள்ளது. இந்தியாவிலுள்ள நந்திகளுள் இது இரண்டாவது பெரிய நந்தி என்பர்.

6. கடவுள் எழுந்தருளியிருக்கும் இடம் ஒரு பெரிய விமான வடிவமாக அமைக்கப்பட்டுள்ளது. இவ்விமானத்தில் ஏறிக் கடவுளின் திருமுன்பை அடையத் தெற்குப் புறத்திலும் இரண்டு படிக்கட்டுகள் இருக்கின்றன. இவற்றைத் தவிர, சுவாமிக்கு நேர் எதிராகவும் நேரான படிகள் இருக்கின்றன.

7. கோயிலின் நீளம் 793 அடி; அகலம் 397 அடி. கடவுள் எழுந்தருளியிருக்கும் கருப்பக்கிருகத்துக்கு மேலே உள்ள விமானம் 216 அடி உயரமுள்ளது. அது சதுர வடிவமான பதின்மூன்று கோபுர மாடிகளைக் கொண்டிருக்கிறது. இம்மாடிகளுக்கு மேலே 80 டன் நிறையுள்ள ஒரு சதுரக்கல்லை அமைத்து, அதன் மேல் ஸ்தூபிக் குடத்தை வைத்திருக்கிறார்கள். அதன் அளவு $25\frac{1}{2}$ அடி சதுரம். இவ்வளவு பெரிய கல்லை அக்கோபுரத்தின் மேலே ஏற்றுவதற்கு நான்கு மைல்களுக்கு அப்பாலுள்ள ஓரிடத்திலிருந்து சாரம் கட்டினார்கள் என்று சொல்லப்படுகிறது. அந்த இடம் இப்பொழுது சாரப்பள்ளம் என்ற பெயரைப் பெற்றிருக்கிறது.

8. இக் கல்லைப்பற்றி ஒரு கதையுண்டு. சிற்பிகள் ஓயாமல் இவ்விதமான வேலையைச் செய்து வந்த போது, அழகி என்ற பெயரையுடைய ஒரு முதியாள் அச் சிற்பிகளுக்கு உணவு, சிற்றுண்டி, தண்ணீர் முதலியவற்றை அன்புடன் கொடுத்து வந்தாள். அப் பெரிய கோயிலுக்குத் தானும் ஏதாவது ஒரு பொருளைக் கொடுக்கவேண்டுமென்று அவள் விரும்பினாள். அவள் வீட்டில் பெரியதொரு கருங்கல் இருந்தது. அதை யெடுத்து விமானத்தில் தகுந்ததோரிடத்தில் வைக்க வேண்டுமென்று அவள் சிற்பிகளைக் கேட்டுக் கொண்டாள். அதற்கிணங்கி அவர்கள் அக் கல்லைச் செதுக்கி ஸ்தூபிக்குடம் வைப்பதற்கு அடித்தளமாக அமைத்துக் கொண்டார்கள்.

9. ஒரு நாள் சிவபெருமான் அரசனின் கனவில் தோன்றி, "அம்மையார் நிழலில் யாம் அமர்ந்துள்ளோம்" என்று கூற, அரசன் திடுக்கிட்டு உண்மையைக் கேட்டு அறிந்துகொண்டான். அக் கிழவி கடவுளிடம் வைத்த அன்பின் சிறப்பைக்கண்டு அரசன் வியந்து அவள் பெயரால் ஒரு குளத்தையும் தோட்டத்தையும் அமைத்து வைத்தான் என்றும் கூறுவர்.

10. விமானத்திற் பல சோழமன்னர்களின் உருவங்கள் கல்லில் செதுக்கப்பட்டுள்ளன. இராஜ ராஜனுக்குப் பின் வந்த தஞ்சாவூர் மன்னர்களும் தத்தம் உருவச் சிலைகளை அங்கே அமைத்துள்ளனர். இவ் விமானம் மிகச் சேய்மையிலுள்ளவர்களுக்கும் பெருமிதமான தோற்றத்துடன் காட்சியளிக்கின்றது. இராஜ ராஜனின் புகழ் என்றும் நிலை நிற்கும்படி அவன் கட்டி வைத்த இக் கோயில் தமிழரின் கலைச் சிறப்பை நன்கு விளக்குகின்றது. இதற்கு அரசன் 'தக்ஷிணமேரு' என்று அமைத்த பெயர் மிகப் பொருத்தமானதே.

11. இவ்விமானத்தின் கீழ் அமைந்துள்ள இலிங்கம் மிகப் பெரிய உருவத்தைப் பெற்றதாயிருக்கிறது. கடவுளின் பெயர் இராஜராஜேசுவரமுடையார் என்பது. பிரகதீசுவரர், பெருவுடையார் என்ற பெயர்களும் அவருக்கு உண்டு.

12. கோயில் கட்டி முடிந்தவுடன் அங்கு எழுந்தருளியுள்ள கடவுளரின் திருவுருவங்களைக் கெட்டியாய் அமைக்கும்படி மருந்து சாத்துவது வழக்கம். இராஜராஜேசுவர லிங்கத்திற்கு இவ்வாறு மருந்து சாத்தும்போது அம்மருந்து எவ்வளவு முயன்றும் கெட்டிப்படாமல் போயிற்று. அரசன் அதைக்கண்டு மிகவும் வருந்தினான். அச்சமயத்தில் கடவுள் அசரீரியாக, "கருவூர்த் தேவரை வரவழைத்தால் இக்காரியம் நிறைவேறும்" என்று கூற, அரசன் அவ்வாறே அவரை அழைக்க ஏற்பாடு செய்தான்.

13. கருவூர்த்தேவர் என்பார் அக்காலத்தில் வாழ்ந்த ஒரு முனிவர். அவர் தம் தவ வலிமையால் பிறரால் செய்யமுடியாத காரியங்களைச் செய்து முடிக்கத் தக்க வலிமை பெற்றிருந்தார். அரசன் அவரை அழைத்து இலிங்கத்தை நிறுவச்செய்து தரவேண்டுமென்று விண்ணப்பித்தான். தேவர் தம் வாயின் தம்பலத்தை மருந்தின்மீது உமிழ, அது பொன்னை உருக்கி வார்த்தது போலாகி, கெட்டிப் பட்டு இலிங்கத்தை அசையாமல் நிற்கச் செய்தது.

14. இக்கோயிலில் இராஜராஜன் வேறு பல தெய்வங்களுக்கும் தனித்தனியே இடங்கள் அமைத்து, அவர்களின் வடிவங்களையும் நிலைநிறுத்தினான். அளவு கடந்த திருவணிகளை அக்கோயில்களுக்கென்று அவன் கொடுத்தான். வழிபாடு முதலியன செய்வதற்கு வேண்டிய பொருள்களையெல்லாம் அவ்வப்போது கோயிலுக்குக் கொடுத்து வருவதற்கும் அவன் ஏற்பாடு செய்தான். தமிழிலும் வடமொழியிலும் தேர்ந்த அறிஞர்களை அவன் அமைத்துக் கோயிலில்

நாள் தோறும் வேதம், தேவாரம் முதலியவற்றை ஓதிவரத் திட்டப்படுத்தினன். ஆடல், பாடல்களில் தேர்ந்த பலர்க்கு அவன் கோயிலுக்கு அருகாமையில் வீடுகளைக் கட்டிக் கொடுத்து, அவர்கள் வழிபாட்டு வேளைகளில் கோயிலுக்குப் பணிவிடை செய்யவும், பாடவும், ஆடவும் கட்டளையிட்டான்.

15. மாதந்தோறும் திங்கள் விழாவும், ஆண்டு தோறும் வைகாசி மாதத்தில் பெருவிழாவும் நடத்த அவன் விதிகளை வகுத்தான். திங்கள் விழா அரசனுடைய பிறந்தநாளாகிய சதய நாள்தோறும் நடப்பதாகும். வைகாசிப் பெருவிழாவில் 'இராஜ ராஜேசுவர நாடகம்' என்ற ஒரு நாடகமும் கோயிலில் நடத்தப்பட்டு வந்தது.

16. இராஜராஜனுக்குப் பின் வந்த மன்னர்களும், இக்கோயிலைத் தம் கண்போல் காப்பாற்றி வந்தனர். தக்ஷிண மேரு விமானத்தின் வடமேற்குப் புறத்தில் முருகப் பிரானுக்காக ஒரு கோயில் கட்டப்பட்டிருக்கிறது. இது தஞ்சையில் அரசாண்ட நாயக்கர் வமிசத்து மன்னர் ஒருவர் காலத்திற் கட்டப்பட்டது. இதிலுள்ள சிற்பவேலைகள் மிகத் திறமையானவை. இக்கோயில் ஓர் இரதம்போல் அமைக்கப்பட்டுள்ளது. இதைப்பற்றியும் ஒரு வரலாறு கூறப்படுகிறது.

17. சிறந்த சிற்பி ஒருவன் தக்ஷிணமேருவில் மிகவும் அருமையாய்த் தன் வேலையைச் செய்து கொண்டிருந்தான். அவனுடைய அடைப்பைக்காரன் கீழே நின்றுகொண்டு வெற்றிலையை மடித்து அவனுக்குக் கொடுத்துக் கொண்டிருந்தான். சிற்பி வேலையில் கண்ணுங் கருத்துமாய் இருந்ததால் தன் ஆளைப் பார்க்காமல் அவன் கொடுத்து வந்த வெற்றிலைச் சுருளை மட்டும் வாங்கித் தின்று வந்தான். சிற்பியின் வேலைத் திறமையை மெச்சி அரசன் ஒருநாள் அடைப்

பைக்காரனை இரகசியமாக அப்புறப்படுத்திவிட்டுத் தானே அவனுக்குப் பதிலாக நின்று தான் தின்னும் வெற்றிலையை அவனுக்குக் கொடுக்கத் தொடங்கினார். பாக்கின் புதிய வாசனையைக் கண்டு சிற்பி கீழே குனிந்து பார்க்க, அரசன் நின்று வெற்றிலை மடித்துக் கொடுத்திருப்பதைக் கண்டு திடுக்கிட்டுக் கீழே இறங்கி வந்து அரசனை வணங்கினன்.

18. அரசனுக்குத் தன் திறமை யெல்லாவற்றையுங் காட்டித் தன் நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ளவே, அவன் மிக வேலைப்பாடமைந்த சுப்பிரமணிய சுவாமிக் கோயிலைக் கட்டி முடித்தான் என்று சொல்லப்படுகிறது. அதன் சுவர்களில் அமைந்துள்ள நகாசு வேலைகள் மிக நுட்பமானவை.

19. இக்கோயிலில் காணக்கூடிய காட்சிகள் இன்னும் பல உண்டு. கோயிற் சுவர்களில் பொறித்துள்ள கல்வெட்டுக்கள் சோழநாட்டு வரலாற்றை அறிவதற்குப் பெருந் துணையாயிருக்கின்றன. இவ்வாறு கட்டப்பட்ட பெருங் கோயில்கள் தமிழ் நாட்டில் பல நூறு உண்டு. அவையெல்லாம் நாட்டுச் செல்வ வளங்களையும், நாகரிக முதிர்ச்சியையும், கலைகளின் மேம்பாட்டையும் நன்கு விளக்குகின்றன.

## அரும்பொருள்

அரண்மனை - காவலுள்ள வீடு. சிவபக்தன் - சிவனுக்கு அன்பன். அகழி - கோட்டையைச் சுற்றித் தோண்டிக் காவலாக அமைக்கப்பட்ட நீர்க்கிடங்கு. கேரளாந்தகன் - கேரளர்களுக்கு யமன். முற்றம் - முன்னிடம். நந்தி - மாடு. விமானம் - அடுக்கானமேல் மாடியாய் அமைந்துள்ள கட்டிடம். ஸ்தூபி - முகடு. சதுரம் - நாற்பக்கமும் ஒன்றாயிருப்பது. இணங்கி - ஒப்பி. அடித்தளம் - அடிப்பரப்பு. அமர்ந்துள்ளோம் - விரும்பித்தங்கியுள்ளோம். பெருமிதம் - கம்பீரம். தக்ஷிணமேரு-தென்திசையின் மேருமலை. சாத்துவது - அப்புவது. அசரீரி - உடம்பில்லா நிலை. நிறுவ - பிரதிஷ்டை செய்ய. அணிகள் - ஆபரணங்கள்.

## பயிற்சி

I விடை தருக:—

1. மிகப் பழைய காலத்துக் கட்டிடங்கள் ஏன் இப்பொழுது காணப்படுவதில்லை?
2. இராஜராஜனின் குணங்களில் மேம்பட்டவை யாவை?
3. அவன் இராஜராஜேசுவரக் கோயிலைக் கட்டக் காரணம் என்ன?
4. தஞ்சையிலுள்ள நந்தியின் சிறப்பு யாது?
5. ஸ்தூபிக்குடம் எங்கே வைக்கப்படும்?
6. சாரப்பள்ளம் என்ற பெயர் எப்படி உண்டாயிற்று?
7. "அம்மையார் நிழலில் யாம் அமர்ந்துள்ளோம்—" சந்தர்ப்பம் கூறுக.
8. தக்ஷிணமேரு என்ற பெயர் தஞ்சைக் கோயில் விமானத்துக்கு எப்படிப் பொருத்தமாகும்?
9. கருவூர்த்தேவரின் பெருமை யாது?
10. அவர் எவ்வாறு இலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்தார்?
11. கோயிலில் கல்வி பெருக அரசன் செய்த ஏற்பாடுகள் யாவை?
12. சுப்பிரமணிய சுவாமிக் கோயில் கட்டப்பட்ட வரலாறு என்ன?

## கட்டுரை

II 1. நீ இராஜராஜேசுவரன் கோயிலைக் கண்டதாக அதனை விவரித்து உன் நண்பனுக்கு ஒரு கடிதம் எழுதுக.

2. கோயில்களால் வளரும் கலைகள் யாவை?

3. உன் கிராமத்துக்கு அருகில் உள்ள ஒரு பெரிய கோயிலை நேரிற் சென்று பார்த்தும் விசாரித்தும் அதைப்பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

111 கீழ்வருந் தொடர்களைத் தனித்தனி வாக்கியத்தில் அமைக்க :—

பெரும்பாலானவை, திருமுன்பு, சாரப்பள்ளம், கலைச் சிறப்பு, நிலைநிறுத்து.

1V இப்பாடத்திலுள்ள பிரிவுகளுக்குத் தக்க தலைப்புத் தருக.

V கோளாந்தகன், கருப்பக்கிருகம் போன்ற சொற்கள் வட மொழியிலிருந்து வந்து தமிழில் வழங்குகின்றன. ஆகவே இவையெல்லாம் வடமொழிச் சொற்கள்.

(a) சில வடமொழிச் சொற்களைக் கூறி அவற்றிற்குத் தமிழ்ச் சொல்லும் கூறுக.

## 7. சர் ஜகதீச சந்திரபோஸும் அவர் கண்ட வியத்தகு காட்சியும்

அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்.

1. ஒருவன் தன் முயற்சியால் அரிய ஒரு காரியத்தையும் செய்து முடிக்கலாம். ஆயின் அவன் மனந் தளராதிருத்தல் வேண்டும்; முயற்சியுடன் உழைக்க வேண்டும்; அம்முயற்சி நற் பெருமையைத் தரும்.

2- இம்முறையில் உழைத்து உலகிலேயே என்றும் அழியாத நற்புகழ் வாய்ந்தவர், நம் நாட்டுப் பெரியார் ஆகிய சர் ஜகதீச சந்திர போஸ் என்னும் இந்திய நன் மகனுவார்.

3. ஜகதீச சந்திரர் வங்காளத்து பிக்ரம்பூர் கிராமத்தில் 1858-ம் ஆண்டு நவம்பர் மாதம் 30-ம் நாளில், பகவன் சந்திரபோஸ் என்னும் ஓர் அரசாங்க அலுவலாளரின் மகனுய்ப் பிறந்தார். இவரை அருமையாக வளர்த்து வந்த பெற்றோர், இவரது இளமையிலிருந்தே இவருக்கு ஒழுக்கம் முதலிய பண்புகளைப் புகட்டி வந்தார்கள். உரிய பருவத்தில் இவரைத் தந்தையார் தம் கிராமத்திலுள்ள பள்ளிக்கூடத்தில் சேர்த்து, கிராமப்பிள்ளைகளுடன் பழகிப் படித்து வருமாறு செய்தனர். ஜகதீசரும் எளிய பிள்ளைகளுடனும் இனிமையுறக் கலந்து உறவாடிப் பழகித் தம் பாடத்தையும், நன்கு முயன்று போற்றி வந்தார். பொதுமை வளர்க்கும் பொற்பையும் உணர்ந்தார்.

4. கிராமப் படிப்பு முற்றியவுடன், இவர் கல்கத்தா நகர்-செயின்ட் சேவியர் கல்லூரியிற் சேர்ந்து, இனிது பயின்று ஆண்டு தோறும் மேல் வகுப்பேறி, பி. ஏ. தேர்விலும் தேறினர். பின் தம் தந்தை சொல்லை மந்திரமாகக் கொண்டு இங்கிலாந்து சென்று அங்கு

இலண்டன் சர்வ கலாசாலையில் இயற்கைத் தத்துவ நூல் பயின்று 1885-ம் ஆண்டில் பி.எஸ். ஸி. பட்டமும் பெற்றார்.

5. பின்பு தாய்நாடு சேர்ந்து, பூத பௌதிக சாத்திரப் பேராசிரியராகக் கல்கத்தா மாகாணக் கல்லூரியில் ஆசிரியராயமர்ந்து ஆராய்ச்சித்துறையில் கண்ணுங்கருத்துமாக ஈடுபட்டிருந்தார். இவர் தம்முடைய தீவிர ஆராய்ச்சியின் பலனை அவ்வப்போது பத்திரிகைகளில் வெளியிட்டுவந்து மின்சார அலைகளைப் பற்றிய தம் ஆராய்ச்சி முடிவை விளக்கி விரிவுரையும் ஆற்றினர். இம்மின்சார ஆராய்ச்சியில் ஈடுபட்டவர் மூவர் ஆவர். அவர்களுள் இந்தியராகிய நம் ஜகதீச போஸ் ஒருவர் ; ஐரோப்பியராகிய மார்க்கோனி மற்றவர் ; மூன்றுமவர் ஒரு அமெரிக்கர்.

6. இம் மூவருள் நம் ஜகதீசரே முதலில் நன்முடிவு கண்டு வெளியிட்டவர். ஆயின் இங்கிலாந்தில் உள்ள இராயல் சங்கத்தாரில் இருந்த சிலருடைய பொறாமையால் இவருடைய கட்டுரை அச்சங்கத்துப் பத்திரிகையில் முதலில் வெளிப்படுத்தப்படவில்லை. இவருடைய முடிவு வேற்றுவர் பெயரால் வெளிவந்தது. ஆயினும், உண்மை உணர்ந்து நம் ஜகதீசரைப் பாராட்டிப் புகழ்ந்தவர் பலருண்டு. ஆகவே, ஜகதீச-சந்திரர் சில உண்மையாளர்களின் நன் முயற்சியால் இங்கிலாந்துக்குத் தருவிக்கப்பட்டு, அங்கே மின்சார அலைகளைப் பற்றிய விளக்கங்களை இராயல் சங்கத்தாரின் முன் தெளிவுறக் கருவிகளைக் கொண்டு காட்டி விரித்துரைத்து யாவரையும் மகிழச் செய்தனர். இவர்தான் மின்சார அலையினைக் குறித்த உண்மை முடிவை முதலில் வெளியிட்டவர் என்ற உண்மையும் பலரால் ஒப்பப்பட்டது. உலகெங்கும் இவர் புகழ் பரவியது. இலண்டன் சர்வகலாசாலை

யார் இவருக்கு "டாக்டர் ஆப் சைன்ஸ்" என்ற பட்டமும் அளித்தனர்.

7. மின்சார அலையுண்மை கண்ட ஜகதீசர் அதோடு அமையாமல் மரம், செடி, கொடிகளும், நம் போலவும் விலங்கு முதலிய உயிர்கள் போலவும் இருதயம் உடையன என்பதையும் ஆராய்ந்து கண்டார். இன்னும் அவைகள் இன்ப துன்பங்களை உணர்ந்து நுகர்கின்றன என்றும் இரவு பன்னிரண்டு முதல் பத்து மணி நேரம் உறங்குகின்றன என்றும் கண்டார். இக்காட்சிக்கு வேண்டிய கருவிகள் யாவற்றையும் நம் இந்திய நாட்டுத் தொழிற்சாலைகளிலேயே தம் பார்வையின் கீழ் செய்வித்தார். மேலும் இவை போன்ற கருவிகளால் உலோகப் பொருள்களின் வளர்வு, தேய்வு முதலியவைகளைக் குறித்த சில அரிய உண்மைகளையும் கண்டார். இவற்றைத் தம் தாய்நாட்டிலே மாத்திரம் அல்லாமல் ஐரோப்பா, அமெரிக்கா முதலிய வெளிநாடுகளில் உள்ள சிறந்த விஞ்ஞான அறிஞர்களும் கண்டு வியப்படையுமாறு விளக்கிக் காட்டி, அவ்வுண்மைகளை எடுத்துரைத்து வந்தார். இதனாலும் இவர் புகழ் முன்னினும் பன்மடங்கு பரவியது. அன்றியும் அக்கருவிகள் இந்தியாவிலேயே செய்யப்பட்டன என்று இவர் பெருமிதம் கொள்ளும் வகையிலும் பாராட்டப்பட்டார்.

8. தம்முடைய ஆராய்ச்சிக்குப் பொருந்தியனவாகச் செய்தமைத்த அக்கருவிகளின் உரிமையைத் தமக்கே என்றும் உரியதாக ஜகதீசர் பதிவு செய்து கொள்ளவும் இல்லை. அவற்றைச் செய்து விற்ற விற்பனை வருமானத்தால் பொருள் ஏராளமாகக் குவிந்தது. அப்பொருள் அனைத்தையும் உலக ஆராய்ச்சியாளர்க்குப் பேருதவியாகும் பொருட்டு, கல்கத்தாவில் ஓர் ஆராய்ச்சிச்சாலையை நிறுவி அதைக் காப்பதற்கே உபயோகப்படுத்தினார். இவ

ருடைய ஆராய்ச்சி அருஞ்செயல்களைக் கண்டு மகிழ்ந்த வங்க அரசாங்கத்தார் இவருக்கு ஆயுள் வரையில் முழுச்சம்பளம் மாதந்தோறும் கொடுத்து வந்தனர். அதனையும் ஜகதீசர் தம் ஆராய்ச்சிச்சாலையின் வளர்ச்சிக்குக் கொடுத்து வரலாயினர். இந்திய அரசாங்கத்தினரும் பல முறையும் பல வழிகளிலும் இவருடைய ஆராய்ச்சிக்கு உதவி செய்தனர்.

9. ஜகதீசர் உலக முற்றிலும் விஞ்ஞான வளர்ச்சியுற்ற நாடுகள் அனைத்துக்கும் சென்று, ஆங்காங்குள்ள பல் கலைக் கழகங்கள் பல்கலைச்சாலைகள் விஞ்ஞான சங்கங்கள் ஆகியவைகளில் எல்லாம் தம் விஞ்ஞான ஆராய்ச்சிகளில் கண்ட வியத்தகு காட்சிகளைக் காட்டி விளக்கியுரைத்து வந்தார். இவர் சென்ற இடங்களெங்கும் இவருடைய ஆராய்ச்சியின் அருமை பெருமைகளை வியவாதவர் இல்லை.

10. ஆராய்ச்சித்துறையில் ஈடுபடும் மாணவர்களுக்கு ஜகதீசர் சமயம் நேரும்போதெல்லாம் வேண்டிய உதவியும் ஊக்கமும் அளித்துவந்தார். விஞ்ஞான ஆராய்ச்சியின் அருமையினையும் கஷ்ட நஷ்டத்தையும் நன்கு உணர்ந்த இவர், ஒரு முறை பஞ்சாப் சர்வகலா சாலையார் ஒரு பெரும் பரிசிலைத் தமக்களிக்க முன் வந்தபோது, அதனைப் பெற மறுத்து, அதனைச் சர்வ கலாசாலை மாணவர்க்கு உதவுமாறு செய்தனர்.

11. ஜகதீசருடைய பரந்த ஆராய்ச்சி அறிவாற்றல்களை நன்குணர்ந்த இந்திய அரசாங்கம், 1900-ம் ஆண்டில் பாரிசில் நடந்த சாத்திர மகாநாட்டிற்கு இந்தியப் பிரதிநிதியாக, இவரை அனுப்பிப் பெருமை படுத்தியது ; 1903-ம் ஆண்டில் சி. ஐ. இ. என்னும் பட்டமும், 1911-ம் ஆண்டில் சி. எஸ். ஐ. பட்டமும் அளித்து ஜகதீசரைப் பாராட்டினது. விஞ்ஞானப் புலமையைக் குறித்து சர் பட்டம் அளிக்கப்பட்ட முதல் இந்தியர் ஜகதீசரே. மரஞ் செடி கொடிகளுக்

கும் இருதயம் உண்டு என்று முதன்முதல் கண்ட பெருமையும் ஜகதீசருடையதே.

12. கல்வியும், அறிவும், செல்வமும், நாகரிகமும் நிறைந்து ததும்பி வழியும் மேனுடுகளும் ஜகதீசருடைய அரிய ஆராய்ச்சிப் பெருமையை முன்னிட்டு இந்தியாவுக்குத் தலைவணங்கின. இதற்கு வியன்னு நகரத்துப் பேராசிரியராகிய மார்ஷல் என்பவர் ஒரு சான்றுவார். அந்நகரத்துச் சாத்திர சங்கத்தில் ஜகதீசர் சொற்பொழிவு ஆற்றும்போது அப்பேராசிரியர் தலைமை வகித்தார். அப்போது அவர் நம் ஜகதீசருக்கு நன்றி செலுத்துங்கால், "இன்றைய உலகில் புதுமுறை ஆராய்ச்சிகளில் சிறந்து திகழும் இணையற்ற விஞ்ஞான அறிஞரான டாக்டர் ஜகதீச சந்திர போஸைத் தன் நன்மகனுகப் பெற்ற இந்தியாவுக்கு மேனுடுகள் நன்றி செலுத்தப் பெரிதும் கடமை கொண்டுள்ளன" என்று பாராட்டியுள்ளார். இவ்வளவு அருமை பெருமைகளை இந்தியாவுக்குத் தேடித்தந்த ஜகதீசருக்கு நாம் என்றும் கடமைப்பட்டுள்ளோம்.

13. ஜகதீசர் நமக்குப் புகட்டும் அறிவுரையாவது :—"நம் முன்னோர் மிகவும் புகழோடு அறிவு படைத்தவராவர். அவர் கால்வழி வந்தவராகிய நாம் அவர்களுடைய திறம், ஆற்றல் முதலியவைகளைப் பற்றிப் பாராட்டிப் பேசிக் கொண்டிருப்பதால் யாதொரு பலனுமில்லை. நாமும் அவர்களையொப்ப உண்மையறிவுடன் ஆராய்ச்சிகளிற் சிறந்து ஒளிர்வோமாக. அப்போது மேனுடுகள் நமக்குத் தலைவணங்கிப் பணியும் என்பதில் சிறிதேனும் ஐயங்கொள்ள வேண்டாம். நம் முன்னோர் தம் அருமுயற்சிகளாலும் பெருஞ்செயல்களாலும் பெற்றிருந்த பெருமையை மீளவும் நாம் அடைவோமாயின் நாம் நம் மதிப்பையும் இழவாமல் காப்பவராவோம்; நம் புகழும் உலகெங்கும் ஓங்கிப் பரவி நிலவும்.

## அரும்பொருள்

வியத்தரு - அதிசயிக்கத்தக்க. காட்சி - புதிதாகக் காணல். அசாவாமை - தளராமை. விஞ்ஞானம் - இயற்கைப் பொருளைப் பற்றிய அறிவு. பண்டு - பழமை. தலைப்பட்டனர் - தொடங்கினர். பொதுமை - யாவரும் ஒன்றென மதிக்கும் ஒப்புமை. பொற்பு - அழகு. பரிசில் - வெகுமதி.

## பயிற்சி

1. விடை தருக :—

   1. நம் நாட்டின் பண்டைய இடைக்கால விஞ்ஞான நிலைகளும் அவற்றின் காரணங்களும் கூறுக.
   2. ஜகதீசருடைய இளமையையும் பண்பையும் விளக்குக.
   3. ஜகதீசர் "தந்தைசொல் மிக்க மந்திரமில்லை" என்பதற்கு இலக்காகியது எங்ஙனம்?
   4. ஜகதீசரின் முதல் ஆராய்ச்சி எதனைப்பற்றியது? அதன் முடிவு யாது?
   5. மின்சார அலைகளின் ஆராய்ச்சியைப்பற்றிய மாறுபாடும் அதன் முடிவும் யாவை?
   6. ஜகதீசர் கண்ட வேறு உண்மைகள் யாவை? அவற்றின் பெருமைகள் யாவை?
   7. ஜாதீசருடைய தாராள எண்ணம் செய்கை இவற்றை விளக்குக.
   8. ஜகதீசருக்குக் கிடைத்த பட்டங்களும் பெருமையும் யாவை?
   9. பேராசிரியர் மார்ஷலின் கூற்று யாது?
   10. ஜகதீசர் நமக்குக் கூறிய அறிவுரை யாது?
   11. ஜகதீசர் வியத்தரு காட்சி கண்டவர் என்பதை விளக்குக.

11 ஜகதீசர் கண்ட ஆராய்ச்சி உண்மைகளை அவரே எழுதுவது போல 15 வரிகளில் எழுதுக.

# 8. தமிழ் வளர்ச்சி

உலகத்தில் தோன்றியுள்ள பல மொழிகளுள் மிகப் பழமையும் கணக்கற்ற நூல்களுமுடைய மொழிகள் வடமொழியான ஆரியமும் தென்மொழியான நம் அருந்தமிழுமே. இவையிரண்டும் இப் பரதகண்டத்தில் வழங்கும் பல்வேறு மொழிகட்கும் முந்தியனவென்பதும், இவற்றினின்று கிளைத்தனவாகிய பல மொழிகளுண்டென்பதும் வெளிப்படை. இவற்றுள் தமிழ் சிவபிரானிடமிருந்தே தோன்றிற்றென்றும், இதனை அகத்திய முனிவர் வளர்த்தனர் என்றும் பெரியோர் கூறுவர்.

இம்மொழி வழங்கிய நாடு தமிழகம் எனப்படும். அது வடவேங்கடம் முதல் தென்குமரி வரையில் பரவியிருந்ததென்றும், அதன் கீழ்மேல் எல்லைகள் கடல்களாகுமென்றும், அதனைச் சேர, சோழ, பாண்டியர் என்னும் மூவேந்தர்களும், பல சிற்றரசர்களும் ஆண்டு வந்தனரென்றும் சரித்திரம் கூறும். வடமொழியில் ஆதிகாவியமாகிய வான்மீக ராமாயணம் எழுதப்பெற்ற காலத்திலேயே, இந்நாடுகள் செல்வமும் நாகரிகமும் படைத்து விளங்கின என்பதற்கு ஆதாரங்கள் பல கிடைக்கின்றன.

தமிழ் மூவேந்தர்களுள் பாண்டியரென்பார் மதுரையிலிருந்து ஆட்சி புரிந்துவந்தனர். அவர்கள் நம் தாய்மொழியை வளர்த்தலில் மிக்க ஊக்கங்காட்டி வந்தமையால் அவர்களாண்ட நாட்டிற்குச் செந்தமிழ் நாடு என்ற பெயர் உண்டாயிற்று. அவர்களுள் காய்சினவழுதி என்னும் பாண்டியன் தமிழ்ப்புலவர்களை ஒருங்கு சேர்த்துத் தமிழ்ச்சங்க மொன்றினை நிறுவினன். அச்சங்கம் அவன் பின்னோர்களாலும் பராமரிக்கப்பட்டு வந்தது. அந்நீண்ட காலத்தில் அச்

சங்கத்திலிருந்த புலவர்கள் பலர்; அவர்கள் இயற்றிய நூல்களும் பல.

சேரரும் சோழரும் சங்கங்களை அமைக்காவிடினும் பாண்டியரைப் போலவே தமிழைப் போற்றி வந்தனர். குறுநில மன்னர்களாலும் இம்மொழி சிறப்புப் பெற்றது.

புலவர்கள் நாடெங்கும் நிரம்பினர்; அவர்களுக்கு நாட்டில் அளவுகடந்த செல்வாக்கு உண்டாயிற்று. வேந்தர்களும் பிரபுக்களும் அவர்களைத் தம் உயிரினும் உயர்வாகப் போற்றினர். மன்னர்களுக்கு மந்திரிகளாக இருந்து அரசாட்சி புரிவதில் உதவி புரிவதும், பகையரசர்களிடம் தூது சென்று பகைமை நீக்குவதும் போன்ற உயரிய துறைகளிலும் புலவர்கள் அமர்வார்களாயினர்.

பொய்கையார் என்னும் புலவர் சோழனொருவனிடம் சிறைப்பட்ட ஒரு சேர மன்னனைச் சிறை வீடு செய்ய உதவினார். கோவூர்க் கிழார் என்பவர் ஒரு சோழன் தன் பகைவர் மக்களை யானையால் கொல்விக்கத் துணிந்தபோது அக்கொடுமையினின்று அவனை விலக்கினார். ஔவையார் ஒரு மன்னனுக்காக மற்றொரு மன்னனிடம் தூது சென்று சந்துசெய்வித்தார். கபிலர், நாடிழந்த தன் நண்பனும் பாரி யென்னும் வள்ளலின் மக்களுக்கு மணம் புரிவித்தார். இவ்விதம் அக்காலத்தில் புலவர் பெற்றிருந்த பெருமை அளவிடற்கரியது. அவர்களால் தமிழ்ப் பயிர் நன்கு வளர்ந்து வந்தது.

கி. பி. முதல் நூற்றுண்டிலிருந்தே ஜைனர்களும் பௌத்தர்களும் தமிழ்நாடு புகுந்து தம் மதங்களைப் பரப்பலாயினர். அவர்களால் தமிழ் பெற்ற பேரும் அளத்தற்கரியது. தமிழிலே உள்ள பல காவியங்களும் இலக்கணங்களும், நிகண்டுகளும், உரை நூல்களும்

அவர்களாலியற்றப் பெற்றனவே. அவர்களிற் சிலர் சங்கப் புலவர்களாகவும் விளங்கினர்.

அப்பால் ஏறக்குறைய கி. பி. ஐந்தாம், ஆறும் நூற்றுண்டு முதல் தமிழகத்தில் சைவ வைணவ மதங்கள் ஓங்கலாயின. நாயன்மார்களும், ஆழ்வார்களும், நாட்டின் பற்பல இடங்களுக்குச் சென்று இனிய பதிகங்களைப் பாடிவரலாயினர். அவற்றைப் பின்பற்றிப் பல மத நூல்களும் எழலாயின. இக்காலத்தும் தமிழ் வளம் வளர்ச்சியுற்றது.

பிறகு, சோழ மன்னர்கள் தஞ்சையில் ஆளத் தொடங்கினபோது, தமிழ்க்கல்வி அதிக மேம்பாடுற்றது. கம்பர், கூத்தர், சேக்கிழார், புகழேந்தி போன்ற புலவர்கள் பலர் தோன்றிப் பல உயரிய நூல்களை ஆக்கலாயினர். பல்வகைப் பிரபந்தங்கள் இக்காலத்தில் எழுதப்பெற்றன.

சோழ வேந்தர்களின் பலங் குன்றிய பிறகு தமிழகம் பற்பல அந்நிய மொழியாளரின் கைகளிற் சேர்ந்தது. அக்காலத்தும் தமிழன்னை தன்னிலையிற் குன்றுமல் பல தமிழ்ப் பிரபுக்களாலும், சிற்றரசர்களாலும், சைவ மடங்களாலும் போற்றப்பட்டு வந்தனள். நூற்றுக்கணக்கான பிரபந்த நூல்களும், தலபுராணங்களும், உரைநூல்களும் இக்காலத்தில் வெளிவந்தன. இத்தகைய வளர்ச்சி இடையூறின்றிச் சென்ற இரண்டு நூற்றுண்டுகட்கு முன்வரையில் நிகழ்ந்து வந்ததெனவே கூறலாம்.

ஆயினும் இப்பிற்காலத்தில் தமிழ் எதிர்பாராத முறையில் சீர்குலைய ஆரம்பித்தது. தமிழ்க் கல்வி புறக்கணிக்கப்பட்டது. தமிழ் நூல்களின் அருமையையறியாத மக்கள் அவற்றைச் செல்லுக்கு இரையாக்கினர். நூல்களின் பெயர்களும் பல மறக்கப்பட்டன. இக்காலத்திலும் அருமையாக ஆங்காங்கே சில சிறந்த

புலவர்கள் தோன்றி, பல நூல்கள் இயற்றி வந்தனர். ஆனால் பொதுவில் தமிழின் நிலை மிகத்தாழ்வடைந்தே நின்றது.

சில ஆண்டுகளாக இந்நிலை சிறிது சிறிதாக மாறி வருகின்றதென்று கூறச் சில அறிகுறிகள் காணப்படுகின்றன. தமிழ்க் கல்வியின் விரிவையும் பெருமையையும் பற்றிப் பலர் ஆங்காங்கே பேசிவருகின்றனர். அரசியலாரும் மிக்க ஆதரவளித்து வருகின்றனர். சில அரிய உழைப்பாளிகள் பண்டை நூல்களைத் தேடிக் கொண்டு வந்து, அவற்றை நல்ல முறையிற் பதிப்பிக்கின்றனர். தமிழின் எதிர்காலம் மிக்க மேன்மையுடன் விளங்குமென்று தோன்றுகிறது.

## அரும்பொருள்

கிளைத்தன - பிரிந்தன. காவியம் - கவிநூல். ஆதாரம் - துணையான காரியங்கள். நிறுவினன் - ஏற்படுத்தினன். பராமரிக்கப்பட்டு - காப்பாற்றப்பட்டு. போற்றி - பாதுகாத்து. குறுநில மன்னர் - சிற்றரசர்கள். செல்வாக்கு - பிறர் தம் சொல்லை ஏற்றுக் கொள்ளத் தக்க மதிப்பு. துறை - மார்க்கம்; வழி. சிறை வீடு - சிறையிலிருந்து விடுதலையாதல். சந்து - சமாதானம். நாயன்மார் - சிவனடியார்கள். ஆழ்வார் - வைஷ்ணவ அடியார்கள் (திருமாலின் பக்தியில் ஆழ்ந்தவர்கள்). பிரபந்தம் - சிறு நூல். இடையூறு - துன்பம். புறக்கணித்தல் - கவனியாது விடுதல். அறிகுறி - அடையாளம். ஆதரவு - உதவி.

## பயிற்சி

I. விடை தருக.

1. வடமொழி தென்மொழி என்பன யாவை? அவற்றின் சிறப்பு என்ன?
2. தமிழின் கிளைமொழிகள் யாவை?
3. தமிழகத்தின் எல்லை எவை?
4. தமிழகத்தை யார் யார் ஆண்டு வந்தனர்?
5. 'செந்தமிழ் நாடு' என்று சிறப்பித்துக் கூறப்படுவது எது? காரணம் கூறுக.

6. சங்ககாலத்துப் புலவர்கள் சிலர் பெயரைக் கூறுக. அவர்கள் செய்த நூல்கள் சிலவற்றின் பெயரை எழுதுக.

7. பண்டைத் தமிழ்ப் புலவர்கள் பெற்றிருந்த பெருமைகளைக் கூறுக.

8. தமிழ் வளர்ச்சியுற்ற காலம் எது? எப்படி?

9. கம்பர், சேக்கிழார், புகழேந்தியார் இவர்கள் ஆக்கிய நூல்கள் எவை?

10. தமிழ் எவ்வாறு சீர்குலைய ஆரம்பித்தது?

11. தமிழின் எதிர்காலம் மிக்க மேன்மையுடன் விளங்கும் என்பதை எப்படி அறிவாய்?

### எதிர்ப் பதம்

II. தோன்றி × கெட்டு. பல × சில. முந்தியன × பிந்தியன. வெளிப்படை × குறிப்பு. சிற்றரசர் × பேரரசர். செந்தமிழ் × கொடுந்தமிழ். உயர்ந்த × தாழ்ந்த. இனிய × இன்னா. அரிய × எளிய.

III. துரை, துறை. கொல், கொள். மணம், மனம். விலக்கு, விளக்கு. உரை, உறை. ஆள, ஆழ. இரை, இறை—இவற்றை வாக்கியத்தில் அமைத்துப் பொருள் வேறுபாடு காட்டுக.

IV. வெளிப்படை, செல்வாக்கு, சந்துசெய், புறக்கணி, அறிகுறி, சிறைவீடு—இவற்றை வாக்கியத்தில் அமைத்து எழுது.

V. கோவூர்க் கிழார், ஒரு சோழன் தன் பகைவர் மக்களை யானையால் கொல்விக்கத் துணிந்தபோது, அக்கொடுமையினின்று அவனை விலக்கினர்—இதிலுள்ள பெயர்ச்சொற்கள் எவை? அவை அடைந்துள்ள வேற்றுமை என்ன?

# 9. சுப்பிரமணிய பாரதியார்

பாட்டுக் கொருபுலவன் பாரதியடா - அவன்
பாட்டைப் பண்ணெடொருவன் பாடினனடா
கேட்டுக் கிறுகிறுத்துப் போனேனேயடா - அந்தக்
கிறுக்கில் உளறுமொழி பொறுப்பாயடா.

(மலரும் மாலையும்)

1. ஆண்டுதோறும் தமிழ்நாட்டார் செப்டம்பர் மாதம் 11-ஆம் நாளன்று பாரதியார் நாளைக் கொண்டாடி வருவதை நீங்கள் அறிவீர்கள். அப்படி நாடெங்கும் கொண்டாடத்தக்க பெருமையுடைய அவர் யார்? அவருடைய பெருமைகள் யாவை?

2. ஏறக்குறைய அறுபது ஆண்டுகளுக்கு முன்னே எட்டயபுரம் சமஸ்தானத்தில் வேலை பார்த்துவந்த சின்னசாமி ஐயர் என்ற அந்தணருக்கும் அவருடைய மனைவியார் இலக்ஷ்மி அம்மாளுக்கும் பாரதியார் மகனாகப் பிறந்தார். அவர் சுப்பிரமணியன் என்ற பிள்ளைப் பெயர் இடப்பெற்றார்.

3. எட்டயபுரம் என்பது திருநெல்வேலி வட்டத்தி(ஜில்லாவி)லுள்ள ஒரு ஜமீன் நாடு. அங்குள்ள ஜமீன்தார்கள் வழிவழியாய்த் தமிழ்ப் புலமை வாய்ந்து வந்தனர். அவர்கள் தமிழ்ப் புலவர்களையும் தமிழ்க் கல்வியையும் போற்றிவந்தனர். அத்தகைய இடத்திலேதான் பாரதியார் தம் இளமைப் பருவத்தைக் கழித்தார். சின்னசாமி ஐயர் தம் மகனுருக்குத் திருக்குறள், கம்பராமாயணம், தாயுமானவர் பாடல் முதலிய நூல்களிலிருந்து சிறந்த பாடல்களைக் கற்பித்து வந்தார். பாரதியார் ஏழாண்டுள்ளவராயிருக்கும்போதே தமிழ்ப் பாடல்களை இயற்றத் தொடங்கினர்.

4. பாரதி என்ற பெயர் சரசுவதி தேவியின் பெயர்களுள் ஒன்று. கல்வியிற் பெயர் பெற்றவர்களைப் பாரதி என்று கூறுவது வழக்கம். ஒரு தமிழ்ப் புலவர் சுப்பிரமணியரின் பாடும் திறமையைப் புகழ்ந்து, அவரை நோக்கி, 'நீ ஒரு பாரதியே' என்றாராம். அப்பெயரே அவருக்கு என்றும் நிலைத்துவிட்டது. இது நடந்தது, அவருடைய பதின்மூன்றாம் ஆண்டில்.

5. பாரதியார் பள்ளிக்கூடப் படிப்பில் அதிகக் கவலை காட்டவில்லை. அவர் அங்குமிங்கும் அலைந்து திரிந்து உலகத்தை நன்றாக் உணர்ந்து கொண்டார். ஒருமுறை அவர் காசிக்குச் சென்று அங்கே இரண்டாண்டுகள் தங்கினார். அங்கு அவர் வடமொழி ஹிந்தி ஆகிய மொழிகளைக் கற்றுக்கொண்டார்.

6. பாரதியார் செல்லம்மாள் என்ற மாதை மணந்துகொண்டார். அப்பெண்மணி சிறந்த குண வமைதி பெற்றவர். என்றாலும், பாரதியாருக்கு அவருடன் குடித்தனம் செய்தற்குப் போதிய வருமானம் கிடைக்கவில்லை. அவர் வறுமையால் மிகவும் துன்பப் பட்டார். சில ஆண்டுகள் அவர் புதுச்சேரியில் தங்கியிருந்தார்.

7. பாரதியார் வறிய வாழ்க்கையை நடத்தி அல்லற்பட்டாராயினும் அவர் மனம் மிக்க ஊக்கமும் உறுதியும் வீரமும் செம்மையும் நிறைந்திருந்தது. அச்சம் என்பது எள்ளளவும் அவரிடம் காணப்படவில்லை. அவருக்குத் தம் நாட்டின் மேலும், தம் தாய்மொழியின் மேலும் அளவுகடந்த அன்பு இருந்தது. தமிழ் நாட்டு மக்கள் தங்கள் பண்டைப் பெருமையை மறந்து சோம்பியிருந்ததைக் கண்டு அவர் மனம் நொந்தார். அவர் அவர்களை உறக்கத்திலிருந்து தட்டியெழுப்புவதற்காகத் தம் கனிந்த மனத்திலிருந்து வழிந்தோடிய பாடல்களைப் பாடினார்.

அப்பாடல்கள் தேசீயப் பாடல்கள் என்றபெயரால் இப்பொழுது பல்லாயிரம் தமிழ் மக்களால் பாடப்பட்டு வருகின்றன.

8. பாரதியாருக்குக் குழந்தைகளிடம் மிக்க அன்பு இருந்தது. அவர்களுக்காக அவர் சில எளிய பாடல்களைப் பாடினார். குயில் பாட்டு, கண்ணன் பாட்டு, பாஞ்சாலிசபதம் முதலான பொருள் செறிந்த பல பெரிய கவிகளையும் அவர் உலகுக்கு அளித்தார். அவர் 1921-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11-ஆம் நாள் இவ்வுலகை விட்டு நீத்தபோது தமிழுலகம் பெரிதும் வருந்திற்று. அந்நாளையே மக்கள் ஆண்டு-தோறும் மிகத் தூய நாளாகக் கொண்டாடி வருகின்றனர்.

9. உலகத்தில் எவ்வளவோ மக்கள் பிறந்து இறக்கின்றனர். அவர்கள் பெயர் அவர்களுடனேயே மறைந்துவிடுகிறது. எவருடைய புகழ் அவருக்குப் பின்னும் உலகத்தில் நிற்கிறதோ, அவரே தாம் இறந்தும் இறவாதவர். பாரதியார் அத்தகைய பெரியார்களுள் ஒருவர். அவர் புகழ் தமிழ்நாட்டில் ஒருநாளும் மங்காது.

10. பாரதியாரின் குணங்களைப் பற்றியும் அவருடைய தோற்றத்தைப் பற்றியும் அவரை நேரில் அறிந்தவர்கள் பல கட்டுரைகள் எழுதியிருக்கின்றனர். அவற்றுள் ஒன்றைக் கீழே தருகிறோம் :—

11. *"பாரதியை நேரில் காணவும் நெருங்கிப் பழகவும் அவருடைய அந்தியகாலத்தில்தான் எனக்குச் சந்தர்ப்பம் வாய்த்தது. புதுவையிலிருந்து புறப்பட்ட பிறகுதான், ஒரு நாள் காலை 10 மணி இருக்கும். ஆபீஸில் தபால் பார்த்துக்கொண்டிருந்தேன். கன வேகமாய் ஒரு ஜட்காவண்டி ஆபீஸைநோக்கி வந்தது.

---

*இப்பகுதி சுதேசமித்திரன் ஆசிரியர் ஸ்ரீ வீ. ஆர். ஸ்ரீநிவாசன் அவர்கள் எழுதிய 'தராசு' என்னும் நூலினின்று அவர்களின் அனுமதி பெற்று எடுத்துக் கையாளப்பட்டது.

ஆபீஸ் பெயரைப் பார்த்ததும் 'நிறுத்து', என்று கூவினார் வண்டியிலிருந்தவர்; நிற்கிறவரையில் தாங்கவில்லை; குறுக்குக் கம்பியைத் தள்ளிக்கொண்டு கீழே குதித்தார். தள்ளின கம்பி திரும்பிவந்து சொக்காயில் மாட்டிக்கொண்டது. அலட்சியமாகக் கையை உதறினார்; சொக்காயின் கை கிழிந்துவிட்டது, அதையும் கவனிக்கவில்லை. ஓட்டோடியும் உள்ளே வந்தார். நான் இருந்த அறைக்குக் குறுக்குக் கதவுகள் இருக்கக் கண்டு சற்றுத் தயங்கினார். மெள்ளக் கதவைத் தட்டினார்; பதில் இல்லை. கதவுக்குமேல் தலையை நீட்டி உள்ளே பார்த்தார். என்னைக் கண்டதும் சிறிது லஜ்ஜைப்பட்டார். "யார்?" என்று நான் கேட்டேன். "நான்தான் சுப்பிரமணிய பாரதி" என்றார். "வாருங்கள், உள்ளே வாருங்கள், உட்காருங்கள்" என்றேன்.

12. அன்று கண்ட பாரதி இன்றளவும் என் அகக்கண்முன் நின்றுகொண்டே இருக்கிறார். நடுத்தர உயரம்; ஒற்றைநாடி; மாநிறம் படைத்த மேனி; புரிபுரியாய்ச்சுற்றிய வால்விட்ட தலைப்பாகை; அகன்ற நெற்றி; அதன் மத்தியில் காலணா அளவு குங்குமப் பொட்டு; அடர்ந்த புருவங்கள் உருண்ட கண்களைக் காத்து வந்தன; நிமிர்ந்த நாசி வாடின கன்னங்களை விளக்கிக் காட்டியது; முறுக்கிய மீசை மேல்உதட்டை மறைத்தாலும், உறுதியிழந்த உயிர்நிலையைக் கீழ்உதடு காட்டிவிட்டது; உடல்மீது பித்தான் இல்லாத ஷர்ட்டு; அதை மூட ஓர் அல்பாகா கோட்: வண்டியிலிருந்து குதித்தபோது அதுவும் கிழிந்துவிட்டது. நாற்காலியில் உட்கார்ந்தார்; நாவெழவில்லை; கண்கள் வட்டமிட்டுக்கொண்டிருந்தன; அறையைச் சுற்றிப் பார்த்தன; என்னையும் ஏற இறங்கப் பார்த்தன. வெகுண்ட கண்கள்; வேதனை வடிந்த கண்கள் - சாந்தம் நிறைந்த கண்கள்; வசியம் மிகுந்த கண்கள். அவை என் உள்ளத்தைக்

கொள்ளை கொண்டு விட்டன. அன்று நான் பாரதி தாஸனாக மாறினேன். பழகப் பழக, நேசம் பாச மாகவே மாறிற்று.

13. பாரதியிடம் நான் கண்ட விசேஷம் என்ன? பால் மணம் மாறாத குழந்தைகளிடம் காணும் குணங் களைக் கண்டேன். சூதுவாது தெரியாது; வேற்றுமை கிடையாது. நயமுண்டு; பயமில்லை; கையிலிருப் பதைப் பகிர்ந்து கொடுப்பார்; நாளையைப் பற்றி நினைக்கமாட்டார்; படாத கஷ்டங்களைப் பட்டார்; தழும்பு தரிக்கவில்லை; அறியாத வயதில் (மூன்றாம் பிராயத்தில்) தாயை இழந்தார்; அனுபவமில்லாத வயதில் (பதினைந்தாவது பிராயத்தில்) போஷகர்கள் ஒரு பக்கம் மறைய, போஷிக்கும் பொறுப்பு இன் னொரு பக்கம் ஏற்பட்டது. இளம்பிராயத்தில் மணம் புரிந்து குடும்ப பாரம் உறைக்கத் தலைப்பட்டது. பிதுரார்ஜிதம் பூஜ்யம்; பிழைப்புக்கு வழி துலங்க வில்லை; பெரிய படிப்பாளி அல்லர். ஏட்டுப் படிப்பில் என்றைக்கும் நாட்டம் சென்றதில்லை......கஷ்ட ஜீவனமும், நஷ்ட நம்பிக்கையும், அறிவை வளர்க்கும் சாதனங்களாக உதவின. கல்லூரியிற் கற்காததைக் கடற்கரையிற் கற்றார். சென்னையிலும், புதுவையிலும் அவர் கடற்கரை செல்லாத நாள் கிடையாது. கரை யில் உட்கார்ந்த வண்ணம், அலைகள் துள்ளித் தாவி, உருண்டு, திரண்டு, புரண்டு, நுரையும் நீருமாய்த் தாண்டவமாடுவதைக் கண்டு களித்தார். இயற்கையி லிருந்து செயற்கை அறிந்தார்......"

14. இத்தகைய பாரதியார் தம் பூதவுடலை இழந் தாலும் புகழுடலுடன் விளங்குகிறார். நாம் அவரைத் தமிழ் நாட்டு அருங் கவிஞர்களுள் ஒருவராகக் கொண் டாடுகிறோம்.

## அரும்பொருள்

ஜமீன் - குறுநில மன்னர் ஆட்சியிலுள்ள சிறுநாடு. குண வமைதி - குணப்பொருத்தம். நீத்த-நீங்கிய. தூயநாள்-புனித நாள்.

அந்தியகாலம் - முடிவுநாள். சந்தர்ப்பம் - தக்கவேளை. அகக்கண்-மனக்கண். நாசி - மூக்கு. தாஸன் - அடியான். நேசம் - நண்பு. பாசம் - பற்று. பிதுரார்ஜிதம் - முன்னோர் தேடிவைத்தபொருள். துலங்க - விளங்க. போஷகர் - காப்பாளர்.

## பயிற்சி

I. விடை தருக:—

1. பாரதியாருக்குப் பள்ளிக்கூடக்கல்வி எவ்வளவு இருந்தது?
2. அவர் உலக அறிவை அதிகம் பெற்றிருந்தார்—இது நம் பாடத்தில் எப்படி விளங்குகிறது?
3. பாரதியார் கஷ்டஜீவனம் செய்து வந்தார் என்பது எப்படித் தெரியவருகிறது?
4. பாரதியார் இளமையிற் படித்த நூல்களிற் சிலவற்றைக் கூறுக.
5. பாரதியார் பாடல்களில் சிலவற்றின் பெயர்களைக் கூறுக.
6. பாரதியார் தமிழருக்குச் செய்த நன்றி யாது?
7. நாம் சாதாரணமாக யார் யாருடைய பிறந்த நாட்களைக் கொண்டாடுகிறோம்?
8. 12-ஆவது பிரிவில் பாரதியாரின் அவயவங்களுக்கு அடைமொழியாக என்ன என்ன சொற்கள் கொடுக்கப்பட்டுள்ளன?

### கட்டுரை

II (1) பாடத்தில் கூறியவற்றைக் கொண்டு பாரதியாரின் உருவத் தோற்றத்தை வருணிக்க.

(2) உனக்குத் தெரிந்த வேறு யாரேனும் ஒருவருடைய குணாதிசயங்களை எழுதுக.

III இப்பாடத்தின் 11-வது பத்தியைச் சுருக்கிப் பத்து வரியில் எழுதுக.

IV. இப்பாடத்திலுள்ள உவமைகள் அடுக்குத்தொடர் இரட்டைக் கிளவிகளை எடுத்துக் கூறுக.

## 10. பழங்காலத்திய ஊர்திகள்

"முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்"

1. யாவருக்கும் முயற்சியானது செல்வத்தை உண்டாக்கி வளர்க்கும்; அம்முயற்சி இல்லாமை அவர்க்கு வறுமையைக் கொண்டுவந்து புகுத்தி விடும் என்பது அறிஞர்களின் துணிபாகும். இவ்வுண்மையை நாம் நம் அன்றாட வாழ்க்கையில் காணலாம். முயற்சியுடையவன் பல வழிகளிலும் வெற்றி யடைகின்றான். முயற்சியற்றவன் தோல்வி யுறுகின்றான். இன்னும் இவ்வுண்மையை உறுதியாக ஊன்றி விளக்க, ஊர்திகளின் வரலாறும் நமக்கு ஓர் நற்சான்றாகும். ஊர்தியாவது நாம் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குப் போக, ஏறிச்செலுத்துவதற்குக் கருவியாயிருப்பது.

2. முதன் முதல் ஊர்திகள் தோன்றிய வரலாற்றையும், பின்பு அவை நாள் ஏற ஏற வளர்ந்த தன்மையையும், பழங்காலத்தில் அவை இருந்த நிலையையும், ஒரு சிறிது இப்பாடத்தில் காண்போம். பழங்காலம் என்றால் கடந்த பத்தொன்பதாம் நூற்றாண்டின் முடிவு வரையில் எனக்கொள்வோம்.

3. ஆண்டவன் படைப்பில் இயங்குவனவும் இயங்காதனவும் ஆகிய உயிர்கள் உள. இவற்றுள் முன்னையவை இயங்குதிணை, அசைவன, சரம் என்றும், பின்னையவை இயங்காத்திணை, அசையாதவை, அசரம் என்றும் உணரப்படும்.

4. இவற்றுள் இயங்காத் திணையின்பாற்படுவன மரம், செடி, கொடி, புல், பூண்டு ஆகியவையாம். இவை தொட்டறியும் (ஸ்பரிச) உணர்ச்சி ஒன்றினை

மாத்திரம் உடையன. ஆகவே இவ்வெல்லாம் ஓரறிவுள்ள உயிர்களாம். இவைகளும் நம்மைப்போல உயிரும், இருதயமும், உணர்ச்சியும் உடையவை என்பதனை நம்முன்னோர் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே உணர்ந்திருக்கின்றனர். இவ்வுண்மையை ஒப்பாத மேனாட்டினர்களும் உணரும் வண்ணம் தக்க கருவிகளைக் கொண்டு, நம் ஜகதீச சந்திரபோஸ் என்னும் அறிஞர் உறுதிப்படுத்தி நிலை நாட்டினர் என்பதனை இந்நூலில் வேறொரு பாட வாயிலாக உணர்ந்துள்ளோம். இவை இருந்த இடத்தை விட்டு அசையாதவை. ஆகையால் இயங்காத்திணையாம். கல், மண், பொன் முதலியனவும் இயங்காத்திணையாம்.

5. இனி இயங்கு திணையாவன: இவை போக எஞ்சியுள்ள உயிர்ப்பொருள்கள் எல்லாமாகும். இவைகளுள் மக்களொழிந்த மற்றவை எல்லாம் தொட்டறியும் உணர்ச்சியுடன் சுவைத்தல், முகத்தல், காணல், கேட்டல் ஆகிய ஐவகை உணர்ச்சியைப் பெற்றனவாம். மக்கள் தாமும் இவ்வைவகை உணர்ச்சியுடன் பகுத்துணர்வும் பெற்று ஆறு உணர்ச்சியும் பொருந்திய ஆறறிவுயிர்களாம். இவை யாவும் தாமாகவே ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்து அசையத் தக்கனவாகையால் இயங்கு திணையாம். இவைகளுள் பகுத்தறிவுள்ள மக்கள் மாத்திரம் தங்கள் வாழ்க்கைக்கு வேண்டியவற்றைச் செய்தமைத்துக் கொண்டனர்.

6. மக்கள் தோன்றிய காலத்திலிருந்து சிலகாலம் வரை, ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்குப்போக நேரும்போதெல்லாம், அவ்விடம் தூரத்திலிருந்தாலும், நடந்தே சென்றார்கள். சிற்றளவுள்ள பொருள்களைக் கைகளில் தாங்கித் தூக்கிக்கொண்டு போனார்கள். மற்றவைகளைத் தரையில் ஈர்த்துக்கொண்டு, அல்லது உறுதியான மரப்பலகைமீது வைத்துத்

தள்ளிக் கொண்டும் இழுத்துக் கொண்டும் போனர்கள். பின்பு தங்களுக்குள்ள பகுத்தறிவின் வாயிலாகச் சில சிறந்த வசதிகளைச் செய்துகொள்ளலாயினர்.

7. உருளையான பொருள்கள் எளிதில் உருண்டோடுவதையும், தங்களால் உருட்டித் தள்ளக்கூடியதையும் கண்டார்கள். கண்டவர்கள் உருளையாகிய மரத்துண்டுகளின் மீது பலகைகளை இணைத்-துப் பொருத்தி, அவற்றின்மீது பொருள்களை ஏற்றி இழுத்தும் தள்ளியும் வந்தனர். பின் அவற்றை இழுப்பதில் உள்ள வருத்தங்கண்டு மரத்தால் உருளைகளைச் செய்து உருண்ட கிளையிலும், மூங்கிலிலும் அவற்றைக் கோர்த்து, அவற்றின்மீது பலகைகளை இணைத்து வண்டியமைத்துக் கொண்டனர். கிளையும் மூங்கிலும் உறுதியில்லாமையை நோக்கி, இரும்பினல் அச்சு அல்லது இருசு செய்து, உருளைகள் கோர்த்து, வண்டியிழுத்து மகிழ்ந்தனர்.

8. இன்னும் சில காலத்திற்குப்பின், அவ்வண்டியைத் தாங்கள் இழுப்பதுபோல, விலங்குகளும் இழுக்கக்கூடும் என்றும், அதனல் தங்கள் வருத்தம் குறையும் என்றும் எண்ணினர்கள். ஆகவே எளிதில் பழக்கப்படக்கூடிய அமைதியுள்ள எருதுமாடுகள், எருமைக் கிடாக்களைப் பழக்கிக்கொண்டு வண்டியிழுக்கலாயினர். பின்பு குதிரை கோவேறு கழுதை முதலியவற்றையும் வண்டியிழுக்கப் பழக்கி உபயோகித்தனர். அவ்வண்டிகள்மீதும் அவ்விலங்குகள் மீதும் ஒட்டகம், யானை போன்றவைகள்மீதும் தாங்கள் ஊர்ந்து போகக்கூடும் என்பதை யுணர்ந்து, ஊர்வதற்கும் அவற்றைப் பழக்கி அவற்றின் மீதும் ஏறி ஊர்ந்து சென்றனர். மக்களின் அறிவு முதிர முதிர வண்டிகளின் அமைப்பும் பல விதப்பட்டது. இவ்வண்டிகள், இன்று கிராமங்களில் காணும் மேற்கூண்டில்லாத மொட்டைவண்டி முதல் பெரும் நகரங்



களில் காணும் நான்கு சக்கரவண்டிவரை முன்னேற்ற மடைந்து, அவ்வவ்விடங்களுக்குத் தக்கப்படி மாறுதல் அடைந்துள்ளன.

9. இன்னும் பொறி (இயந்திரக்) கருவியறிவு வளரவளர, காலால் மிதிக்கப்படும் இரட்டை உருளைகளையுடைய துவிச்சக்கர வண்டியும் மூன்று சக்கர வண்டியும் அமைக்கப்பட்டு எங்கும் பரவலாயின. பலருக்கு இவை நற்பயன் தரலாயின.

10. இவைகளே யல்லாமல் நீராவியால் இயக்கப்படும் வண்டிகளும் ஏற்பட்டன. பொறி (இயந்திர) அறிவு முன்னேற முன்னேற, பொறியமைப்புடன் புகைவண்டி முதலிய பலவகை வண்டிகள் அமைக்கப்பட்டன. அவைகளை இயக்க, நீராவி உபயோகிக்கப்பட்டது. இந் நீராவி, இயக்கும் ஆற்றலை உடையது என்பதை முதன் முதலாகக் கண்டு வெளியிட்டவர் இங்கிலாந்து தேசத்து ஜேம்ஸ்வாட் என்பவராவார். இவருக்கு ஐம்பதாண்டுகளுக்குப் பின் ஜியார்ஜ் ஸ்டீவென்சன் என்பவர் நீராவியின் உதவியால் ஓட்டவல்ல புகைவண்டியினை அமைத்து ஓட்டிக்காட்டினார். அதுமுதல் நீராவியால் உந்தப்பட்டு ஓடும் பலவகை வண்டிகள் ஏற்பட்டு, பன்னூறு மைல்கள் மிக விரைவில் சுருங்கிய கால அளவில் ஓடவல்லனவாகி, மக்களுக்குப் பெரிதும் பலன் தரலாயின.

11. மேலும், மின்சாரத்தின் ஆற்றலைக் குறித்த அறிவும் பெருகலாயிற்று. இதைக் கொண்டு சிறந்த மேதாவிகள், தண்டவாளத்தின்மீது மின்சார இயக்கத்தால் ஓடவல்ல வண்டிகள் செய்து எங்கும் ஓடச் செய்தனர். இவைகள் அன்றாட வாழ்க்கையிடையில் மக்கள் நடை வருத்தத்தைக் குறைக்கின்றன.



12. இதுவரையில் தெரிவிக்கப்பட்டவை நிலத்தின் மீது மக்களுக்குப் பயன் படும் ஊர்திகளின் தோற்றமும் வளர்ச்சியுமாம். இனி நீர் மேற்செல்லும் ஊர்திகளைப்பற்றி நோக்குவோம். நீரில் நீர்வாழ்வன எளிதில் நீந்திச்செல்வதைப் பார்த்த முற்கால மக்கள், அரிதில் முயன்று நீந்தக் கற்றனர். என்றாலும், நீர் மேல் நீந்துவது வருத்தம் தருவதாகவும், நெடுந்தூரம் செல்வதற்கு அருமையுடையதாகவும், நீர்வாழ் உயிர்களால் துன்புறுதல் முதலியவற்றால் நேரும் அச்சத்திற்கு இடந்தருவதாகவும், பளுவான பொருள்களைத் தாங்கிப் போகக்கூடாததாகவும் இருக்கக் கண்டு கலங்கினர்.

13. ஆகவே மக்கள் இதற்கு எளிய வசதி தேடலாயினர். நீர்மேல் மரக்கட்டை மரப்பலகை முதலியன எளிதில் மிதப்பதைக் கண்டனர். அம்மரக்கட்டை மரப்பலகைகளை மிதவைகளாகக் கொண்டு ஊர்ந்து சென்று களித்தனர். அவற்றின் மீது பொருள்களையும் ஏற்றிச் சென்று பார்த்தனர். மரங்களைக் குடைந்து ஓடங்களாகவும் படகுகளாகவும் உபயோகித்தனர். இதனிடையில், நீர்மேல் பாதி மடிந்து வீழும் இலை முதலியவை காற்றினால் வேகத்துடன் உந்தப்பட்டு ஓடுவதைக் கண்டனர். தங்கள் படகிடையில் உயர்ந்த தம்பம் நாட்டிப் பாய்கட்டி ஓட்டிப்பார்த்தனர். அப்போது அது பன்மடங்கு விரைந்தோடுவதைக் கண்டு மகிழ்ந்தனர். ஆயின், அவை காற்று வாட்டத்தின் படியே அடித்துச்செல்லப் படுவதையும், தாங்கள் விரும்பும் இடத்துக்குத் திருப்பக் கூடாமல் இருப்பதையும் கண்டு யோசித்து, அவ்வாறு செய்வதற்குரிய கருவியாகச் சுக்கானைச் செய்து அமைத்தனர். நீரை அடித்துத் தள்ளிப் படகைச் செலுத்தத் துடுப்புகளையும் உபயோகித்தனர். சுக்கான் உதவியால் தாங்கள் கலத்தைத் திருப்பவும், துடுப்புதவியால் காற்றில்லாதபோது அதைச் செலுத்தவும் வசதி

செய்து கொண்டனர். இம்மரக்கல வாயிலர்க மக்கள் கடல்மீது நெடுந்தூரம் சென்று திரும்பினர்.

வாணிபம் செய்யவும், போர் மேற்செல்லவும், மக்கள் இம்முறையில் சிறு மரக்கலம் பெருமரக்கலம் வகுத்தனர். பலவகை மிதவை, ஓடம், படகு, தோணி முதலியனவும் தோன்றின. நீராவியின் பலனும் பொறிகளின் உதவியும் உணரப்பட்டபின் நீராவிக் கப்பல்களும் ஏற்பட்டன. இவை கடல் வாழுயிர்களால் அழிக்கப்படாதபடி உலோகத் தகடுகளால் வெளிப்பக்கம் மூடப்பட்டுள்ளன. இவைகளெல்லாம் நீர்மேல் ஊர்திகளே.

14. நிலத்தின் மீதும் நீர் மீதும் ஊர்திகள் அமைத்த மக்கள் சோம்பியிராமல் விண்மீதும் ஊர்திகள் செலுத்த எண்ணினர். நம் நாட்டில் அத்தகையவான ஊர்திகள் செய்து நம்மவர் விண்ணில் ஊர்ந்தனராக நம் இதிகாச புராண காவியங்களில் காண்கிறோம். அவைகளில் புஷ்பக விமானம், தூங்கெயில் அரணம், மயிற்பொறி, வலவன் ஏவாவன ஊர்தி முதலிய பெயர்கள் குறிப்பிட்டிருக்கக் காண்கிறோம். இவை புலவருடைய கற்பனைப் பெயர்களே யன்றி அக்காலத்தில் இவை உண்மையாக இருந்தனவல்ல என்கின்றனர். வேறு சிலர், "இவை அக்காலத்தில் இருந்தனவே; ஆயின், இவற்றின் அமைப்பு முறை மறைக்கப்பட்டிருந்து மறந்தொழிந்தன" என்பர். அக்காலத்தில், நம் நாட்டு மக்களிடையில் வானத்திடை செல்லும் எண்ணமும் எதிர் நோக்கமும் இருந்திருக்க வேண்டும் என்கின்றனர் மற்றுஞ் சிலர். எது எவ்வாறுயினும் இப்பெயர் கண்ட நம்மவர் உண்மையாக உழைத்திருப்பின் இந்நாட்டிடையில் பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே வான ஊர்திகளில் ஏறிச் சென்று வந்திருக்கலாம். ஏன்?



"உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ, கழப்பின் வாராக்கையறு வுளவோ" என்றார் அல்லவோ நம் பட்டினத்தடிகள். பன்னெடுங்காலமாக நம்மவர் தம் உழைப்பை மறந்து சோம்பியிருந்ததன் பயனாக உலகில் தாம் அடையக்கூடிய புகழைக் கைவிட்டனர்.

இது நிற்க, ஐரோப்பாவில் கடந்த நூற்றாண்டின் இறுதியில் வானத்தில் ஊர்ந்து செல்ல வல்ல புகைக் கூண்டு முதலிய அமைத்தனர். இவைகளின் வாயிலாக வானில் செல்லும் வகையையும் கண்டனர் மேனாட்டினர். இவ்வான வூர்திகள் இன்று பல்வேறு வகையில் முன்னேறிப் பலவசதிகளை அளிக்கின்றன.

இன்றைய நிலம் நீர் விண் ஊர்திகள் அனைத்தையும் அமைத்த பெருமை மேனாட்டினரதே. நம்மவர் சோம்பலால் அப்பெருமை இழந்து வெறுவாய் மெல்ல நேர்ந்துள்ளது. இதற்கு ஓரளவில், இந் நாட்டிலே வேற்றுவர் ஆட்சியும் தடைக்காரணமாகும். இனி ஆண்டவன் அருளால் இந் நாட்டினர் எல்லாத் துறைகளிலும் முன்னேறுவாராக.

## அரும் பொருள்

திரு - செல்வம். முயற்றின்மை - முயற்சி இல்லாமை. இன்மை - வறுமை. திணை - குலம், சாதி. எஞ்சி - மிகுந்து. அண்மையது - அருகில் உள்ளது. சேய்மையது - தூரத்தில் உள்ளது. உருளை - சக்கரம். இணைத்து - சேர்த்து. அமைதி-சாந்தம். ஆற்றல் - வல்லமை. பன்னூறு - பலநூறு. சுக்கான் - கப்பலைத் திருப்பிச் செலுத்தும் கருவி. விண் - ஆகாசம். தூங்கு - அசையும். எயில் - மதில். அரணம் - கோட்டை. வலவன் - சாரதி. பொறி- விதியால் வரும் செல்வம். ஆள்வினை - முயற்சி.

## பயிற்சி

1 விடை தருக :—

1. முயற்சி, உண்மை இன்மைகளின் பயன் கூறுக.
2. இயங்கு திணை இயங்காத்திணை யாவை ?
3. இரண்டு திணைகளுக்கும் உள்ள வேறுபாடு யாது விளக்குக :
4. ஊர்தி தோன்றிய விதம் யாது ?
5. வண்டியமைந்த விதத்தைக் கூறுக.
6. நிலமேற் செல்லும் ஊர்திக்கு உதவும் விலங்குகள் யாவை ?
7. நிலமேற் செல்லும் ஊர்திகளின் பெரும்பிரிவுகளைக் கூறுக.
8. ஊர்திகளுக்குத் துணை ஆகியவை யாவை ? எவ்வாறு ?
9. வண்டி வகைகளைக் கூறி விளக்குக.
10. நீர் மேற்செல்லும் ஊர்திகள் தோன்றிய வரலாறு யாது?
11. பழங்காலத்திய விண் ஊர்திகளைப்பற்றித் தெரிவது யாது?
12. விண்ணூர்திகளில் சில சொல்லுக.
13. நம் நாட்டவர்மீது சாரக்கூடிய பழி யாது ?
14. அப்பழிக்குக் காரணம் யாது ?

11 யாதாயினும் ஒருவித ஊர்தியைப் பற்றிச் சுருக்கி ஒரு பக்கத்தில் ஒரு கட்டுரை வரைக.

111 பட்டினத்தார் கூறியது யாது? விளக்குக.

# 11. ஜேம்ஸ் வாட்டும் ஜியார்ஜ் ஸ்டீவென்சனும்

## (நீராவி நிபுணர்கள்)

*அறிவுடையார் எல்லா முடையார் அறிவிலார்*
*என்னுடைய ரேனு மிலர்.*

1. அறிவு ஒன்றினைப் பெற்றுள்ளவர் வேறு எதனைத் தம் இல்லாதவராக இருப்பினும் எல்லாம் உடையவர் ஆவார். ஆயின், அறிவொன்றினை இல்லாதவர், வேறு எப்பொருளை உடையவராக இருப்பினும் ஒன்றும் இல்லாதவரே ஆவர். இவ்வறிவு ஒன்றே எதனையும் அளிக்கவல்லதாக இருக்கின்றது.

2. இவ்வறிவு மங்காதபடி முயன்று வளர்த்த தன் பயனாக, மேனாட்டினர் இன்றைய உலகில் ஆற்றல் செல்வம் செல்வாக்கு முதலிய யாவும் படைத்துள்ளார்கள். மக்கள் உலகெங்கணும் நிலத்தின்மீதும் நீர்மீதும் ஓடி உலவிவருவதற்கேற்ற நீராவிப் பொறிகளை அமைத்துத் தந்ததும் இவ்வறிவே. இந்நீராவியின் உதவியால் கணக்கற்ற வேலைகள் செய்யப்பட்டு, மக்கள் வாழ்க்கை எளிதில் நடத்தல் கூடியதாகிறது. ஆகவே, தம் அறிவினைக்கொண்டு இந்நீராவியின் ஆற்றலையும், அதன்வழி புகைவண்டி ஓடக்கூடியதையும் கண்ட இரு பேரறிஞர்களின் வரலாற்றை அறிவோமாக.

### 1. நீராவியின் ஆற்றல் கண்ட ஜேம்ஸ்வாட்

3. உலகம் பரவும் ஐரோப்பியநாட்டு பிரித்தானியத் தீவின் வடக்கில் உள்ள ஸ்காட்லண்டின் கிரீனக் பட்டணத்தில், ஓர் சாதாரண குடும்பத்தில் கி. பி. 1736-ல் பிறந்தவர் ஜேம்ஸ் வாட். இவர் இளைஞராக இருக்கும் பொழுது, ஒரு நாள் மிகக் குளிராக இருந்த

படியால், வீட்டுக்கதவுகளும் பலகணிகளும் மூடப் பெற்றுத் திரைகளும் விடப்பட்டன. குளிர்தீர வெப் பம் உண்டாக்கும் பொருட்டு நெருப்பு மூட்டமும் போடப்பட்டிருந்தது. அவ்வடுப்பின்மீது, வெந்நீர்க் கரகம் ஒன்றில் நீர் கொதித்துக் கொண்டிருந்தது. ஜேம்ஸ் வாட்டின் கிழத்தாயார் தேநீர் தயாரித்துக் கொண்டிருந்தாள்.

4. அவ்வேளையில் வெந்நீர்க் கரகத்தின் மூக்கின் (குழாய்) மூலம், நீராவி "உஸ் உஸ்" என்று புறப்பட் டது. அங்கு குளிர் காய்ந்து கொண்டிருந்த இளைஞ ராகிய வாட் சோம்பியிராமல் அந்த நீராவியினையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தார். அவர் ஒரு தாழ்ந்த பீடத்தின்மீது அமர்ந்து முழங்கைகளை முழங் கால்களின்மீது ஊன்றி, இருகன்னத்தையும் அக்கை களால் பற்றிக்கொண்டு, வெந்நீர்க் கரகத்தினின்றும் குழாய் வழியே விரைந்து வெளிவரும் நீராவியினையே கண்ணுங் கருத்துமாய் உற்று நோக்கிக் கொண்டு இருந்தார். அதில் ஓர் இயல்பும் வியப்பும் அவ ருக்குத் தோற்றிற்று. அவர் அசைவின்றி அதையே நோக்கினர்.

5. கொதிநீரின்றும் வெளிவரும் நீராவி விந்தை விந்தையாகச் சுழன்றது. அது வரவர மெலிந்து மே லெழுந்து கண்ணுக்குத் தெரியாது மறைந்தது. சிற் சில வேளைகளில் திரண்டு கூட்டமாய்க் கூடி அக்கர கத்தின் மேல்மூடியையும் ஆவி மெல்ல மேலே கிளப்பி வெண்ணிற ஆவியாய் "குப் குப்" என்று வெளியேறி வந்துகொண்டிருந்தது. அது வெளியேறும்போதும் மூடியானது திறப்பதும் வெளியேறியபின் மூடிக் கொள்வதுமாக இருந்தது. இந்த ஓசையும் காட்சி யும் ஜேம்ஸ் வாட்டுக்கு இனிமையாயிருந்தது. இந்த ஆவியின் ஆற்றலால் பல அரிய வேலைகளையும் எளிய முறையில் செய்ய இயலும் என்ற ஓர் கனவுக் காட்சி

யும் வாட்டின் உள்ளத்தில் தோன்றித் தோன்றி மறைந்து கொண்டிருந்தது.

6. ஆனால் அவருடைய கிழத்தாயாருக்கோ அவர் உள்ளத்தில் உலவுவதொன்றும் தோன்றவில்லை. அவள் தான் நாள்தோறும் காணும் நீராவியில், புதுமை யாதுளது என்று எண்ணினாள். தன் மகன் போலும் சோம்பேறியும் பைத்தியக்காரனும் உண்டோ என்று தன்னைக் காணவந்த தன் தோழி ஒருத்தியிடமும் கூறினாள். இதனிடையில் தேநீர் தயாராகவே, அவள் "ஜெம்மீ! ஜெம்மீ! தேநீர் அருந்த வா" என்று கூப்பிட்டாள். நீராவிக் கனவி லாழ்ந்த ஜெம்மிக்கு அவள் அழைத்தது கேட்கவில்லை. உடனே தாய்க்குக் கோபம் பிறந்து, "ஜெம்மீ! வா, தேநீர் அருந்த. இல்லையேல் தலை நோகக் குட்டுவேன் பார்" என்று உரக்கக் கூவினாள். இளைஞர் உள்ள நிலை எவ்வாறிருக்கும். ஆயினும் வாய்திறவாமலும் மனம் கலங்காமலும் சென்று, தேநீர் உண்டு திரும்பிய ஜெம்மியின் காட்சியும் கனவும் மீளத்திரும்பின.

7. அன்றிருந்து ஜேம்ஸ் நீராவியின் ஆற்றலைப் பலவிதமாக ஆராய்ந்து கண்டு வருவாராயினர். அவர் நீராவியை ஒரு பாத்திரத்தில் அடைத்து வைத்த போது அது மேலும் கீழுமாகச் சுழல்வதை உணர்ந் தார். பின்பு சுழலும் நீராவியிடையில் ஒரு மரத் துண்டையிட்டுப் பார்த்தனர். அத்துண்டு நீராவி யுள் சுழல்வதையும் அறிந்தார். இவ்வாறு சிறு வயதி லிருந்து பல முயற்சிகள் செய்து உழைத்து வந்து நீராவியின் உதவியால் பலவிதப் பொறிகளை இயங்கச் செய்து, அளவற்ற தொழில்களைச் செய்யலாம் என்ப தனை யாவருக்கும் காட்டினார். இவர் புகழ் எங்கும் பரவியது. அவர் முதன் முதலாக நீராவியின் ஆற்ற லைக் கண்டு உலகிற்கு உதவிய பேருபகாரி; ஆதலால் அவருக்கு அரசாங்கத்தார் "நைட்" பட்டம் கொடுத்து ஸர் ஜேம்ஸ்வாட் என்று அவரை மிகவும்

பெருமைப்படுத்தினர். இன்றைய நீராவியின் செயலெல்லாம் அவருடைய அற்புத அறிவின் செயலேயாம்.

## 2. புகைவண்டி ஓட்டிய ஜியார்ஜ் ஸ்டீவென்சன்

8. இங்கிலாந்து நிலக்கரிச் சுரங்கம் ஒன்றில் கூலிவேலை செய்தவர் ஒருவருடைய மகனுவார் ஜியார்ஜ் ஸ்டீவென்சன். ஏளிய நிலையுற்ற இவர் தந்தை தம் மனைவி மக்களுடன் ஒரு சிறிய அறையில் குடியிருந்தார். அவருடைய குடும்பவாழ்க்கை நடைபெறுவதும் அருமையாக இருந்தது. ஆதலால் ஸ்டீவென்சன் இளமையிலேயே ஆன் மேய்க்கும் பணி பூண்டு, ஊரவர் கொடுக்கும் ஊதியத்தைத் தம் தந்தையாருக்கு உதவிவந்தார். கல்வி யறிவில்லா ஸ்டீவென்சன் தம் ஓழிவு நேரங்களில் தந்தையாருடன் சுரங்கத்திற்குச் சென்று அங்குள்ள பொறி (இயந்திர) அமைப்புக்களையெல்லாம் ஊன்றி நோக்கிச் சிறிது சிறிதாக இயந்திர உணர்ச்சி பெற்று வந்தார். சிறிது காலத்தில் சுரங்கத் தலைவர் அவருக்கு நீர் இறைக்கும் ஒரு இயந்திரப் பொறுப்பளித்தார். ஸ்டீவென்சனும் ஊக்கத்துடன் அப்பணியாற்றிவந்தார்.

9. பொறிகளைக் குறித்த நூற்களையெல்லாம் படிக்கவேண்டுமென்ற பேரவா ஸ்டீவென்சனுக்கு எழுந்தது. அவர் இளமையில் கல்வியறிவு பெறவில்லை. ஆகையால் பகலில் நிலக்கரிச் சுரங்க வேலைசெய்து, ஒரு இராப்பள்ளியில் நெடுங்கணக் கெழுத்துக்கள் கற்றுச் சிறு நூல் பெருநூல் படித்துப் பின்பு பொறி நூற்களைக் கற்று ஐயமறத் தெளிந்தார். இவ்வாறு தெளிந்தவர் சுரங்க வேலை செய்யும் பகற்போதுபோக, இரவில் மேலும் மேலும் இயந்திர சாஸ்திரங்களை வீட்டில் படிப்பதும், ஓய்ந்த வேளைகளில் செருப்புத்

தைப்பதுமாய் வீண்பொழுது போக்காத்வராயினர். இம்முறையில் நீராவியந்திரங்களைக் குறித்த பழக்கமும் அனுபவமும் அவருக்கு முதிரவே, பல சுரங்கத்தலைவர்கள் தங்கள் தங்களிடம் வந்துழைக்குமாறு ஸ்டீவென்சனை வேண்டினர்.

10. அவர் பற்பலவிடங்களில் புதியனவாகிய அரிய வேலைகள் பலவற்றைச் செய்து காட்டி வந்தார். அவ்வண்ணமே கில்லிங்வொர்த் சுரங்கத்தில் ஸ்டீவென்சன் தண்டவாளங்கள்மீது நிலக்கரி வண்டித்தொடர் ஒன்று ஓடுமாறு முயன்று செய்து வெற்றி பெற்றார். இக்கல்வெற்றியால், பல குதிரைகளின் வேலை குறைந்ததுமல்லாமல், பல கூலியாட்களுடைய போக்குவரத்து நிலையும் மிகவும் எளிதாயிற்று. இம்முறையில், புகைவண்டியும் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு மக்களை ஏற்றிச் செல்வதும் எளிதென்பது உணரப்பட்டது. இதனால் ஸ்டீவென்சன் புகைவண்டி நிபுணர் என்று புகழப்பட்டனர்.

11. இதைக்கண்ட சிலர் லிவர்பூரிலிருந்து மான்செஸ்டருக்கு இருப்புப் பாதை அமைத்துத் தரும்படியாக ஸ்டீவென்சனை வேண்டினார்கள். அவர் இருப்புப் பாதை அமைத்துக் கொண்டிருக்கும்போது பலர் பலவாறாகப் பேசிக் கொண்டனர். 'புகைவண்டி மக்களை அழிக்குமென்பார்' சிலர்; 'கிராமங்கள் எரிந்துகரிந்து விடும்' என்றனர் வேறு சிலர்; 'புகையால் நிலத்தின்மீது ஆடு மாடுகளும், விண்ணில் பறவைகளும் அழிந்துவிடும்' என்றனர் மற்றுஞ் சிலர். ஒரு பத்திரிகாசிரியரும் 'ஜனங்களைப் புகைவண்டியில் ஏற்றிச் செல்வதைவிட, பாணம் விட்டு அவர்களைக் கொல்லலாமே' என்று பதைத்தனர். ஸ்டீவென்சன் இவைகளைக் கருதாமல், தாம் அமைத்த புகைவண்டி இயந்திரத்துக்குப் 'பாணம்' என்ற பெயரிட்டு, லிவர்பூரில் மான்செஸ்டர் இருப்புப் பாதையின்மீது, ஒரு புகைவண்டித் தொடரும்

ஓட்டிக் காட்டினர். "பாணம்" என்ற அந்தப் புகை



வண்டி யந்திரம் மற்ற வண்டிகளை இழுத்துக்கொண்டு ஒரு மணிக்கு முப்பதுமைல் தூரம் ஓடிற்றென்பர்.

இவ்வாறு ஸ்டீவென்சன் ஜேம்ஸ் வாட் கண்ட கனவை நனவாக முடித்தனர்.

அன்றிருந்து ஸ்டீவென்சனும் அவர் பெற்ற மக்களும், புகைவண்டி இயந்திரச் சாலையொன்று நிறுவிப் பல நாடுகளுக்குப் புகைவண்டி இயந்திரம் அனுப்பினர். ஆகவே அவர்களுக்குப் பெருஞ் செல்வம் திரண்டு பெருமிதமாக வாழ்ந்தனர். இது அறிவின் நற்பலனாகும்.

## அரும்பதம்

நிபுணர் - கலையில் வல்லவர். அளிக்க - கொடுக்க. கரகம் - மூக்குள்ளபாத்திரம். விந்தை - அதிசயம். தோழி - சிநேகிதை. அருந்த - குடிக்க. உள்ளநிலை - மனநிலை. ஆன் மேய்க்கும் - மாடு மேய்க்கும்.

## பயிற்சி

I. விடைதருக:—

1. அறிவின் அருமை பெருமையை விளக்குக.
2. நீராவி நிபுணர்கள் யாவர் ?
3. நீராவியின் ஆற்றல் எவ்வாறு காணப்பட்டது.
4. ஜேம்ஸ் வாட் கண்ட கனவுக் காட்சி யாது ?
5. ஜேம்ஸ்வாட் பெற்ற பெருமை யாது ?
6. ஸ்டீவென்சனின் இளமை வரலாற்றைக் கூறுக.
7. ஸ்டீவென்சன் பொறியறிவு பெற்ற விதம் யாது ?
8. அவர் பொறியறிவைப் பெருக்கிய திறம் கூறுக.
9. ஸ்டீவென்சன் புகை வண்டி அமைத்து ஓட்டிய ஆற்றலை விளக்குக.
10. அவர் முதன் முதல் அமைத்த இருப்புப் பாதை யாது ? அப்போது கூறப்பட்ட குறை யாது ?
11. கூறப்பட்ட குறையின் பயன் யாது ?

II. (1) ஜேம்ஸ்வாட், (2) ஸ்டீவென்சன் இவர்கள் வரலாற்றைச் சுருக்கித் தனித்தனி ஒரு பக்கத்துள் வரைக.

# 12. செஞ்சி மகிழ் செலவு*

மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழல்
காடும் உடைய(து) அரண்.

1. நான் சென்னைத் தங்கசாலைத் தெருவிலுள்ள, தொண்ட மண்டலத் துளுவவேளாளர் உயர்தரப் பள்ளியின் ஆரும் வகுப்பு மாணவன்; செங்கோன் என்பேர். என்னைத் தலைமையாகக் கொண்டு, என் வகுப்பு மாணவரில் எழுவர் கூடிய குழு ஒன்று, ஓர் மகிழ் செலவு (உலா) செல்ல எண்ணியது. குழுவினர் ஒவ்வொருவரும் தத்தம் உளப்போக்கிற்கு இயைந்த படி, செலவிற்கியைந்தனவாகப் பல இடங்களைக் குறித்தனர். முடிவில் நான் என் தலைமை உரிமையில் அல்ல, தனி உரிமையில், வரலாற்றுத் தொடர்புள்ள செஞ்சிக்கோட்டைக்குச் செல்லலாமே யெனக் குறிப் பிட்டேன். யாவரும் ஏற்று அவ்விடத்திய மகிழ் செலவிற்கு, மகிழ்ந்து ஒப்பினர்.

2. பின்பு செலவிற்குரிய நாளும், பணச் செலவும் குறித்துக் கருதினம். பள்ளியில் வெள்ளி விடுமுறை நாளைச் சேர்ந்த சனி ஞாயிறு கூடிய மூன்று நாட்கள் மகிழ் செலவிற்கு அமைவுடையதாகும் என்றும், தலைக்குப் பத்து ரூபாய் கட்டணம் விதித்துக் கொள்வ தென்றும் முடிவு கட்டினேம். ஆயின், இதில் ஒரு நெருக்கடி தோன்றிற்று. எங்கள் குழுவினரில் ஒரு வர் இனியன் என்பார்! பெற்றோர் அற்றவர்; தம் உறவினர் ஆதரவில் உள்ளவர்; தம் கட்டணம் செலுத்தும் வகையில்லாதவர்; இக் கட்டண விதிப்பு அவரை எங்களுடன் கூட்டிச் செல்லுதற்குத் தடையா யிருந்தது. இனியன் இல்லாத மகிழ் செலவும் மகிழ்ச்சி

*செஞ்சிக்கோட்டை உல்லாசப் பிரயாணம் அல்லது செஞ்சி மகிழுலா.

தருமா ? அது இனிமையாயிராதே ! ஆகவே, அவரைத் தவிர மற்றவர் அறுவரும் அவர் கட்டணப் பகுதியைப் பங்கிட்டுக் கொள்வதென்றும், அதை நிறைவுறுத்த மற்றைய அறுவரில் ஒவ்வொருவரும் இரண்டு ரூபாய் மேலிட்டுக் கூட்டிப் பன்னிரண்டு ரூபாய் செலுத்துவதென்றும் முடிவு செய்தனம். அன்றியும் கூடிய வரையில் செட்டும் சிக்கனமுமாய்ச் செலவு செய்து எஞ்சிய பணத்தை, எங்கள் குழுவில் இனி இதுபோல் எதிர் பாராது நேரிடும் தடை தவிர்க்க, ஒதுக்கி வைக்க வேண்டும் என்றும் தீர் மானித்தோம். இனியனே பண முடிப்பாளராகவும், செலவைக் கண்காணிப்பாளராகவும், நான் மகிழ் செலவு நடத்துவோனாகவும் இருக்க யாவரும் ஒரு மனப்பட்டனர். அவரவர் கட்டணம் பன்னிரண்டு ரூபாயும் பணமுடிப்பாளர் இனியனிடம் சேர்க்கப்பட்டுக் கையிருப்புத் தொகை எழுபத்திரண்டு ரூபாயாயிற்று.

3. நாங்கள் எதிர்பார்த்தபடி ஒரு வெள்ளி விடு முறை கூடிய சனி ஞாயிறு வருதலும், எங்கள் மகிழ் செலவுக்குழு புறப்படத் தயாராயிற்று. செல்லுமிடத்தில் உணவுக் குறைபாடு தோன்றாவண்ணம் வேண்டி யவை அனைத்தையும் எடுத்துச் செல்லச் சித்தம் செய்து விட்டோம்.

4. வெள்ளியன்று காலை ஏழரை மணிக்கு எழும்பூரில் இரயில் வண்டியேறி, செங்கற்பட்டை யடைந்ததும், சிற்றுண்டி யருந்திவிட்டு, அங்கிருந்து மீண்டும் இரயில் மூலம் திண்டிவனத்தை யடைந் தோம். ஆங்கு, ஏற்கெனவே நாங்கள் செய்த ஏற் பாட்டின்படி தயாராக இருந்த மோட்டார் பஸ் ஏறிச் செஞ்சியை நோக்கிப் புறப்பட்டோம்.

5. வழியிடை, தூரத்திலேயே செஞ்சிக் காட்சி யைக் கண்டுகளித்தோம். அது எங்கள் உள்ளத்தைக்

கொள்ளை கொண்டது. செஞ்சியின் பெருமிதத் தோற்றம் எங்கள் உள்ளம் கிளர்ந்தெழச் செய்தது; ஆயின் பராமரிப்பு இல்லாமையால் பாழ்பட்டது போலக் காணும் தோற்றம், கிளர்ந்தெழுந்த எங்கள் உள்ளத்தை இன்னதென்று எங்கள் வாய்கொண்டு சொல்லக்கூடாத வண்ணம், கலக்கிக் குழப்பிவிட்டது. மகிழ்வும் வியப்பும் துயரமும் கலந்த இந் நிலையில் வாய்பேசாது ஒருவாறு நாங்கள் செஞ்சியை அண்மினோம். நாங்கள் இயற்கையோடியைந்த செயற்கையைக் கண்டு மகிழவே செஞ்சிக்குச் சென்றோம். ஆகையின் நாங்கள் எழுவரும் எக்கட்டிடத்திலும் தங்கக் கருதவில்லை. இராஜகிரி அடிவாரத்தில் உள்ள ஒரு ஆலமரத்தடியிற் சென்று தங்கினோம். அது பல விழுதுகளை விட்டு, நிலத்தில் ஊன்றி, அவை மதலைகளாய்த் தன்னைத் தாங்கி நிற்க, விழையத் தக்க ஒரு அழகிய காட்சியளித்தது. எங்கள் உணவுப்பொருள் முதலியவற்றையும் தன்னுதவி (Self help) கருதி நாங்களே எடுத்துச்சென்று வீடுவது என்று முடிவு கட்டி வைத்துக்கொண்டோம்.

6. எங்கள் மகிழ் செலவிற் பிறருக்குத் துன்பந் தராமலும், எங்கட்கு வருத்தந் தோன்றாமலும், நாங்கள் பிறருதவியை நாடாமலும், எங்கள் உணவு வசதி குன்றாமலும் இருக்கும் நிலையைக் குறித்து நாங்கள் சென்னையிலிருந்து புறப்படு முன்னரே கருதியிருந்தோம். ஆகவே, நாங்கள் எளிதாக எங்களுடன் எடுத்துச் செல்லக்கூடிய உடை, படுக்கைகளையே எடுத்துச் சென்றோம். உணவுப் பண்டங்களும் அவ்வாறே; அவை உடல் நலத்தைக் கெடுக்கக் கூடாதவை; சமைக்கும் கருவியும் எங்கள் எழுவருடன் எதிர்பாராது வரத்தகும் ஒருவருடன் எண்மருக்குப் போதிய அளவுள்ள உணவு சமைக்கும் "ருக்மணி குக்கரே". ஒவ்வொருவருக்கும் உடையுடன் நீர்க்கரகமும் இருந்தது. சமையல் ஆட்

களும் நாங்களே. ஆகவே, எங்களுக்கு நாங்களே உதவிசெய்து கொள்ளக்கூடியவர்களாய் "தன் கையே தனக்கு உதவி" என்பதை உறுதிப்படுத்த எண்ணி னோம்.

7. மரத்தடியில் தங்கிய நாங்கள் சிறிது இளைப் பாறிய பின்பு, அளவாகவே இறை வணக்கத்துடன் சிற்றுண்டி அருந்தி, எங்களுடன் கொண்டு சென்றி ருந்த பாலை அருந்தினோம். பின்பு அங்கு எதிர்ப்பட்ட வர்களைக் கொண்டு நாங்கள் காணவேண்டிய காட்சிப் பொருள்களைத் தெரிந்து கொண்டோம்; தேசிங்கு (ஜயசிங்கு) என்னும் மராட்டிய மன்னனால் ஆளப் பட்ட செஞ்சியின் வரலாற்றையும் சுருக்கமாக உணர்ந்தோம்; வியக்கத்தகும் அவன் ஆட்சியின் பெருமையையும் கேட்டோம். செஞ்சிக்கோட்டை தென்னிந்தியாவில் உள்ள மலைத் துர்க்கங்களில், மிக மிகச் சிறந்தது. பகைவர் அணுகக்கூடாத நிலையில் உறுதியும், காவலும், காட்டரணுமாக மலைமீதுள்ள கோட்டையே துர்க்கமாம்.

8. செஞ்சியில் தேசிங்கு ஆண்ட இடத்தில் ரங்கநாத கிரி, கிருஷ்ணகிரி, ராஜகிரி என மூன்று சிறு குன்றுகள் உண்டு. இவை முறையே 300 அடி, 250 அடி, 300 அடி உயரம் உள்ளவை. இவைகளில் முதலில் ரங்கநாதகிரிக்குச் செல்வதென என் குறிப்பின்படி யாவரும் இசைந்தனர். நான் கடந்த ஆண்டில் எங்கள் ஆசிரியரால் நடத்தப்பட்ட மாமல்ல (மகாபலி) புர மகிழ் செலவில் கலந்துகொண்டு, அவருக்கு வலதுகை போல் உதவி வந்தமையால், மகிழ் செலவு நடத்தும் அனுபவம் எனக்கு ஒரு சிறிது வாய்த்துளது. ஆகவே அன்றைய வழி இளைப்பை நோக்கியும், அக் கிரியின் மீது எளிதில் வருத்தமின்றிச் செல்லக்கூடிய அமைதி நோக்கியும், இயற்கை வளக்காட்சியில் இறைவன்

கோயில் உள்ள மலையே பொருத்தமுடையதாக இருக்கும் என்று எண்ணியும், அம்மலைக் காட்சி உசிதமுள்ளதென்று கருதினேன்.

9. நாங்கள் விரையாமலும், மெலியாமலும் மலையேறினோம். வழியிடை அழகிய தோற்றங்களைக் கண்டுகொண்டே சென்றோம். மலை உச்சி அடைந்தோம். மலையின் சுற்றுப் புறக் காட்சி மாலைக்கதிரவன் ஒளியில் மகிழ் மிகத் தந்தது. இருள்வதன் முன் மலை அடிவாரம் அடையவேண்டும். ஆகவே



கோயிலிலுள்ள அழகிய பள்ளி கொண்ட கோலத்துள்ள அரங்கனுடைய அமைதியான திருவுருவத்தைக் கண்டோம். இயற்கைக்காட்சியழகின்பத்தில் ஈடுபட்டு, யாவும் மறந்து ஒருவாறு குவிந்த எங்கள் மனம், அரங்கனின் அமைந்த திருவுருவக் காட்சியால், இன்னும் குவிந்து மகிழ்வுற்றது. கோயில் முன்பிரகாரத்தில் ஒரு

நந்தியாவட்டைச் செடியும் ஒரு எலுமிச்சஞ் செடியும் கடவுள் வழிபாட்டுக்கு நாள்தோறும் முறையே ஒரு பூவும் ஒருபழமும் கொடுப்பதாகச் சொல்லுகிறார்கள். அன்றியும் ஆழமான ஒரு சுனையிலிருந்து கொண்டு வரும் நீரே அரங்கனார் நீராட்டுக்கு உதவுகின்றதென்கிறார்கள். அச்சுனை எக்காலத்திலும் நீர் வற்றுகிறதில்லையாம்! நீரும் பனிக்கட்டி போலும் குளிர்ந்துளது. பின்பு நாங்கள் மலையினின்றும் இறங்கி அன்றிரவு அருகில் இருந்த ஒரு வீட்டில் தங்கினோம். காரணம் புலி முதலிய விலங்குகளின் அச்சமே. இரவு சிற்றுண்டியையே அருந்தி, வெந்நீர் பருகி, மெல்ல உறங்கினோம்.

*10.* மறுநாள் விடியற்காலையில் எழுந்து எங்கள் காலைக் கடனை முடித்துக்கொண்டு, ஆடை துவைத்து, நீராடிச் சிற்றுண்டி உட்கொண்டு, எங்கள் பொருள்களுடன் ராஜகிரி மீது காலை ஏழுமணிப் போதில் ஏறலாயினம். அம்மலைமீதே உணவு சமைத்துச்சாப்பிட எண்ணங்கொண்டோம். ஆகவே உச்சிப் போதுக்குள் ராஜகிரிச் சுற்றுக்காட்சியை முடித்துக் கொள்ளக் கருதி விறுவிறுப்பாக மலையேறினோம்.

*11.* தேசிங்கு மன்னனுக்கு ராஜகிரி வாழிடம்; கிருஷ்ணகிரி அவன் அரசாட்சியின் அலுவலகம். ராஜகிரிமீது எளிதாக ஏறுவதற்குப் பாறைக் கல்லால் ஒழுங்காகஅமைந்திருந்தபடிகள்மீது ஏறிச்சென்றோம். அடிவாரத்திருந்து இருநூறடிக்கு அப்பால் துர்க்கையின் கோயில் ஒன்றும், அதையடுத்த ஒரு பாறையின் சரிவில் ஒரு பெருஞ்சுனையும் கண்டோம். சுமார் இருநூறு சதுர அடி பரப்புள்ள அச்சுனையில் தேசிங்கு நீராடுவது வழக்கமாம். அதைச் சுற்றி, உல்லாசமாய் உட்காரத் தக்க சார்மணைகள் உண்டு. அங்குச் சற்றுத் தங்கிச் சுற்றுக் காட்சிகள்கண்டு சிறிது மேலே சென்றோம். அங்கே உன்னதமான ஐம்பதடி உயரம் உள்ள

தான நிலையில், அக்குன்றின் சிகரத்தை நெருங்கி
னோம். அதன்மீது ஏறப் படிகள் இல்லை; நூலேணி
கொண்டு ஏறுவது வழக்கமாம். அதில் ராணி வாழும்
அந்தப்புரம் இருந்ததாம். நாங்கள் நூலேணி இல்லா
தவர்கள். நானும் இனியனும் தத்தித் தொத்தி அதன்
மீது ஏறலாயினோம். மற்றவர்கள் கூடாமையால்
நின்றுவிட்டார்கள். நாங்கள் இருவரும் மிகவும் வருத்
தத்துடன் மேலே சென்றோம். அங்கே சுற்றுச் சுவ



ருடன் எண்கோணவடிவமுள்ள இரண்டு மண்டபங்
கள் உருக்குலையாமல் உள்ளன. அவற்றைச் சுற்றிப்
பாறையை ஆழமாகக் குடைந்தெடுக்கப்பட்ட அகழி
கள் உண்டு. அவற்றைக் கடக்க மரப்பாலம் வேண்
டும். நாங்கள் இருந்தவிடத்திலிருந்தே கண்ட காட்சி
யால், மண்டபங்கள் வாழ்வதற்குத் தக்க அறைகளை
யுடையனவாய் நற்காற்றுபெறக்கூடியனவாய்உள்ளன

என்று உணர்ந்தோம். அங்கிருந்து பார்க்கும்போது தரைமட்டம் பாதாளம் போல் தோன்றியது. அங்கிருந்து இனியனும் நானும் மிகவும் எச்சரிக்கையுடன் இறங்கிவந்தோம். இனியனின் இனிய துணை இல்லாவிட்டால் நான் சிகரத்துக்குப் போகத் துணியமாட்டேன். நாங்கள் திரும்பி வருகிறவரையில், எங்கள் நண்பர்கள் எங்களுக்காக அஞ்சி நடுங்கிக் கொண்டு இருந்தார்கள்; நாங்கள் மீண்டதைக் கண்டு களித்தார்கள்.

12. காலை பதினொரு மணிக்குத் துர்க்கை சுனைக்குத் திரும்பினோம். அங்கு எங்கள் உணவைச் சமைத்துக் கொண்டோம். அவ்வுணவு எளியதும் அன்று; அளவு கடந்த பெருமையதும் அன்று. எங்கள் சுற்றுழைப்பின் களைப்பையும் பசியையும் போக்கத்தக்க இனிய முறையில் அமைந்திருந்தது. அது எங்களாலேயே சமைக்கப்பட்டது; ஆதலின் மிகவும் இனித்ததாக இருந்தது. அன்றியும் நாங்கள் இனியன் பாடிய இனிய இறை வணக்கத்துடன் ஒரு மணிக்கு உண்ணத் தொடங்கினோம். செவிச்சுவையுடன் நாச்சுவையும் சேர்ந்துண்டாகிய இனிமை சொல்லவும் கூடுமோ? இடையிடை இனியனுடைய நகைச்சுவைச் சொற்களும் இனிமை பயந்தன. உண்ட இளைப்பு மாறிய பின் மூன்று மணியானதும் கீழே இறங்கிக் குன்றின் அடிவாரத்தில் உள்ள ஐந்து கோட்டை வாயில்களையும், அவற்றை அடுத்தும் போர்ச்சேவகர்கள் வாழ்க்கைக்கு வசதியாகக் கட்டப்பட்ட கட்டிடங்களையும் கண்டோம். குன்றுக்கெதிரில் மிகப் பெரிய நெற்களஞ்சியமும், எண்ணெய், நெய்முதலியவிட்டுவைக்கக் கூடிய பெரிய கிணறுகளும், போர் வீரர் நாள்தோறும் பயிலத் தகும் சிலம்பக் கூடங்களும், மண்டபங்களும், குதிரை லாயங்களும் சிறிதும் அழிவின்றி இருக்கக் கண்டு பெருவியப்பும் மகிழ்ச்சியும் கொண்டோம்.

13. பின்பு சுற்றுப்புறமுள்ள கிராமத்தவர்களின் எளிய—ஆனால் கவலையற்ற—தூய வாழ்க்கை முறையைக் காணலாயினோம். அவர்கள் வாயிலாகக் கவலையற்ற வாழ்க்கை முறையையும் கற்றோம். அன்றிரவு ஒரு எளிய வீட்டில் தங்கினோம். அங்கு எங்களிடமிருந்த சிற்றுண்டியிற் சிறிது உண்டு வெந்நீர் பருகிய பின், எங்கள் படுக்கைகளை விரித்து அவற்றின் மீது உட்கார்ந்துகொண்டோம். முழு நிலவு பால்போலும் இன்னொளி வீசிற்று. இனியனைப் பாடத் தூண்டினோம். பால் நிலவும் பாட்டினிமையும் ஒன்று கலந்து எங்களை மெய்மறக்கச் செய்துவிட்டன. பின்பு மெல்ல உறங்கினோம்.

14. ஞாயிறன்று விடியற்காலையில் முன்னாள் போலவே புறப்பட்டு கிருஷ்ணகிரியை அடைந்தோம். இது ரங்கநாத கிரிக்குத் தெற்கில் உள்ளது. ராஜகிரிக்கும் இதற்கும் இடையில் கால்மைல் அகலமுள்ள ஒரு வெளியிடமுண்டு. மேலும் கிருஷ்ணகிரிக்கும் ராஜகிரிக்கும் இடையில் நூறடி உயரமும் இருபதடி அகலமும் உள்ள, ஒரு பெரிய மதிற்சுவர் இருக்கிறது. இதன் மீது தேசிங்கு குதிரை ஊர்ந்து சென்று வந்ததாகத் தெரியவருகிறது.

15. கிருஷ்ணகிரியின்மீது ஏறிப்போக இரண்டு வழியுண்டு. அவைகளில் ஒன்று அரசாங்க அலுவலாளர்களும் பொதுமக்களும் செல்ல வசதியானதாகவும், மற்றையது செங்குத்தான படிகளுடன் போர் வீரர் மாத்திரம் செல்ல அமைந்ததாகவும் உள்ளது. குன்றின் உச்சியில், அரசன் மந்திராலோசனை செய்யும் மண்டபம் உண்டு. அதன் நடுவில் அரசன் வீற்றிருக்கும் கல் ஊஞ்சல் உள்ளது. அதன் வேலைப்பாடு அருந்திறம் வாய்ந்தது. சங்கிலி மாட்டுவதற்கு இரண்டு பெரிய வளையங்கள் கல்லிலேயே அழகாகச் செதுக்கப்பட்டுள்ளன. ஊஞ்சலுக்கு இரு புறமும் மந்திரிகள்



உட்காரும் சார்மணைகளும் இனிமையாக விளங்குகின்றன. இவைகள் எல்லாம், நம் நாட்டினரின் பழங்காலத்து அருமை பெருமைகளை விளக்குவனவாக இன்றும் நிலவுகின்றன. தேசிங்கு மன்னனைப்பற்றிப் பலர் பலவாறாகச் சொல்லும் வரலாறு, அவனை நம் கண்முன் இன்றும் காட்டுகிறது.

16. பொதுவாகக் காணுமிடத்து ராஜகிரி கிருஷ்ணகிரிகளின் மேலும் சுற்றிலும் உள்ள கோட்டைச் சுவர்கள் இடிந்தும், அழகிய அகழிகள் தூர்ந்தும் உள்ளன. மக்கள் நடமாட்டக் குறைவால் புலி, கரடி, மயில், மான், குரங்கு முதலியவை மிகப் பலவாக அங்கு குடியேறியுள்ளன. செஞ்சிப் பட்டணம் சிறந்த ஆட்சியில் அமைந்து இருந்த காலத்தில், அது இருந்த நிலையினை இன்று கனவு காண வல்லவர் யாவர் என்று கருதி, யாங்கள் சிறிது கலங்கினதும் உண்டு. அங்கு

இப்பொழுது சிறு குடில்கள் அமைந்த குக்கிராமத்தையே காணலாம். அவற்றைக் காணும் போது கன்னெஞ்சர் உள்ளமும் கரையும்.

17. செஞ்சிக்கு மகிழுலாச் சென்ற எங்கள் குழுவினர் முடிவில், ஆண்டுதோறும் இதுபோன்ற இடங்கள் இரண்டுக்குக் குறையாமல் மகிழுலாச் செல்ல வேண்டுமென்றும், அவற்றின் வரலாற்றைக் குறிப்பிட்டு வெளிப்படுத்தி வரவேண்டுமென்றும், நம் நாட்டின் பண்டைய அருமை பெருமைகளை அறிந்து எங்கும் பரப்ப வேண்டும் என்றும், கூடியவரையில் தமக்குத் தாமே உதவிக் கொள்வதென்றும் தீர்மானித்தனர். இதற்கு ஆண்டவன் திருவருளும் பெரியோர்கள் வாழ்த்துரையும் வேண்டினோம்.

பின்பு நாங்கள், உணவமைத்து உண்டு, செஞ்சிக்குப் புறப்பட்டு வந்த வழியே சென்னைக்குத் திரும்பினோம். திரும்பிய காலத்தில் எங்களிடம் எஞ்சிநின்ற தொகை ரூ. 21-14-3. இது இனியனுடைய திறமையால் எஞ்சியது. இது அடுத்த மகிழுலாவிற்கு ஒதுக்கி வைக்கப்பட்டது.

### அரும்பொருள்

மகிழ்செலவு - மகிழுலா, உல்லாசப்பிரயாணம். மணிநீர் - என்றும் வற்றாத ஆழ்ந்தநீர். மண் - நிலம். குழு - கூட்டம். அண்மினோம் - நெருங்கினோம். விழுது - வேர்; மதலை; தூண். விழைய - விரும்ப. உசிதம் - தகுதி. பிரகாரம் - கோயில் மதிலுக்குள் சுற்றிவருதற்குள்ள வழியிடம். சிகரம் - உச்சி. பயந்தன - தந்தன. அலுவலாளர் - உத்தியோகஸ்தர். நிலவுகின்றன நிலை பெற்றுள்ளன.

### பயிற்சி

1. விடை தருக.

   1. மகிழுலாவின் கருத்து யாது ?

2. நீவிர் வாசித்த இம்மகிழுலா உங்களுக்குப் புகட்டும் ஒழுக்கமும் நேர்மையும் யாவை ?
3. இம்மகிழுலாவின் அமைப்பு முறை யாது ?
4. இம்மகிழுலாக் குழுவினரின் கோட்பாடு யாது ?
5. இக்குழுவினர் செஞ்சியை அடைந்த வழி யாது ?
6. செஞ்சியைக் குறித்து நீவிர் உணர்வது யாது ?
7. செஞ்சி மன்னனைக் குறித்துத் தெரிந்ததைக் கூறுக.
8. மகிழுலாக் குழுவினர் கொண்ட முடிவு யாது ?

II. இம்மகிழுலாவைக் குறித்து ஒரு பக்கத்தில் சுருக்கி வரைக.

III. நீவிர் சென்ற மகிழுலா ஒன்றினைச் சுருக்கி வரைக.

IV. இப்பாடத்தில் காணும் அருந்தொடர்களையும், இனிய பகுதிகளையும் காட்டுக.

---

## 13. நம் உரிமையும் நம் கொடியும்

"ஆடுவோமே—பள்ளுப் பாடுவோமே
ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோமென்று (ஆடு)

1. நாம் பல நூறு ஆண்டுகளாக நம் உரிமையிழந்து பிறருக்கு அடிமைகளாய் உழன்று துன்புற்று வந்தோம். பல நாட்டினரும் பல மொழியாளர்களும் அவ்வப்போது இங்குவந்து நம்மை அடக்கி, நம்முரிமையைப் பறித்து, நம்மில் பெரும்பாலோர் உணவுக்கும் வகையின்றி எப்போதும் உழைத்துப் பசியாலும் பிணியாலும் வருந்திய காலத்துங் கவனியாது, தங்கள் நல்வாழ்க்கையினையும் செல்வப் பெருக்கினையுமே தங்கள் குறிக்கோளாய் இந்நாட்டினை ஆண்டு வந்தனர். கடைசியாகச் சுமார் இரண்டு நூற்றுண்டுகளாக, இமசேது வரையில் எதிரின்றித் தம் ஆட்சியை இந் நாட்டினில் செலுத்தி வந்தவர் ஆங்கிலேயர் ஆவர்.

2. ஆங்கிலேயர் ஆட்சியில் நாம் அடைந்த நன்மைகளும் பல, தீமைகளும் பல. பிற ஆட்சிகளில் நாம் இழந்த வாழ்க்கைநலமெல்லாம் நாம் மீளப் பெறுவதற்கு உதவினார்கள் அவர்கள்; நமக்குக் கல்வியறிவும் நாடாளும் அறிவும் பெருக வகை கோலினார்கள்; நம் வாணிப அறிவு தொழிலறிவு வளரும் வழிகாட்டினர்; உழவு செழிக்கும் திறம் அமைத்தார்கள்; பிணி போக்கும் முறைகள் பெருக்கினார்கள்; நாகரிகமாக நடக்கச் செய்தனர்; அரசியல்துறை பயிலவும் இடம் தந்தனர். செல்வம் செழிக்கச் செய்யும் ஆற்றலும் காட்டினர். என்றாலும் இவையாவும் எல்லவர்க்கும் பயன் தரவில்லை. ஒருசிலரே இவற்றால் பலனடைந்தார்கள். பெரும்பாலோர் துன்புற்றே கிடந்தனர். இன்புறும் சிலரும் முற்றவும் இன்பம் பெற்றாரில்லை. அவர்கள் இன்பத்திற்கும் பல தடைகளுண்டு. ஏன்? அவர்களுக்கு முற்றுரிமை யில்லையே! அவர்கள் நிலையே இதுவானால் மிகப் பெரும்பாலரான ஏழை மக்களின் நிலை யாது? அது சொல்ல இயலாது. பொதுவில் பசியும் பிணியும் கவலையுமே, இந்நாட்டில் ஏழைகளை வருத்திக் கொன்றன. இந்நிலையை எடுத்துச் சொல்லித் துன்பத் தீர்வு பெறுதற்கும் வழியில்லை. ஆங்கில ஆட்சியிலும் மக்கள் பெருந் துன்பம் நுகர்ந்தே யிருந்தனர்.

3. இந்நிலையில், இந்நாட்டு மக்களில் தம் நலம் கருதாது, பொது நலம் பாராட்டிப் பொதுமக்களின் துன்பத்தைப் போக்க, அவ்வப்போது பல பெரியோர்கள் தோன்றிப் பாடுபட்டு உழைத்தும், நன்மை செய்யக் கூடாமல் பெருந் துன்பத்துக்கு ஆளாயினர். பலர் தாக்கப்பட்டனர்; சிறை சென்றனர்; இரத்தம்சிந்தினர்; உரிமைப் பொருள்களிழந்தனர். அவர்கள் தமக்கென வாழாமல் பிறர்க்குரியாளராகத் தம் அரிய உயிரையும், தம் நாட்டு மக்களின் துன்பத்தைப்

போக்கும் நன் முயற்சியுழைப்பில், போக்கிக் கொண்டனர். என்றாலும், இந்நாட்டினர் உரிமையும் இனிய வாழ்வும் பெற்றாரில்லை.

4. இதை நோக்கியே, நம் ஒற்றுமை நலங்கருதியுழைத்து வந்து, கடந்த ஆண்டில் தம் ஆருயிரிழந்துள்ள காந்தியடிகளும், தம் வாழ்நாள் முழுவதும் முதலில் தென்னாப்பிரிக்காவிலும், பின்பு இந்நாட்டிலும் எவ்வருத்தமும் பாராட்டாமல் உழைத்தனர். தம் உடல் பொருள் ஆவி அனைத்தையும் இந்நாட்டு மக்களுக்கு அளித்துப் பலமுறை அடிபட்டும், சிறை சென்றும், உண்ணா நோன்பு இருந்தும், ஆங்கில அரசாங்கத்தினருடன் ஒத்துழைக்காமல் அவர்களுடைய ஆட்சிமுறையைப் பல முறை பல விதத்தில் எதிர்த்தும், அவர்கள் வன்மை சிதறிச் சிந்தச் செய்தனர். பின் 1942-ம் ஆண்டில், ஆங்கிலேயரைக் கண்டித்து அவர்கள் இந்தியாவை விட்டுப் போகத் ('குயிட் இந்தியா' என்ற) தீர்மானமும் நிறைவேற்றுவித்துத் தம் துணைவர்களுடன் சிறையும் சென்றார்.

5. இவருடைய ஒத்துழையா இயக்கத்திற்கும் இந்தியரின் உரிமைக்கான அதி தீவிர முயற்சிக்கும் ஆங்கிலேயர் அஞ்சிக் கலங்கி விட்டனர். ஆகவே, மேல் மேலும், பல உயிர்ச் சேதங்களுக்கும் கஷ்ட நஷ்டங்களுக்கும் தாங்கள் காரணர் ஆகக் கூடாதென்ற நோக்கத்துடன், 1947-ம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் நள்ளிரவில் தங்கள் கைவசமிருந்த இந்திய நாட்டு ஆட்சி உரிமையை நமக்களித்து விட்டுச் சென்றனர். இவ்வுரிமையைப் பெறு நிமித்தம், பல நூற்றாண்டுகளில் அரும்பாடு பட்டுத் தம் ஆருயிர் இழந்தவர்களுக்கும், கடந்த நூற்றாண்டிலும் இந்த நூற்றாண்டிலும் தம் அரிய காலத்தையும் இழந்து சிறைபுகுந்து தாங்கரும் துன்பம் ஏற்றவர்களுக்கும், போரும் படையும் இரத்தச் சேதமுமின்றி நம் நாட்டை

நமக்களித்துச் சென்ற ஆங்கிலேயருக்கும், அதற்கேற்ற வழிவகைகளை அமைத்துழைத்த காந்தியடிகளுக்கும் நாம் நன்றி செலுத்தக் கடமை கொண்டுள்ளோம்.

6. நாம் பெற்ற நம் உரிமைக் கடையாளமாக நாம் ஏற்றுள்ள கொடி, சமவண்ணமாய் மேல் ஆரஞ்சு, இடை வெண்மை, கீழ் பசுமை கலந்த மூவண்ண நிலையில் உள்ளது. இது மூன்று பங்கு நீளமும் இரண்டு பங்கு அகலமும் உள்ளது. இதன் இடையில் உள்ள வெண்மைப் பகுதியில் நீல நிறமுள்ள அசோக சக்கரம் காணும்.

7. இக்கொடி இன்று இந்நாட்டில் பரவாத இடமில்லை. இந்தியாவில் நாடு, ஊர், கோட்டை, கொத்தளம், மலை, வனந்தரம், கடல் முதலிய எவ்விடங்களிலும் ஓங்கிக் கம்பீரமாகப் பறக்கின்றது நம் மூவண்ணக் கொடியானது.

'பாரில் உயர்ந்தமலை இமயமலை - அன்னை
பாரததேவி பாராட்டுமலை
சீரில் உயர்ந்திடும் நம்தேசக்கொடி - அதன்
சிகரம் அணிந்தின்று பறக்குதுபார்''

என்று நம் கவிஞர் தேசிக விநாயகம்பிள்ளை அவர்கள் பாடி மகிழ்ந்துள்ளபடி, இமயச் சிகரத்தினின்று உயர்ந்தோங்கி விரிந்து பறந்து உலகத்தார் யாவரும் புகழும்படி சிறந்து விளங்குகின்றது.

8. இக்கொடியின் மூவண்ணம் இடையில் உள்ள அசோக சக்கரம் ஆகியவற்றின் விளக்கம் உணர்தல் இன்றியமையாததாகும். இக்கொடியினை இன்றுள்ள நிலையில் அமைப்பதற்கெனப் பல அறிவான்ற பெரியார்கள் கூடிப் பலவாறு ஆழ்ந்து கருதிய பின்னரே, இம்முடிவுக்கு வந்தனர். இக்கொடி அமைப்பிற்குப் பலர் பல கருத்துடன் பல காரணம் காட்டுவர்.

எது எவ்வாருயினும், நாம் உண்மையில் உணரவேண்டிய கருத்து ஒன்றினை மாத்திரம் கீழே காண்போம்.

9. மூவண்ணக் கொடியின் மேல் ஆரஞ்சுப் பகுதியின் கருத்தை ஆராய்வோம். இது இந்நாட்டு உரிமைக்காக ஆருயிர் இழந்தவர்களும் சிறைபுகுந்து துன்புழன்றவர்களும், உண்ணு நோன்பு பல கிடந்து ஆண்டவனை வேண்டிக் கொண்டவர்களுமாகத் தமக்கென வாழாப் பிறர்க்குரியாளராகி, தம் உடல் பொருள் ஆவி, முதலியவற்றை இழந்து அரும்பாடு பட்டவர்கள் அனைவருக்கும் நம் நன்றி உரியது என்ற கருத்தினை விளக்குவதாகும். மேலும் நாம் அரிதில் பெற்ற இந்நாட்டு உரிமையைச் சேராமற் காப்பதில் அவர்கள் போல் நாம் ஒற்றுமைப்பட்டு உழைத்து வரவேண்டும் என்பதையும், உண்மை நெறியுடன் நாட்டு முன்னேற்றத்துக்கு நேர்மையாக உழைக்க வேண்டுமென்பதையும், இந்நாட்டுக்குப் பழிச் சொல் நேராதபடி உலக நாடுகளுக்கு உதவ வேண்டுமென்பதையும் நமக்கு வற்புறுத்துவதே இவ் வாரஞ்சு நிறக் கருத்தாகும்.

10. இவ்வாரஞ்சின் கீழ் இரண்டாவதாக ஒளிரும் வெண்மையின் கருத்தை நோக்குவோம். இது "வெள்ளைக்கில்லை கள்ளச் சிந்தை" என்றபடி நாம் களங்கமற்ற நெஞ்சத்துடன் பிற நாட்டாருடன் உறவாடி யாவருக்கும் உதவியாற்றி அமைதியும் இணக்கமும் (சமாதானம்) பரவுவிக்கவேண்டும் என்பதை வற்புறுத்துகிறது. நாம் யாருடனும், நம்மை இதுகாறும் அடிமைகளாய் அடக்கி ஆண்டவர்களுடனும், பகைமையின்றி நண்பு பூண்டு எங்கும் அன்பு அருள் உரிமைகளைப் பரப்ப வேண்டும் என்பதையும் இவ்வெண்மை விளக்கும். நாம் யாவருக்கும் துன்பம்

இழைக்காமல் இன்பம் இழைக்க உண்மை ஊக்க உணர்ச்சியுங் கொண்டுள்ளோம் என்பதும் இதன் கருத்தாம்.

*11.* இவ்வெண்மை நடுவில் நீல நிறமுடன் காணும் அசோக சக்கரம் கடல் சூழ்ந்த உலகெங்கும் இந் நாட்டின் நடு நிலை நேர்மை ஒழுக்கம் பரவவேண்டு மென்பதன் குறியாம். அச்சக்கர நடுவிலிருந்து சுற்று வட்ட விளிம்புவரையிற் செல்லும் இருபத்து நான்கு ஆர்க்கோடுகள், இந்திய நாட்டு சமரச நடுநிலை உலகின் பல பகுதிகளுக்குச் செல்லக்கூடிய தென்பதனை, நினை வூட்டுகின்றன. இக்கருத்துக்கொண்டே அசோகர் தம் குறியாக இச் சக்கரம் அமைத்தார். இக் குறிக் கோளுடன்தான் இந்த அசோக சக்கரம் நம்முடைய கொடியிடையிலும் ஒளிர்கின்றது. இது நம்முடைய குன்றாத் திறமைக்கும் பல தொழிலாற்றலுக்கும் அறிகுறியுமாகும்.

*12.* ஆரஞ்சு, வெண்மை இரண்டிற்கும் கீழாக மூன்றாவதாய் இருக்கும் பச்சையின் கருத்து யாது? பச்சை இந்நாட்டின் நீர் நில வளங்களின் செழுமையை விளக்க அமைந்துள்ளது. எந்நாட்டவரும் நாடியடையும் பச்சென்ற நாடு இது என்பதையும், இந் நாடு தன் இயற்கை வளத்தால் என்றும் கண்ணுக்கினிமை அளிக்கவல்லதென்பதையும், தன்னிலுள்ளவர் சோம்பாமல் உழைத்துச் செயற்கை வளமும் பெற்று என்றும் பச்சென்றிருக்க வேண்டும் என்பதையும் குறிக்க இப் பச்சை உள்ளது. இன்னும் "உழைப் பின் வாரா உறுதிகள் உளவோ, கழப்பின்வாராக் கையறவுளவோ" என்றும் பட்டினத்தடிகள் கூறிய படி உழைப்பே யாவற்றிற்கும் அடிப்படை என்பதை யும் உழைப்பின் பயனே பசும்பயிர் என்பதனையும் விளக்கப் பசுமை நிறம் அடியில் உள்ளது. நாம் உழைப்பால் உயரவேண்டும் என்பதை இப்பசுமை நிறம் வற்புறுத்துகிறது.

13. உலகவர் எவரும் புகழத்தக்க இயற்கை வளம் மிகுந்தநம் தாய்நாட்டின் அருமையும் பெருமையும் புகழும் இன்னும் மென்மேல் ஓங்க, நாம் நாள் தோறும் நம்கொடி வணக்கம் செய்வோமாக. அதன் வழி இக் கொடி புகட்டும் உண்மைக் கருத்துக்களை நினைவூட்டிக் கொள்வோமாக. அதன்படி ஒழுகி நலமுறவும் முயல்வோமாக, ஆண்டவன் அருள் செய்வானாக. நம் கொடி வாழ்க ! வாழ்க !!

## அரும்பொருள்

பள்ளு - ஒருவகைக் கூத்துடன் பாடும் பாட்டு. குறிக்கோள் - பெற வேண்டிய குறி. இமசேது - வடக்கில் இமயமலையிலிருந்து தெற்கில் சேது வரையுள்ள நாடு. கோலினார் - அமைத்தார். முற்றுரிமை - முழு உரிமை. நுகர்ந்து - அனுபவித்து. விளிம்பு - ஓரம். ஆர் - சக்கர நடுவிருந்து செல்லும் இலை. ஒளிர்கின்றது - பிரகாசிக்கின்றது. வற்புறுத்துகிறது - உறுதிப்படுத்துகிறது.

## பயிற்சி

1. விடை தருக :—
   1. கடந்த பன்னூறாண்டுகளில் நாம் இருந்த நிலை யாது ?
   2. ஆங்கிலேயரால் நமக்குற்ற நன்மை தீமைகள் யாவை?
   3. இந்நாட்டுரிமைக் குழைத்தார் அடைந்த பலன் யாது ?
   4. காந்தியடிகளின் எச் செய்கையினை இப் பாடத்தால் உணரக் கூடும்.
   5. நம் நாட்டு உரிமைக்காக நாம் யாருக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம் ?
   6. நம் கொடியைப் பற்றி, தேசிகவிநாயகம்பிள்ளை கூறுவது யாது ?
   7. நம் கொடியின் அமைப்பு முறையைக் கூறுக.
   8. நம் கொடியின் மூவண்ணத்தில் ஒவ்வொன்றின் கருத்தையும் சுருக்கிக் கூறுக.
   9. அசோக சக்கரத்தின் அமைப்பும் கருத்தும் விளக்குக.

10. நம் கொடியில் உள்ள பச்சை வண்ணம் வற்புறுத்துவது யாது ?

11. கொடி வணக்கத்தால் ஆம்பயன் யாது ?

12. உங்களுக்குத் தெரிந்த சில நாடுகளின் கொடிகளை விளக்குக.

II. நம் நாடு உரிமை பெற்ற விதத்தைச் சுருக்கி ஒரு பக்கத்தில் வரைக.

III. இப்பாடத்தில் வரும் அருந்தொடர்களில் ஐந்து எடுத்து அவைகளைத் தனித்தனி வாக்கியங்களில் அமைத்துக் காட்டுக.

IV. இதில் வந்துள்ள பழமொழிகளைக் காட்டுக.

V. இப்பாடத்தில் அமைக்கக் கூடியனவாக, உமக்குத் தெரிந்துள்ள பழமொழிகளில் இரண்டு காட்டி, தனித்தனி வாக்கியத்தில் அமைக்க.

VI. இப்பாடப் பிரிவுகள் ஒவ்வொன்றிற்கும் தக்க தலைப்புத் தருக.

# 14. இந்தியாவும் கிராமத் தொழில்களும்

"பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து."



"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் - வீணில்
உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்;
விழலுக்கு நீர்பாய்ச்சி மாய மாட்டோம் - வெறும்
வீணருக் குழைத்துடலம் ஓயமாட்டோம்."

1. நம் இந்தியா, ஒரு பெருங் கண்டத்துக்கு வேண்டிய இயற்கைவளம் அனைத்தையும் பெற்றுள்ளது. இது உலகமக்களுள் ஐந்தில் ஒரு பகுதியினரைத் தன்னிடத் துடையது. இது தானிழந்த செயற்கை வளத்தை மீளத் தன் உழைப்பு முயற்சியினால் பெற்றிடும் என்று உறுதி கூறலாம். இது தன் இயற்கை

88538

வளத்துடன் செயற்கை வளமும் பெறுமாயின் உலக நாடுகளில் தலைசிறந்து விளங்கும் என்பது திண்ணம்.

2. எவ்வாறெனின், அப்போது மக்கள் உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாதவை யாவும் இங்கேயே கிடைக்கும். நம் நாட்டவர் வேறு எந்த நாட்டின் உதவியையும் நாடவேண்டியிராது. நமக்கு அன்றாடத் தேவைக்கு வேண்டியன போக, எஞ்சியவற்றைப் பிற நாட்டினருக்கும் தாராள மனப்பான்மையுடனும் உதவலாம்; பொன்னுக்கும் பரிமாறி நல்லூதியமும் பெறலாம். தொன்றுதொட்டு, விருந்தினரை உபசரிக்கும் இயல்பினராகிய நாம் தாராள உதவி செய்வது ஒரு வியப்பன்று. இச் செயல் நம் பிறப்பியல்பாம். இன்னும் இப் பண்பியல்புடன், நமக்கு எந்நாட்டவர்க்கும் இல்லாத ஆன்மீக உணர்ச்சியும் கடவுட்பணி விழைவும் நிரம்பவும் உண்டு. இத் தூய பண்பையும் நாம் உலகினர்க்கு வழங்கி, உலக அமைதியும் மகிழ்ச்சியும் உண்டாக்கலாம். இந் நிலையெய்த, நம் உண்மை உழைப்பு வேண்டற்பாலதாம்.

3. இந் நாடு முன்னேறி, மற்றவற்றிலும் சிறப்ப உயரச் செய்வதற்குரிய உழைப்புகள் யாவை? அவை எப்போது, எங்கு, எவ்வுழைப்பை, யாரால், எவ்வாறு பெருகக் கொள்ளப்படவேண்டும் என்பவைகள் எல்லாம் கருதப்படவேண்டும். இவைகள் நன்கு கருதப்பட்டு, ஒழுங்குற உண்மையாகக் கொள்ளப்படுமேல், இந்நாடு எந்நாட்டினும் தலைசிறந்து விளங்கும் என்பதில் ஐயமும் உண்டோ?

4. இவ்வுழைப்பிற்கு எப்போது என்ற ஒரு தனிப்பொழுதும் வேண்டுமோ? நன்றாகிய இவ்வுழைப்பு ஒன்றுதானும் இன்றே இன்னே தொடங்கப்படல் வேண்டும். இன்னும் நாளை நாளையென்போமாகில் நாளை நம்முடைய நாளாகுவதோ அல்லது அரிதிற் பெற்ற நம்முரிமை மீளப் பறிக்கும் நோக்கமும் சூழ்ச்

சியும் உள்ளவர்களுடைய தாகுவதோ அறியோம்! ஆகவே நாம் எப்போதென்னமல் இப்போதேதொடங்கல் வேண்டும்.

5. இதற்கு அடிப்படையான உழைப்புதொடங்கப்படுவது எங்கு என்று கருதுவோமாயின், நம் கிராமங்களில்தான் முதன் முதலாகத் தொடங்கப்படல் வேண்டும் என்பது இனிது புலப்படும். ஏன்? இந்திய நாட்டின் உயிர் நிலை நம் கிராமங்கள்தான்; இந்திய மக்களும் கிராமமக்களே! எவ்வாறெனில், இந்தியாவில் கிராமங்களே ஏழுலக்ஷத்துக்கு மேலாக உள்ளன; சிறு நகரங்களும் பெருநகரங்களும் மிகச் சிலவே! அவற்றுடன் நம் நாட்டின் பரப்பினையும் ஒப்பிட்டுப் பார்ப்போமாயின், நம் நாட்டில் நகரங்களே இல்லையென்று சொல்லலாம். இந்திய மக்களுள், நூற்றுக்குத் தொண்ணூறு வீதம் கிராமமக்களே! ஆகவே, இந்திய நாட்டின் உயிர் நிலை கிராமங்களே; கிராமமக்கள் தாம் இந்திய மக்கள்; கிராமமும் கிராம மக்களும் முன்னேறினாற்றான், நம் நாடு முன்னேற்றமடையும். எனவே உழைப்பும் கிராம உழைப்பாகத்தான் இருக்க வேண்டும்.

6. இனி, நாம் கொள்ள வேண்டிய உழைப்பினைக் கருதும்போதுதான், சிக்கல்கள் எழுகின்றன. இந்திய மக்களில் பெரும்பாலோர் உழவினரே. ஒரு சிலவர் நெசவுத் தொழிலும், வேறு சிலவர் பல்வகையான வேறு வேறு தொழிலும், இன்னும் சிலவர் உத்தியோகம் பித்துக் கொண்டவர்களாய் அரசாங்க அல்லது வேறு பிற அலுவலகத் தொழிலும், இன்னுஞ் சிலவர் ஆலை முதலிய பேரிடங்களிலும் இன்னும் பல வேறு துறைகளிலும் சிற்றூதியத்திற்காகக் கூலித் தொழிலும் ஏற்றுள்ளார்கள். மற்றுஞ் சிலவர், தொழில் உழைப்பொன்றுமின்றிப் பிறரிடத்து இரந்து வாங்கியுண்டு பிழைக்கின்றனர். சிலர் தொழில்களிடையில் ஏற்றத் தாழ்வு கற்பித்து வாதாடு

கின்றனர். மேலும், பெரும்பாலும் குடும்பங்கள் தோறும் ஒருவரைச் சார்ந்து பலர் சூழ்ந்து அவர் உழைப்பின் பலனைப் பங்கிட்டுண்கின்றனர். அன்றியும் உழவர், நெசவர், முதலிய பல தொழிலினரும் பலன் தரும் முறையில் உழைக்கிறார்களில்லை. இந்நிலையில் இந்நாட்டு மக்கள் அனைவருக்கும் வேண்டிய உணவுமுதலியவற்றிற்குப் போதியஊதியமும் பண்டங்களும் எவ்வாறு எங்கிருந்து கிடைக்கும்? இக்குறைபாட்டை நிறைவுறுத்த, ஒவ்வொரு இந்திய மகனுக்கும் மகளுக்கும் கடமையும் உரிமையும் உண்டு.

7. இந்நாட்டில் ஏராளமான விளை நிலங்களுண்டு; வேண்டின், பயிர் செய்யத் தரிசு நிலங்களும் உண்டு; உழுது பயிரிடப் பேரளவினராக மக்களும் உண்டு. ஆயின் இன்று இங்கு பயிரிடும் முறையோ நம் பழைய முறையைப் பின் பற்றியது மன்று; மேனாட்டினருடைய இன்றைய விஞ்ஞான முறையைப் பின் பற்றியது மன்று. அவ்வாறு இந்நாட்டினர் பயிர் செய்யுமுறையில் விளைவனவும் அவரவர் குடும்பத்துக்கே போதாக் குறையினவாகும். அன்றியும், பலர் உழவினால் பலன் இல்லை என்று சொல்லிக்கொண்டு, நகரத்திற்குச் சென்று கூலிவேலை செய்தாயினும் பிழைப்பதற்கு முயல்கின்றனர். அவர்கள் கூலிவேலையின் இழிபாட்டைக் கருதுவதில்லை. சோம்பலால் அவர்கள் பேருழைப் பேற்கப் பின்வாங்குகிறார்கள். இத்தகைய குறைபாடுகளால் இந்நாட்டின் பெருந்தொழிலாகிய உழவுத் தொழில் குன்றி, இந்நாட்டினர் தமக்கு வேண்டிய உணவுக்கு முட்டுப்பாடுற்றுள்ளார்கள். இவ்வாறே, போதிய அளவு பஞ்சு விளையாமையாலும், விளைவனவும் வெளிநாட்டுக்கு ஏற்றப்படுகின்றமையாலும், நெசவாளிகளின் அனுபவக் குறைவாலும், சோம்பலாலும், வேற்று நாட்டினரின் போட்டியினாலும் கைநெசவுத் தொழி

லும் குன்றியுளது. பலர், தங்கள் அறியாமையினுல் உழவும் நெசவும் இழி தொழில்கள் என்று கருதிக் கைவிடுகிருர்கள். இவ்விரண்டு தொழில்களும் தக்க அனுபவ அறிவுகளுடன் செய்து வரப்பெறின் இந் நாட்டில் வறுமையே தலைகாட்டாது. உழவர் ஆறு மாதம் உழைப்பின்றி இருக்கும் காலங்களில் அவர்கள் சோம்பியிராமல் தங்களாலியன்ற குடிசைத் தொழில் களை ஏற்றுச் செய்து பயன்பெற வேண்டும். இவை களின் வழியாகக் கிராம வாழ்க்கை முன்னேறி, உயரு மாறுல், இந்திய நகர வாழ்க்கையும் முன்னேறும். இந்திய மக்களின் பசிப்பிணியும் வறுமைத் துன்பமும் ஒழியும்.

8. பெரும்பணம் படைத்த முதலாளிகள், உழவுக்கலை தொழிற்கலை பயின்ற விஞ்ஞான அறிவாளிகள், உயர்தரப் பள்ளிகளிலும் கல்லூரியிலும் படிக்கும் மாணவ மாணவியர், கிராம வாழ்க்கையிலும் அனுபவத்திலும் நிறைந்த அறிவுடையவர்கள் முதலியோர், உள்ளமுவப்ப உண்மையாக, உழைப்பார்களாயின் நம் நாட்டு உழவு, நெசவு, குடிசைத் தொழில் முதலியன பிற நாட்டினரும் கண்டு வியக்கத் தக்க முறையில் வளர்ந்து முன்னேறும். மேலும், நகரமக்களும் கிராம மக்களை இகழாமலும் வஞ்சிக்காமலும் அவர்களுக்கு நல்ல வழிகளைக் காட்டி ஊக்கி வருவதும் அல்லாமல், அவர்கள் உற்பத்தி செய்யும் பொருள்களை உரிய விலைக்கு வாங்கி உற்சாகப் படுததி வருவதாலும் கிராமச் செல்வம் பெருகும். கிராமததின் வழி இந்தியச் செல்வமும் பெருகும்.

9. மேலே குறிப்பிட்டவர்கள் எவ்வாறு தொழிலாளிகளுக்கு உதவுவதெனில் விளக்குவாம். முன்னோர் தேடிய பெரும்பண முதலாளிகள் அவைகளைப் பாங் கியில் தேங்கவிட்டு வட்டி பெற்ருே, அல்லது

சிறுகச் சிறுக வாங்கிச் செலவு செய்தோ தங்கள் வாழ்நாளை வீணாளாக்குவது அறிவுடைமையன்று. அவர்கள் அப்பணத்தைக் கொண்டு நிலம் வாங்கி, அல்லது சிறுதொழிற்சாலைகள் அமைத்து, அல்லது உழவர்க்கும் மற்றத் தொழிலாளர்க்கும் உரிய வட்டியில் கடன் கொடுத்தும், தக்க அனுபவசாலிகளைக்கொண்டு உழவையும் தொழிலையும் ஊக்கியும், கிராமப் பொருளாதாரத்தை உயர்த்தலாம். விஞ்ஞானக் கலை, உழவுக் கலை, தொழிற்கலை பயின்ற அறிவாளிகள் உழவர்க்கும் தொழிலாளர்க்கும் அவ்வப்போது உணர்த்துவன உணர்த்தித் தங்கள் கலையறிவு அனுபவங்களை அவர்களுக்குப் பயன்படுத்திக் கிராமத்தொழில்கள் முன்னேறச் செய்தல் வேண்டும். உயர்தரப்பள்ளி கல்லூரி மாணவ மாணவியர்களோ, விடுமுறை நாட்கள் தோறும் தங்கள் தங்கள் கிராமங்களுக்கும் சுற்றுப்புறக் கிராமங்களுக்கும் சென்று, உழவு முதலிய தொழில்களின் அருமை பெருமைகளை எடுத்துக் கூற வேண்டும். பிற நாடுகளில் அவை போற்றப்படும் திறத்தையும் அவற்றால் பொருளாதாரம் உயரும் தன்மையையும் விளக்க வேண்டும்; தாமும் அவர்களுடன் பயின்று பழகி அவர்களை உற்சாகப் படுத்த வேண்டும். கிராம இளமக்களுக்கும், கல்வியறிவில்லா முதுமக்களுக்கும் கல்வியறிவின் இன்றியமையாமையையும், அதனால் அடையத்தகும் பயனையும் விளக்க வேண்டும்; அவர்களுக்கு ஒழிந்த நேரத்தில் கல்வி புகட்டவும் வேண்டும். இப்படி மாணவ மாணவியர் உதவலாம். கிராம அனுபவிகள் யாராயினும், தங்கள் அனுபவங்களை அனுபவமில்லாத உழவர்க்கும் தொழிலாளர்க்கும் புகட்டி அவர்களைச் சிறந்த அனுபவமுடையவர்களாக்கலாம். நகரமக்கள், கிராமத்தவர்களுக்கும் உழைப்பின் உயர்வை எடுத்துக் காட்டி உழவிலும் தொழிலிலும் பற்றுண்டாக்க வேண்டும்;

கூட்டுறவுச் சங்கங்கள் போன்றவற்றின் பயனை எடுத்துக் காட்ட வேண்டும்; கிராமத்தவர்களின் பொருளை வஞ்சியாமல் உரிய விலைக்கே பெற வேண்டும். இவை போன்றவற்றால் கிராமப் பொருளாதாரம் உயர்ந்து இந்திய நாடே முன்னேறித் தலை சிறக்கும்.

## அரும்பதம்

ஏமம் - காவல். பரிமாறல் - மாற்றிக்கொள்ளல். புரக்கும்- காக்கும். ஆன்மீகம் - ஆத்துமாவைக்குறித்து. போது - பொழுது. உவப்ப - மகிழ. ஊக்கி-உற்சாகமூட்டி. பொருளாதாரம்-பொருள் தேடிப் பெறுதற்குரிய வழி.

## பயிற்சி

1 விடை தருக :—

1. ஒரு நாட்டிற் சுணியாவன யாவை ?
2. இந்தியா உலக நாடுகளில் தலை சிறந்து விளங்கக் கூடியதெவ்வாறு ? எப்போது ?
3. உழைப்புக்கு எப்போது என்று ஒரு தனிப் போது வேண்டப் படாமைக்குக் காரணம் யாது ?
4. இந்தியாவின் உயிர் நாடி யாது ? ஏன் ?
5. நம்மிந்திய முன்னேற்ற உழைப்பு எங்கிருந்து தொடங்கப் படவேண்டும் ? ஏன்
6. உழைப்பினில் தோன்றும் சிக்கல்கள் யாவை ?
7. ஒவ்வொரு இந்திய மகன், மகள் கடமை யாது ?
8. இந்நாட்டு விளைபொருள் குன்றும் காரணம் யாது ?
9. இந்நாட்டு நெசவுத் தொழில் குன்றும் காரணம் யாது ?

10. இந்நாட்டு உழைப்பினைப் பெருக்கத்தக்கவர் யாவர் ? அவர் எவ்வாறு பெருக்க இயலும் ?

11. கூட்டுறவுச் சங்கங்களாவன யாவை? விளக்குக.

12. கிராமப் பொருளாதாரம் உயர்வதெவ்வாறு ?

II. (1) இந்திய நாட்டின் இன்றைய நிலையைச் சுருக்கி வரைக.

(2) இந்தியப் பொருளாதாரம் வளர்ந்து முன்னேறும் வழியைச்சுருக்கி வரைக.

III. இதிலுள்ள சிறந்த தொடர்களை எடுத்துத் தனித்தனி வாக்கியத்தில் அமைத்துக் காட்டுக.

IV. இப்பாடப் பிரிவுகளுக்குத் தக்க தலைப்புகள் தருக.

---

## 15. பாரியும் அவன் மகளிரும்

"கொடுக்கிலா தானைப் பாரியேயெனக் கூறினும் கொடுப்பாரிலை"

1. இரக்கின்றவர்களுக்கு ஒன்றும் கொடுக்காத உலோபியரை நோக்கிப் "பாரி, பாரி" என்று புகழ்ந்துரைத்தாலும் கொடுக்கவே மாட்டார் என்னும் கருத்துப்பட, சுந்தரர் தம் தேவாரத்துள் மேற்காட்டியபடி பாடியுள்ளார். இதனால் கொடையிற் சிறந்தவன் பாரியென்பதும், அக்கொடைப் பெருமையுள்ளவர்களுக்குப் பாரி எடுத்துக் காட்டானவன் என்பதும் புலப்படும். இப் பாரியின் வள்ளற்றன்மையைக் குறித்துப் பலர் புகழ்ந்துள்ளார்கள்.

2. பாரி பறம்பு நாட்டிற்கு இறைவன். பறம்பு மலையும் அதைச் சுற்றியிருந்த வளமான முந்நூறு

ஊர்களும் சேர்ந்த சிறு நாடே பறம்புநாடு. இயற்கை வளம் பல படைத்ததும், எளிதில் எவராலும் அழிக்கக் கூடாத எயிலுள்ளதுமான பறம்புமலை பாண்டிய நாட்டிலுள்ளது. பாரி கடைச்சங்க காலத்தவன். இவன் அறிவு, கல்வி, வீரம் முதலியவற்றிற் சிறந்த வேளிர் குலத்தவன். இவன் சிறு நாட்டினனாயினும், பெருநாட்டினரான சேர சோழ பாண்டியர்க்கு அஞ்சாதும் அடங்காதும் அவரை மதியாதும் திகழ்ந்த வீரன்; இரவலர்க்கு வரையாமல் வழங்கியவன்; அன்பும் அருளும் ததும்பப் பெற்றவன்; ஓரறிவுயிராகிய கொடி செடிமுதல் எவ்வுயிரிடத்தும் இரக்கங் காட்டுபவன். தமிழ்ப்பற்று மிகவுடையவன்; எச்சாதியினராயிருப்பினும் அவரை வரையாது ஆதரிக்கும் பண்பாளன்; தமிழ்ப் புலவரின் பொதுப் புரவலன்; தன்னிடம் இரப்பவர்க்குத் தன் உயிரையும் அளிக்கும் இயல்பினன். இவன் அருமை பெருமை வண்மைகளைப்பற்றிப் புலவர் பலர் புகழ்ந்துள்ளார்.

3. பாரியின் இரக்கம் அளவு கடந்தது. இவன் ஒரு முறை, ஒரு காட்டின் வழியே தேரூர்ந்து வரும்போது, காற்றினால் அலைந்து கொண்டிருந்த ஒரு முல்லைக்கொடி இவன் தேர்மீது சார்ந்தது. இச்செயலைக் கண்டதும் பாரியின் உள்ளம் மெழுகென உருகிற்று. அக் கொடிக்குக் கொழுகொம்பு ஒன்றை அதன் அருகில் நாட்ட அங்கு எங்குந்தேடினான்; அது கிட்டவில்லை; ஆயினும் ஊக்கமிழந்தான் இல்லை. உடனே தான் ஏறிவந்த தேரினை, அதன் அண்மையில் அது படர்ந்தேற அமைத்துவிட்டுத் தன் ஊருக்குக் கால் நடையாகவே சென்றான். ஓரறிவுள்ள அம் முல்லைக் கொடிக்கு இவன் இரங்கிய இரக்கத்தின் பேரன்பு என்னே! இஃதொன்றே இவனது இரக்கப் பண்பை விளக்கப் போதிய சான்றாகும். இவன் யாவரும் எளிதில் காணத்தகும் காட்சி தருபவனாய்

புலவரின் பசிப்பிணி போக்கி, அவர்களுக்கு, வரையாது வழங்கும் பான்மையுடையவனும் தமிழ் புரக்கும் பண்பினனும் இருக்கும் புகழ் எங்கும் பரவியது. இதனைக் கேட்ட தமிழ் மூவேந்தர் இவனிடம் அழுக்காறு கொண்டனர். இவன் தன் உறு வலியினால் எவர்க்கும் அடங்கான் என்பதும் அவர்கள் உணர்ந்தனர்.

4. மூவேந்தரும் பாரியை அடக்கி ஒடுக்கும் வகை நாடி வந்தனர். இதனிடையில் பாரியின் மகளிர் இருவருடைய அழகு, அறிவு, கல்வி, கேள்விகளின் சிறப்பினையும் அவர்கள் அறிந்தனர்; ஆகவே அம் மகளிரைத் தம்மில் யாரேனும் இருவர் மணந்து பாரியை நயமாகவே ஒடுக்கும் எண்ணத்தோடு தூதும் அனுப்பினர். தம் மகளிர்க்கு எவ்வாற்றாலும் பொருந்தாத மூவேந்தரின் சூழ்ச்சிகளை எவ்வாறாகவோ உணர்ந்த பாரி பெண் கொடைக்கு மறுத்தான். இம் மறுப்பினால் மூவேந்தரும் மிகவும் வெகுண்டு, ஒன்று சேர்ந்து பெரும்படை திரட்டிவந்து பாரியின் பறம்பு மலையை முற்றினர்.

5. பறம்புமலை "கொளற்கரிதாய்க் கொண்ட கூழ்த்தாகி அகத்தார், நிலைக்கெளிதா நீரதரண்" என்றபடி, சிறந்த எயிலுடையது; பகைவரால் பற்றக் கூடாத வன்மையுடையது; அதனைக் காக்கும் வீரரோ தம் உயிர் விடுங்காலத்தும், தாமறியப் பகைவர் ஓர் அடியும் முன்னெடுத்து வைக்க இடங்கொடாத ஆற்றல் படைத்த மானிகள். ஆகவே மூவேந்தர்கள் நினைத்தபடி எளிதில் பறம்பு மலையைப் பற்ற இயலவில்லை; எவ்விதத்திலாயினும் பறம்பையும் பாரியையும் பற்றும் நோக்கம் உள்ளவராய் முற்றுகையை இன்னும் மிக நெருக்கினர். பல நாட்கள், வாரங்கள் திங்கள்கள் கடந்து சென்றன. பறம்பு வீழ்வதாயில்லை. உள்ளிருப்பார் வெளிப் போதற்கும் இடமின்றி பறம்பு அடைபட்டிருந்தது. எனினும், பறம்பின்



இயற்கை வளத்தாலும், கபிலரால் பழக்கப்பட்டு எயிலைக் கடந்து பறந்து வெளிச்சென்று வரும்கிளிகள் கொணரும் நெற்கதிர்களாலும் பறம்பிலிருந்த படைஞர்களும் குடிமக்களும் பசி, முதலிய கவலைகளற்றுக் களையாமல் பறம்பைக் காத்து நின்றனர்.

6. இவ்வாறு வீணே முற்றுகை நீடிப்பதைக் கண்டார் கபிலர். இவர் பாரியினுடைய பார்ப்பன நண்பர்; உண்மை அந்தணாளர்; சிறந்த நல்லிசைத் தமிழ்ப் புலவர். முற்றுகையால் மக்கள் வீணே தடைப் படுவது தகாது என்று எண்ணினர் கபிலர். எண்ணியவர் தம் கருத்தைப் பாரிக்குத் தெரிவித்தனர். பாரியும், பகைவர் உள்நுழையாதவாறு தான் அடைத்திருந்த எயிற்கதவைத்திறந்து கொண்டு, உயிரிழக்க அஞ்சாத தம் படைஞருடன் வெளியேறி, அப் பகைவரை எதிர்த்துத் தூர்த்தக் கருதினன். உயிர்களிடத்து அருளிரக்கங் கொண்ட கபிலரோ, வீணே இருதிறத்துப் படைகளிலும் படைவீரர்களும் யானை குதிரைகளும் இறக்கப்போவதை உன்னி அழுங்கினர்.

7. ஆகவே, அவர் போரின்றிப் பகைவரை விரட்டும் சூழ்ச்சியைக் கருதி, பாரியிடம்கூறி விடைபெற்றுப் புலவர் என்னும் உரிமையில் வெளிச் சென்று மூவேந்தர் முன்னின்றார். அவர்கள் வியந்து அவரை எதிர்நோக்கியபோது, கபிலர் "மூவேந்தரே! நீவிர் திரண்டு பெரும்படையுடன் எத்துணை நாள் இச்சிறு மலையரணை முற்றினும், இதனை நீவிர் பற்ற இயலாது! இது இயற்கை வளம் படைத்தது; நிரம்ப மூங்கில் நெல்லும், பலாப்பழமும், வள்ளிக்கிழங்கும் தேனும் உடையது; என்றும் வற்றாத நீர்ச்சுனையையும் கொண்டுள்ளது. இதனை முற்றி அல்லது போரிட்டு உங்களால் பற்ற இயலாது. வேண்டுமாயின் இப் பறம்பைச் சுற்றியுள்ள முந்நூறு ஊரையும் பரிசிலாகப் பெற்ற புலவர் பாணர் விறலியர்கள் போல நீவிரும் பாரிமுன் பாடி யாடி வந்து, அவன் பரிசாகக் கொடுக்கப் பெறலாம். அப்போது, வேண்டுமாயின் அவனில் வேறுபடாத என்னையும் தன்னையும் உங்களுக்குப் பரிசிலாகத் தருவான்" என்றனர். மேலும் பாரி போரேற்று எதிர்வரின், வீணே இருதிறத்திலும் பல

உயிர் மாளவேண்டியதையும், அப்போதும் அவர்கள் பாரியை வென்று பறம்பைப் பற்றக் கூடாமையையும் குறிப்பாக விளக்கினர்.

8. கபிலருடைய அறிவுரையைக் கேட்ட மூவேந்தரும் பறம்பை முற்றிப் பற்றும் எண்ணத்தை முழுவதும் இழந்துவிட்டார்கள்; அவனைப் போரில் வெல்லும் துணிவு மில்லாராயினர்; வீணே உயிர்கள் மாளவும் இசையார் ஆயினர். ஆகவே முற்றுதல் விட்டுச் சென்றனர். ஆயினும் ஏவ்வாற்ருனும் பாரியை வஞ்சித்துக் கொல்லக் கருதினர். அப்படியே அற்றம் பார்த்திருந்து சூழ்ச்சிசெய்து பாரியைக் கொன்று பறம்பு மலையைப் பற்றிக்கொண்டனர். கபிலரும் பாரியுடன் இறக்கத் துணிந்தனர். ஆனல் இறக்குந் தருவாயில் இருந்த பாரி, தன் மகளிரின் பொருட்டு கபிலர் இறக்காதவாறு தடுத்தனன்.

9. கபிலரும் பாரியைக் குறித்து மிகவும் ஆற்ருதவராகி, தந்தையை யிழந்து தனித்துக் கதறும் பாரியின் மகளிர் இருவரையும் அழைத்துக் கொண்டு பறம்பு மலையைத் திரும்பிப் பார்த்துப் பார்த்துக் கண்ணீர் விட்டுப் பாரியையும் பறம்பையும் குறித்த பாடல்களைப் பாடிக்கொண்டே ஓரூரிற் சென்று சின்னுள் தங்கினர்.

10. பின்பு கபிலர் அம்மகளிர்க்கு மணமுடிக்க எண்ணி, இளவிச்சிக்கோ முதலிய அரசர்களிடம் முயன்றனர். அவர்கள் யாவரும் மூவேந்தருடைய பகைமைக்கு அஞ்சி மறுத்தனர். ஆகவே, திருக்கோவலூர் காரிவள்ளல் வழி வந்தவர்களும், யாவருக்கும் அஞ்சாத உள்ளத்தவர்களும் ஆகிய இளவரசர்கள் இருவருக்கு அம்மகளிரை மணப்பிக்க எண்ணித் திருக்கோவலூருக்குக் கூட்டிச் சென்றனர். வழியிடையில் பாரியின் பிரிவாற்ருத துன்பத்தையும், அம்மகளிருடைய இரக்க நிலையினையும் பொறுக்கக்

கூடாதவராய் ஒழுக்கமும் அன்புமுள்ள அந்தணர் அடைக்கலத்தில் அம்மகளிரை ஒப்படைத்தனர். பாரிக்கு உகந்த அன்பினராயிருந்த ஔவையாருக்குச் செய்தி போக்கிப் பாரி மகளிருக்குத் திருமண ஏற்பாடு செய்யத் தூண்டினர். அதன்மேல், தாம் பெண்ணை யாற்றிடையில் உள்ள மணல் மேட்டில் அமர்ந்து வடக்கிருந்து உயிர் நீத்தனர்.

*11.* இவ்வரலாற்றைக் கேட்டு வருந்தி விரைந்து வந்த ஔவையாரும், திருக்கோவலூர் இளவரசர் இருவரிடமும் மணம் பேசி அவர்கள் ஒப்பச் செய்து, அவர்களுக்கு அம்மகளிரை மணமுடித்து மகிழ்ந்தனர். இச்செய்தி அறிந்த மூவேந்தரும் நாணி முகங் கவிழ்ந்தனர்.

*12.* பாரியைக் குறித்துக் கபிலர் புகழ்ந்தும் வருந்தியும் கூறிய பாடல்கள் பல. கபிலரே அல்லாமல் ஔவை முதலிய பல புலவர்களும் பாரியைப் பாடியுள்ளார்கள்.

## அரும்பதம்

இரக்கின்றவர் - யாசிக்கின்றவர். தேவாரம் - கடவுளுக்கு அணியும் மாலை. கொடை - ஈகை, கொடுத்தல். எடுத்துக் காட்டு - உதாரணம். வள்ளல் - தனக்கென வரைந்து வைத்துக் கொள்ளாமல் கொடுக்கின்றவன். இறைவன் - அரசன். எயில் - கோட்டை. இரவலர் - யாசகர். வரையாது - நீக்காது. புரவலன் - காப்பவன். துணை - அளவு. மிகை - அளவுகடந்தது. தேரூர்ந்து - தேரேறி, கொழுகொம்பு - பற்றுக்கோடு. அழுக்காறு - பொறாமை. உறுவலி மிக்கவன்மை. பெண்கொடை - பெண்ணை மணத்தில் கொடுத்தல். முற்றினர் - வளைந்து சூழ்ந்து நெருக்கினர். அடைப்பட்டு - போக்குவரவு தடுக்கப்பட்டு. அந்தணாளர் - அருள் ஒழுக்கமுள்ளவர். உன்னி - நினைத்து. அழுங்கினர் - வருந்தினர். அரண் - காவல்மதில். அற்றம் - வேளை, சமயம். சின்னாள் - சிலநாள்.

## பயிற்சி

1 விடை தருக :—

1. பாரியின் அருமை பெருமைகளைக் கூறுக.
2. பறம்பு மலையின் சிறப்பமைதியைக் கூறுக.
3. பாரியின் உயிர் இரக்கம் குறிக்கும் வரலாறு கூறுக.
4. மூவேந்தர் பாரியைப் பகைத்த காரணம் யாது ?
5. பறம்பு மலை முற்றுகையின் போது, மக்கள் கவலை யற்றிருந்ததன் காரணம் யாது ?
6. பறம்பு மலை முற்றுகையைப் பற்றிக் கபிலர் கொண்ட கருத்தும் அவர் செய்ததும் யாது ?
7. பறம்பு மலையை மூவேந்தர் பற்றக்கூடிய விதம் யாது என்று கபிலர் கூறினர்? இதனால் விளங்குவது யாது ?
8. பறம்பு மலையை மூவேந்தர் பற்றிய தெவ்வாறு ?
9. கபிலர் பாரியிடையிருந்த நண்பின் திறம் விளக்குக.
10. தந்தை இழந்த பாரிமகளிரின் நிலை யாதாயிற்று ?
11. ஔவையாரின் பேருபகாரம் யாது? யாருக்கு ?
12. பாரிக்கு ஒப்பாவார் யார் ? எப்படி ?

11. "கொளற்கரிதாய்க் கொண்ட கூழ்த்தாகி அகத்தார் நிலைக் கெளிதா நீர தரண்" என்பது, பகைவரால் எளிதிற்பற்றக் கூடாததாய், முற்றுகை காலத்தில் தன்னுள் இருப்பார். யாவருக்கும் வேண்டிய உணவுப் பொருள்களை உடையதாகி. தன்னுள்ளிருந்து காப்பவர் நின்று போரிடத்தகுந்த இடத்தை யுடையதே அரண் என்று கருத்துட் பட வள்ளுவர் கூறிய குறளாகும் இது. பறம்புமலை இதற்கிணங்க இருந்த தென்பதை உறுதிப் படுத்துக.

111. பாரி வரலாற்றைச் சுருக்கி ஒரு பக்கத்தில் வரைக.

1V. கபிலருடைய பண்பைத் தக்க சான்றுகளுடன் ஒரு பக்கத்தில் வரைக.

V. பாரிமகளிரின் வரலாற்றைச் சுருக்கி யுரைக.

VI. பாரி வரலாற்றினல் அறியத்தக்க அறவுரை நீதி யாது ?

VII. இப்பாடத்தில் ஒவ்வொரு பிரிவுக்கும் தலைப்புத் தருக.

---

## 16. இசை இன்பம்

குழலினி(து) யாழினி(து) என்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்.

1. "இசைக்கு உருகாதார் எதற்கும் உருகார்" என்பது நம் அருந்தமிழ்ப் பழமொழி. இசையி னுடைய இன்பம் யாவருடைய உள்ளத்தையும் உருகச் செய்ய வல்லது. இதற்கு ஈடாகவோ எடுப் பாகவோ இவ்வுலகில் எதுவும் இல்லை. எனினும், ஒருவாறு பச்சிளம் மக்களின் மழலைச் சொற்கள் ஒன்றே எடுப்பாய் உள்ளது என்று சொல்லலாம். மழலைச்சொல் தாமும், அவ்வம் மழலைச்சொல் பயிலும் மக்களின் பெற்றோர்களுக்கன்றி மற்றவர்க்கு இன்பம் பயப்பதில்லை. விளங்கக் கூறின் மழலைச் சொற் கேட்டு இன்புறும் பெற்றோரும், தம் தம் இளமக் களின் மழலைச் சொற்களுக்கு இன்புறுவார்களே யல்லாமல், பிறருடைய மக்களின் மழலைச் சொற்கு மகிழ்வது அருமையே! ஆனல், இசை இன்பமோ, யாவரும் ஒருங்கே சேர்ந்து இன்புறச் செய்யவல்லது. இது கண்கூடு.

2. இசையினுடைய பெருமையை ஆராய்ந்தே தமிழர் முத்தமிழுள் இசைத் தமிழை, இடையே சிறப்புற அமைத்து இயற்றமிழ், இசைத்தமிழ், நாட கத் தமிழ் என்கின்றனர். காரணம், இயற்றமிழாகிய செய்யுட்கள் இசையுறப் பாடப்படுதல் வேண்டும்.

இசைப்பாடலே நாடகம் நடித்தற்கும் வேண்டப் படும் என்புவற்றை உணர்ந்தேயாம். மேலும், இசையோ எம்மொழியிலிருப்பினும் அது கற்றூர் கல்லாரையும், விலங்கு பறவை ஊர்வன ஆகியவற்றை யும் இன்புறச்செய்ய வல்லது. இவ் வுண்மையைப் பழந்தமிழ் இலக்கியங்களாகிய பெருந்தொகை, குறுந் தொகை, கலித்தொகை, அகநானூறு, மேருமந்தர புராணம் முதலியவைகளில் விரிவாய்க் காணலாம். மதங்கொண்ட களிறும், சினங்கொண்டு சீறும் பாம் பும் இசையைக் கேட்டவுடன் அடங்கி அமையும். கிரா மங்களில் மாடுமேய்ப்பவர்கள் இனிய இசைப் பாடல்க ளால் மாடுகளை மடக்கியாள்வதையும் காண்கின்றோம். துன்புற்றூர் இசைப் பாடல்களைக் கேட்டாயினும், அவைகளைத் தாமே பாடியாயினும் அத்துன்பத்தைப் போக்கிக் கொள்வதைக் காண்கின்றோம். போர்மேற் செல்வார்க்கும் இசைக் கருவிகளுடன்கூடிய இனிய பாடல்கள், உள்ளக் களிப்பை எழுப்பி, ஊக்கந்தந்து, சிறந்த வீரர்களாகத் திகழச்செய்வதைப் பார்க் கின்றோம்.

3. இன்னும் இறையவனே "ஏழிசையாயும் இசைப் பயனும்" உள்ளான் என்று தேவாரம் பறையறைகின்றது.

4. சிறந்த இசைவாணராகிய கோபாலகிருஷ்ண பாரதியாருடைய நந்தன் சரித்திரத்துக்குப் பேராசிரிய ராகிய மகாவித்வான் திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளை சிறப்புப் பாயிரம் தர மறுத்தனர்; காரணம் அதில் பிழைகள் மலிந்துள்ளமையேயாம். எனினும், அதைப் பெற மேலும் மேலும் முயன்று வந்த பாரதி யார் ஒருநாள் பிள்ளையவர்கள் உள்ளே படுத்திருக்கும் போது, வெளியே திண்ணையிலிருந்து கொண்டு, "கனகசபாபதி தரிசனம் ஒருநாள் கண்டாற் கவிதீரும்" என்ற கீர்த்தனையை மிகவும் இனிமையுடன் பாடினர். இதனைக் கேட்டு விழித்தெழுந்த பிள்ளையவர்கள்

கீர்த்தனை பாடி முடியப்பெற்றவுடன், இசையின்பத்தில் ஆழ்ந்து திளைத்த மகிழ்ச்சியால் "இதற்குச் சிறப்புப் பாயிரம் தராமல் இருக்க இயலாது" என்று கூறிக் கொண்டு கொடுத்தனர். ஆகா! இசைப்பயன் என்னே!

5. இன்பந்தரும் இவ் இசையினை இளம் பிள்ளைகள் பயிலுதல் இன்றியமையாததாகும். இவ்விசை இன்பத்தை நாட்டுப் பற்றுடன் புகட்ட எண்ணிய தேசிய கவி சுப்பிரமணிய பாரதியார் பாடிய நாட்டு வணக் (சுதேசவணக்) கத்தைப் பாடிப் பழகி இசையின்பமும் நாட்டுப்பற்றும் பெறுவார்களாக.

## அரும்பதம்

குழல் - புல்லாங்குழல். யாழ் - வீணை. ஈடு - ஒப்பு. எடுப்பு- உயர்வு; பயிலும் - பழகும். புயப்பதில்லை - கொடுப்பதில்லை.

## பயிற்சி

1 விடை தருக :—

1. இசையின் பெருமையைச் சுருக்கிக் கூறுக.
2. இசையைக் குறித்த பழமொழி யாது?
3. இறைவனுக்கும் இசை இனிமையது என்பது எவ்வாறு விளங்கும்?
4. இசைக்கு யாவும் இன்புறும் என்பதற்கு உதாரணம் தருக.
5. இசை பிழையையும் மறைக்கும் என்பதற்கு உதாரணம் தருக.
6. பாரதியாரின் நாட்டு வணக்கத்தை இசையுடன் பாடுக.
7. அதன் கருத்தையும் சுருக்கி எழுதுக.
8. உமக்குத் தெரிந்த இசைப்பாடல் ஒன்றைப் பாடுக.

11 இசை யின்பத்தை ஒரு பக்கத்தில் வரைக.

# செய்யுட் பகுதி

## 1. கடவுள் வணக்கம்

அன்றே என்றன் ஆவியும்
உடலும் உடைமை எல்லாமும்,
குன்றே அனையாய்! என்னையாட்
கொண்ட போதே கொண்டிலையோ?
இன்றோர் இடையூ(று) எனக்குண்டோ?
எண்டோள் முக்கண் எம்மானே!
நன்றே செய்வாய் பிழைசெய்வாய்
நானோ இதற்கு நாயகமே. 1

—மாணிக்க வாசகர்—திருவாசகம்

எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி இரங்கவுநின்
தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே. 2

—தாயுமானவர்

செந்தழலே வந்தழலைச் செய்திடினும் செங்கமலம்
அந்தரஞ்சேர் வெங்கதிரோற்(கு) அல்லால் அலராவால்
வெந்துயர்வீட் டாவிடினும் வித்துவக்கோட் டம்மா! உன்
அந்தமில்சீர்க்(கு) அல்லால் அகங்குழைய மாட்டேனே. 3

—குலசேகர ஆழ்வார் - பெருமாள் திருமொழி

அன்பேநீ ஆதலினால் ஆருயிர்கள் பொருட்டுன்
அழகுடலை வதைக்கவிட்டாய், அருளுயிரை நீத்தாய்;
இந்நிலத்தில் அச்செயலை எக்குரவர் ஏற்றார்?
இளங்கன்னி வயிற்றுதித்த இறைமைமணி விளக்கே.

அன்பினிலே குறையிருந்தால் அருஞ்செயலை ஆற்றல்
ஆகாதே, ஆகாதே; 'அன்புடைய அறவோர்
என்பும்பிறர்க் குரியர்' என எழுந்தமொழிக் குகந்த
இலக்கியமாய் இலங்கு நிற்கும் ஏசுகுரு நாதா!

—திரு. வி. கலியாணசுந்தரனார்

தேனினும் இனியநற் செந்தமிழ் மொழியே!
தென்னாடு விளங்குறத் திகழுந்தென் மொழியே!
ஊனினும் ஒளிர்வுறும் ஒண்டமிழ் மொழியே!
உணர்வினுக் குணர்வதாய் ஒளிர்தமிழ் மொழியே!
வானினும் ஓங்கிய வண்டமிழ் மொழியே!
மாந்தருக் கிருகணாய் வயங்குநன் மொழியே!
தானியல் சிறப்புறுந் தனித்தமிழ் மொழியே!
தனித்தினி தோங்குவாய் தண்டமிழ் மொழியே!

—கா. நமச்சிவாய முதலியார்

வானார்ந்த பொதியின்மிசை வளர்கின்ற மதியே!
மன்னியமூ வேந்தர்கள்தம் மடிவளர்ந்த மகளே!
தேனார்ந்த தீஞ்சுனைசால் திருமாலின் குன்றம்
தென்குமரி ஆயிடைநற் செங்கோல்கொள் செல்வீ!
கானார்ந்த தேனே! கற் கண்டே! நற் கனியே!
கண்ணே! கண்மணியே! அக் கட்புலஞ்சேர் தேவீ!
ஆனாத நூற்கடலை அளித்தருளும் அமிழ்தே!
அம்மே! நின் சீர்ப்பெருமை அறைதலியார்க்(கு) எளிதே!

—கரந்தைக் கவியரசு. ரா. வேங்கடாசலம் பிள்ளை

1. **மாணிக்கவாசகர்.** இவரைச் சிலர் கி. பி. 3-ஆம் நூற்றாண்டினர் என்றும் கருதுவர். இவர் சைவ சமயத்தைச் சன்மார்க்க முறையில் பரப்பியதோடு தமிழ்த்தொண்டும் புரிந்தவர். "திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்"

என்னும்படி இனிய அழகிய மொழியால் பாடப்பட்டதால், இவர் பாமாலை திருவாசகம் எனப்பட்டது. இவர் திருக்கோவையார் என்ற அருந்தமிழ் அகப்பொருள் நூலும் செய்துள்ளார்.

அனையாய் - ஒப்பவனே! நானோ இதற்கு நாயகமே - நான் இதற்குத் தலைமைக் காரணன் அல்ல.

2. **தாயுமானவர்.** இவர் சற்றேறக்குறைய மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்னே திருசிராப்பள்ளியில் ஆண்ட நாயக அரசரிடம் அமைச்சராயிருந்தார். சிறந்த தமிழ்ப்புலவரும் சமரச சன்மார்க்க சைவருமாவர். இவர் பாடல் அன்பும் இன்பும் ததும்புகிறது.

பராபரம் - யாவுக்கும் மேலாங் கடவுள்.

3. **குலசேகர ஆழ்வார்.** இவர் கி. பி. எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த சிறந்த வைணவ அடியார்; சேரர்குலத்தரசர். பெருமாள் அன்பினில் ஆழ்ந்து நின்றவர் ஆகையால் இவரது உருக்கமான பாடல்கள் பெருமாள் திருமொழி எனப்படும்.

தழல் - நெருப்பு. அழல் - வெப்பம். செங்கமலம் - செந்தாமரை. வெங்கதிரோன் - சூரியன். அலரா - மலரா. வீட்டாவிடின் - அழிக்கா விட்டால். வித்துவக் கோட்டம்மா - வித்துவக்கோடு என்னும் பதியில் உள்ள தலைவனே. அகம் - மனம்.

4. **திரு. வி. கலியாணசுந்தரனார்.** இவர் இந் நூற்றாண்டில் சென்னையில் சீரும் சிறப்புமாய் ஒளிரும் தமிழ்த் தவப் பெரியார் ஆவார். இவர் இறை பணியும், தமிழ்த் தொண்டும், நாட்டுக் கடமையும் கலந்த உண்மைக் கடனாற்றும் அறிஞர். "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என்னும் சமரசி. பல அரிய தமிழ் நூல்கள் இயற்றியவர். ஏழைபங்காளர்.

எக்குரவர் - எந்த சமய ஆசிரியர். இளங்கன்னி - மேரித்தாய். இறைமை - கடவுட்டன்மை. என்பு - எலும்பு. இலங்கி - விளங்கி.

5. **கா. நாமச்சிவாய முதலியார்.** கடந்த நூற்றாண்டிலும் இந்நூற்றாண்டிலும் சென்னையில் திகழ்ந்து விளங்கியவர். அரிய

தமிழ் உரை நூற்களும், இனிய பாடல்களும், பிள்ளைகளுக்குப் பாட நூற்களும் இயற்றி, "நல்லாசிரியர்" பத்திரிகையும் நடத்தியவர்.

வயங்கு - விளங்கு.

## II. இயற்கை அழகு

### 1. நம் உலகம்

வருணன் மஞ்சனம் ஆட்டவும் வானிடை இரவி
இருள்கையா(து) ஒளிர் திருவிளக்(கு) ஏந்தவும் இளங்கால்
தருணம் ஓர்ந்துமுன் விசிறவும் தழல்புகை தரவும்
கருணை கூர்பவள் காசினி எனுமுயர் கன்னி...... 1

—ரா. இராகவையங்கார்

### 2. மாலைச் சூரியன்

அமைதியோடு பார்த்திடுவாய் மின்னே ; பின்னே
அசைவுறும்ஓர் மின்செய்த வட்டு ; முன்னே
சமையும் ஒரு பச்சை நிற வட்டம் காண்பாய் !
தரணியில் இங்(கு) இதுபோல் ஓர் பசுமை உண்டோ ?
இமைகுவிய மின் வட்டில் வயிரக் கால்கள்
எண்ணில்லா(து) இடையிடையே எழுதல் காண்பாய் !
உமைகவிதை செய்கின்றாள், எழுந்து நின்றே
உரைத்திடுவோம் பல்லாண்டு வாழ்க என்றே...... 2

—பாரதியார்

### 3. சந்திரன் தோற்றம்

கான் எலாம் மலர்ந்த முல்லை
ககனமீ(து) எழுந்த(து) என்ன
வான் எலாம் வயங்கு தாரை
நிரைநிரை மலர்ந்து தோன்ற

வேனிலான் விழாவின் வைத்த
வெள்ளிவெண் கும்பம் என்னத்
தூமிலா மதியம் வந்து
குணதிசை தோன்றிற்(று) அம்மா ! 3

—வில்லிபுத்தூரார்

## 4. கடல்

எல்லை அறியாப் பெருங்கடலே—நீதான்
இரவும் உறங்காயோ கடலே
அல்லும் பகலும் அலைகடலே—உனக்(கு)
அலுப்பும் இலையோ கருங்கடலே !.......... 4

மழைக்கு மூலமும் நீ கடலே—அதை
வாங்கி வைப்பதும் நீ கடலே
வழுத்து மகிமை எலாம் கடலே—எவர்
மதித்து முடிக்கவலார் கடலே................ 5

—சி. தேசிகவிநாயகம் பிள்ளை

## 5. நாடு

சூழ மேதி இறங்கும் துறையில்
சொரியும் பாலைப் பருகிய வாளை
கூழை வாசப் பலாவினில் பாயக்
கொழும்ப லாக்கனி வாழையில் சாய,
வாழை சாய்ந்(து) ஒரு தாழையில் தாக்க,
வருவிருந்துக்(கு) உபசரிப்பார் போல
தாழை சோறிட, வாழை குருத்திடும்
சந்த்ர சூடர்தென் னாரிய நாடே. 6

—திரிகூடராசப்ப கவிராயர்

1. **ரா. இராகவையங்கார்.** இவர் சேது சமஸ்தானத்தில் அரசவை விளங்கத் தமிழ்ப்புலமை நடத்தியவர். பூமியின் சிறப்பைக் கூறும் புவியெழுபது என்னும் தம் நூலில் இச்செய்யுளைக்கூறி யுள்ளவர். இவர் பல நூலாராய்ச்சி ஆசிரியர்; சொல் வன்மை மிக்க வர். பாரிகாதை, தொழிற் சிறப்பு முதலிய நூற்களும், சாகுந்தல மொழி பெயர்ப்பும், பல ஆராய்ச்சி நூற்களும் எழுதியவர்.

மஞ்சனம் - நீராட்டு. இருள்நையாது-இருட்டுவருத்தாதபடி. இளங்கால் - மெல்லிய காற்று.

2. **பாரதியார்.** தேசியகவி பாரதியாரைப் பற்றி உணரா தார் இல்லை. மாலைச் சூரியனைச் சிறிது நேரம் உற்று நோக்கினால், கண் கூச்சம் தீர்ந்து அழகிய காட்சி காணலாம் என்று அழகிய பாடல்கள் கூறியுள்ளார். இது அவற்றுள் கண் கூச்சம் தீர்ந்தபின் காணத்தகும் காட்சியைக் குறிப்பது இச்செய்யுள்.

மின்னே - மின்னல் போன்ற பெண்ணே. வட்டு - வட்டம். சமையும் - அமையும். தரணி - பூமி.

3. **வில்லிபுத்தூரார்.** இவர் சமரசக் கருத்து ஒளிரும் ஒரு சிறந்த வைணவ அந்தணர். இனிய அழகிய விருத்தப்பாவினால் பாரதக் கதை பாடிய அருந்தமிழ்ப் புலவர். இரவில் விண்ணில் நக்ஷத்திரங்களுக்கிடையில் சந்திரன் தோற்றம், முல்லை மலரிடையில் வைத்த வெள்ளிக் குடத்திற்கு ஒப்பாம் என்று இக்கவி கூறுகிறது.

கான் - சோலை. ககனம் - ஆகாயம். தாரை-நக்ஷத்திரம். நிரை நிரை - வரிசை வரிசையாக. வேனிலான் விழவு-மன்மதன் திருவிழா. மதியம் - சந்திரன். குணதிசை - கிழக்குத் திசை.

4. **சி. தேசிகவிநாயகம் பிள்ளை.** திருவாங்கூர் சமஸ்தானத் தில் ஓர் அரும்பெருந் தமிழ்க் கவிஞராகித் திகழ்பவர். உள்ளங்

கவரும் பாடல்களும், இனிய நூற்களும் எழுதியுள்ளார். இவர் இந்நாட் புலவர் பெருமக்கள் வரிசையில் வைத்து மதிக்கத்தக்க அறிவும் ஆற்றலும் உள்ளவர். மலரும் மாலையும் இயற்றியவர் இவரே.

5. **திரிகூடராசப்ப கவிராயர்.** 18-ஆம் நூற்றூண்டின் முற்பகுதியில் இருந்த இவர் இயல் இசை நாடக முத்தமிழ்ப் புலவர். திருக்குற்றூலம் என்பது திரிகூடமலை என்ற வடமொழிப் பெயருடையது. இங்கு சிறந்த அழகிய காட்சிதரும் நீர் வீழ்ச்சியு முண்டு. இங்குள்ள சிவபெருமான்மீது குற்றூலக்குறவஞ்சியென்னும் இனிய முத்தமிழ் நூல் இவரால் இயற்றப் பட்டது. இதற்காக இவருக்கு நிலமானியமும் அளிக்கப்பட்டுள்ளது.

[திருக்குற்றூலம் என்பது திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள ஒரு மலைநாட்டு ஊர். அங்கே திருகூடமலை என்ற மலை மிகவும் அழகான காட்சிகளை அளித்துக்கொண்டு விளங்குகிறது. அதனிலுள்ள அருவிகளும் நீர்வீழ்ச்சிகளும் மிகப் பிரசித்தமானவை. குற்றூலத்தில் எழுந்தருளியுள்ள கடவுளின் திருநாமம் குறும்பலாவீசர் என்பது.]

## III. அறவுரை

### 1. நல்வழி

சாதி இரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின்—மேதினியில்
இட்டார் பெரியோர் ; இடாதார் இழிகுலத்தோர்
பட்டாங்கில் உள்ளபடி. 1

ஆன முதலில் அதிகம் செலவானால்
மான மழிந்து மதிகெட்டுப்—போனதிசை
எல்லார்க்குங் கள்ளனாய், ஏழ்பிறப்பும் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லனாம் நாடு. 2

## 2. நீதிவெண்பா

சிற்றுணர்வோர் என்றும் சிலுசிலுப்பர்; ஆன்றமைந்த
முற்றுணர்வோர் ஒன்றும் மொழியாரே;—வெற்றிவெறும்
வெண்கலத்தின் ஓசை மிகுமே; விரிபசும்பொன்
ஒண்கலத்தின் உண்டோ ஒலி. 3

—ஔவையார்

## 3. நன்னெறி

பெரியவர்தம் நோய்போல் பிறர்நோய்கண்(டு) உள்ளம்
எரியின் இழுதாவர் என்க;—தெரியிழாய்
மண்டு பிணியால் வருந்து பிறவுறுப்பைக்
கண்டு கலுழுமே கண். 4

## 4. நீதிநெறி விளக்கம்

நட்புப் பிரித்தல், பகைநட்டல், ஒற்றிகழ்தல்,
பக்கத்தார் யாவரையும் ஐயுறுதல்,—தக்கார்
நெடுமொழி கோறல், குணம்பிறி தாதல்
கெடுவது காட்டுங் குறி. 5

—குமரகுருபரர்.

## 5. இனியவை நாற்பது

கற்றார்முன் கல்வி யுரைத்தல் மிகவினிதே;
மிக்காரைச் சேர்தல் மிகமாண முன்னினிதே;
எட்டுணை யானும் இரவாது தானீதல்
எத்துணையும் ஆற்ற வினிது. 6

—பூதஞ்சேந்தனார்

தாளாளன் என்பான் கடன்படா வாழ்பவன்,
வேளாளன் என்பான் விருந்திருக்க உண்ணாதான்,
கோளாளன் என்பான் மறவாதான், இம்மூவர்
கேளாக வாழ்தல் இனிது. 7

—நல்லாதனார்.

## 6. நான்மணிக்கடிகை

எள்ளற்க என்றும் எளியரென்(று), என்பெறினும்
கொள்ளற்க கொள்ளார்கை மேல்வர,—உள்சுடினும்
சீறற்க சிற்றிற் பிறந்தாரை, கூறற்க
கூறல் லவற்றை விரைந்து. 8

விளம்பிநாகனார்

## 7. தண்டலையார் சதகம்

சங்கையறப் படித்தாலுங் கேட்டாலும்
பிறர்க்குறுதி தனைச்சொன் னாலும்
அங்கணுலகிற் சிறியோர் தாமடங்கி
நடந்துகதி யடைய மாட்டார்

திங்களணி சடையாரே தண்டலையாரே
சொன்னேன் சிறிது காலம்
கங்கையிலே படர்ந்தாலும் பேய்ச்சுரைக்காய்
நல்லசுரைக் காயா காதே. 9

—படிக்காசுப் புலவர்.

## 8. அறப்பளீசுர சதகம்

### வாழ்க்கைக்கு வேண்டியவை

வாலிபம் தனில்வித்தை கற்கவேண்டும்
கற்ற வழியிலே நிற்கவேண்டும்
வளைகடல் திரிந்துபொருள் தேடவேண்டும்
தேடி வளரறம் செய்யவேண்டும்
சீலமுடை யோர்களைச் சேரவேண்டும்
பிரிதல் செய்யா திருக்கவேண்டும்
செந்தமிழ்ப் பாடல்பல கொள்ளவேண்டும்
கொண்டு தியாகம் கொடுக்கவேண்டும்
ஞாலமிசை பலதருமம் நாட்டவேண்டும்
நாட்டி நன்றாய் நடத்தவேண்டும்
நம்பனிணை யடிபூசை பண்ணவேண்டும்
பண்ணி னுமிகு பக்திவேண்டும்
ஆலமமர் கண்டனே பூதியணி முண்டனே
அண்ணலே அருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே. 10

## பொருள் தேடிச் செலவுசெய்யும் வகை

புண்ணிய வசத்தினால் செல்வமது வரவேண்டும்;
பொருளைரட் சிக்க வேண்டும்;
புத்தியுடன் அது ஒன்று நூறாகவே செய்து
போதவும் வளர்க்க வேண்டும்;
உண்ணவேண் டும்; பின்பு நல்லவஸ்த்ரா பரணம்
உடலிற் தரிக்க வேண்டும்;
உற்ற பெரியோர், கவிஞர், தமர், ஆதுலர்க்குதவி
ஓங்குபுகழ் தேட வேண்டும்;
மண்ணில்வெகு தருமங்கள் செய்யவேண்டும் உயர்மோக்ஷ
வழிதேட வேண்டும்; அன்றி
வறிதிற் புதைத்துவைத் தீயாத பேர்களே
மார்க்கம் அறியாக் குருடராம்;
அண்ணலே! கங்கா குலத்தலைவன், மோழைதரும்
அழகன், எமதருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே!

—அம்பலவாணக் கவிராயர்

1. **நல்வழி.** இதன் ஆசிரியர் ஔவை; அவரைப்பற்றி அறியாதார் இல்லை. சிறப்பாக இளமக்களுக்கும் பொதுவாக மற்றவர்களுக்கும் நல்லவழிகளைப் புகட்டும் அறவுரை கொண்டுள்ள நூல் இது.

(1) சாற்று - சொல். மேதினி - உலகம். பட்டாங்கு - அறவுரை கூறும் நூல். (2) ஆனமுதல் - கைமுதற்பொருள். நாடு - ஆராய்ந்தறி.

2. **நீதிவெண்பா.** இதன் ஆசிரியரும் ஔவையா ரென்பர். சிற்றுணர்வோர் - சிற்றறிவுள்ளவர். ஆன்ற அமைந்த - அறிவு அகன்று ஒழுக்கம் பொருந்திய. முற்றுணர்வோர்-பேரறிவுள்ளவர். மொழியார் - சொல்லார். விரி - ஒளி வீசும். ஒண்கலம் - ஒளியுள்ள பாத்திரம்.

3. **நன்னெறி.** வீரசைவரான சிவப்பிரகாச சுவாமிகள் இதன் ஆசிரியர். அறவுரை, சாஸ்திரம், புராணம் ஆகிய நூற்கள் பல இயற்றி ஏறக்குறைய முன்னூறு ஆண்டிற்கு முன்னிருந்தவர். சொல்நயம் பொருள் நயங்கள் இவர் பாடல்களில் ததும்பி இனிக்கும்.

எரியின் இழுதாவர் - நெருப்பிலிட்ட நெய்போல் உருகுவர். தெரியிழாய் - ஆராய்ந்த அணி அணிந்தவளே. மண்டு - நெருங்கிய. பிணி - நோய். கலுழும் - அழும்.

4. **நீதிநெறி விளக்கம்.** குமரகுருபரர் இதன் ஆசிரியர். இவர் மதுரை நாயக்க அரசர் திருமலை ராயர் காலத்தவர். வட நாட்டில் முகம்மதிய அரசரிடம் வாதாடி வென்று காசியில் தமிழ் மடம் கட்டித் தமிழும் சைவமும் பரப்பியவர். அரிய நூற்கள் பல இயற்றியவர். இதனை இராயர் வேண்டுகோளால் இயற்றினர்.

நட்டல் - சிநேகித்தல். ஒற்றிகழல் - ஒற்றர்களாயிருந்து உளவு கண்டு வருபவரை இகழ்தல். ஐயுறுதல் - சந்தேகித்தல். நெடுமொழி-உறுதிச்சொல். கோறல் - கேளாது அழித்தல். பிறிதாதல் - மாறுபடல்.

5. **இனியவை நாற்பது.** இது சங்க காலத்திய பதினெண் கீழ்க்கணக்கைச் சார்ந்தது. ஒவ்வொரு செய்யுளிலும் இனிய அறவுரைகள் கூறப்பட்டனவாக நாற்பது செய்யுளுடையது இது.

மாண - மாட்சிமைப்பட. எட்டுணை - எள்ளளவு. இரவாது - யாசிக்காது. தானீதல் - தான் கொடுத்தல். ஆற்ற - மிகவும்.

தாளாளன் - முயற்சியுடையவன். கோளாளன் - பிறர் சொல்லினவற்றை மனதில் கொள்ளுகின்றவன். கேள் - நட்பினர்.

6. **நான்மணிக்கடிகை.** இதுவும் சங்கநூலே. இது, நான்கு வேறு வகையான இரத்தினக்கற்களைக் கொண்டு அமைத்த அணி. நம் உடம்பிற்கு அணி செய்வதே போலும், நம் உலகவாழ்க்கைக்கு அழகுதரும் அறவுரைகள் நான்கை ஒவ்வொரு செய்யுளிலும் கொண்டுள்ள அரிய நூலாகும்.

எள்ளற்க - இகழவேண்டாம். கொள்ளார் கை - பெற்றுக் கொள்ளத்தகாதவர் கை. உள்சுடினும் - மனவெம்பிச் சுட்டாலும். சிற்றிற் பிறந்தார்-தாழ்ந்த குடும்பத்தில் பிறந்தவர். கூறல்லவற்றை- சொல்லத்தகாதனவற்றை.

7. **தண்டலையார் சதகம்.** சதகம் என்பது நூறு செய்யுட் கொண்ட நூல். ஒவ்வொரு செய்யுளும் பல அறவுரை கூறும். தண்டலையில் உள்ள சிவனைக் குறித்து இயற்றப்பட்டதால் இது இப்பெயர் உற்றது. ஒவ்வொன்றின் இறுதியிலும் ஒரு பழ மொழியும் உண்டு.

சங்கை - சந்தேகம். கதி - நல்வழி.

8. **அறப்பளீசுர சதகம்.** இதன் ஆசிரியர் இராமநாடகம் எழுதிய அம்பலவாணக் கவிராயர் மரபினர். இந்நூல் பல அறவுரை களைக் கொண்டதாய், நாமக்கல் பக்கத்துள்ள அறப்பளி யென்னு மூரில் உள்ள சதுர கிரி ஈசுவரர்மீது பாடப்பெற்றுள்ளது.

தியாகம் - ஈகை. ஞாலம் - உலகம். நம்பன் - கடவுள். ஆலமமர் கண்டன் - விஷந்தங்கிய கழுத்துடையவன்; நீலகண்டன். பூதி-திருநீறு. முண்டன்-நெற்றியன். மதவேள் என்பவர் ஓர் பிரபு.

ஆதுலர் - யாசகர். மோழை - உணவு.

# IV. திருக்குறள்

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு (1)

செயற்கரிய செய்வார் பெரியர்; சிறியர்
செயற்கரிய செய்கலா தார் (2)

அன்பீனும் ஆர்வ முடைமை, அதுவீனும்
நண்பென்னு நாடாச் சிறப்பு. (3)

இனிய வுளவாக வின்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று (4)

நன்றி மறப்பது நன்றன்று; நன்றல்ல
தன்றே மறப்பது நன்று (5)

எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு (6)

யாகாவார் ஆயினும் நாகாக்க; காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு (7)

ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும் (8)

தீயினாற் சுட்டபுண் உள்ளாறு மாறாதே
நாவினாற் சுட்ட வடு (9)

அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத் தம்மை
இகழ்வாரைப் பொறுத்தல் தலை (10)

ஊருணி நீர்நிறைந் தற்றே; உலகவாம்
பேரறி வாளன் திரு (11)

நல்லா றெனினும் கொளல்தீது மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று (12)

தோன்றில் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று (13)

கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர் (14)

தந்தை மகற்காற்று நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல் (15)

ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோ னெனக்கேட்ட தாய் (16)

மகன்தந்தைக் காற்று முதவி இவன்தந்தை
என்னோற்றான் கொல்லென்னுஞ் சொல் (17)

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர் (18)

**திருக்குறள்.** உலகம் புகழும் வள்ளுவரால் இயற்றப்பட்டு, அன்று சங்கப் புலவர்களாலும், இன்று உலகமெங்கும் போற்றப் படும் தமிழ்ப்பொது மறையாக வுள்ளது; எந்நாட்டவர்க்கும், எம் மொழியினர்க்கும், எச்சமயத்தினர்க்கும் ஒப்புமையுடையது ; ஈடும் எடுப்பும் அற்றது ; மக்கள் வாழ்க்கைக்குப் பொருத்தமான அற வுரைகள் கொண்டுள்ளது.

முதல - முதலாக உடையன. முதற்று - முதலாக உடையது. செயற்கரிய - செய்தற்கரியவை.

ஈனும் - தரும். ஆர்வம் - விருப்பம். நாடா - அளவு கடந்த. இனிய - இனிமைதரும் சொற்கள். இன்னாத - இனிமை தராத சொற்கள். கவர்ந் தற்று - (கவர்ந்தது + அற்று) பறித்துண்பதை ஒக்கும். உய்வு - வாயில். செய்ந்நன்றிகொன்ற - செய்தநன்றியை மறந்த. இழுக்கு - குற்றம். சோகாப்பர் - துன்புறுவர். விழுப்பம் - மேன்மை. அகழ்வார் - தோண்டுவார். அவையத்து - சபையில். உவக்கும் - மகிழ்வாள். நோற்றான் - தவம் செய்தான்.

## V. தொடர் நிலைச் செய்யுள்

### கதைகள்

### 1. பவழக்கொடி அன்னம் வாங்கல்

#### அருச்சுனன் அன்னப்பறவை யாகுதல்

அருச்சுனன் தானினைக்க ஆயர்பெருமாளறிந்து
அன்னத்தின் வடிவாக அப்போதே வரங்கொடுத்தார் ;
ஆணழகுமன்னன் அன்னத்தைப் போலானான் ;
செட்டை அழகென்ன ! சீருடைய நெற்றியென்ன !
காலி னழகென்ன ! கழுத்தி னழகென்ன !
கண்ணி னழகென்ன ! காது வடிவழகே !
மூக்கி னழகென்ன ! முனைமயிரும் பாவனையும்

#### கிருஷ்ண பகவான் வேடனாய் வரல்

அச்சுதா னந்தவரி யாயர் பெருமாளும்
காட்டுக் கிழங்கெடுக்கும் கனவேடன் போலானார் ;
காற்செருப்புங் குல்லாவும் கைதனிலே மான்றலையும்
பன்றிகுத்தும் ஈட்டிபாலா பல்லயமும் கைப்பிடித்து,

கதையுடன் வாள்மழுவுங் கட்கமுங் கைப்பிடித்து,
கருநாயுஞ் சங்கிலியுங் கைதனிலே தான்பிடித்து,
அன்னத்தை யேந்திக்கொண்டு அவசரமாய்க் காட்டைவிட்
பவழக் கொடியாள் பத்தினியாள் தானிருக்கும் [டுப்
மண்டபத்து வழியாக வருகிறான் வேடனவன்.

### தோழியர் வினு

ஆரணங்கு தோழிமார்கள் அன்னத்தைத் தாம்பார்த்து,
" ஆரடா வேடுவனே ! அன்னத்தை விற்கிறவன் ?
விற்பதே யாமானல் வேண்டியபொன் கிடைக்குமிங்கே "

### பவழக்கொடி அன்னத்தை வாங்கல்

அப்படியே நல்லதென்றான் அழகுள்ள வேடனவன் ;
ஓடியே வந்தார்கள் உத்தமிமுன் தாதியர்கள் ;
பவழக்கொடியாளின் பாதத்திற் போய்ப் பணிந்து,
" ஆரோ ஒருவன் அன்னத்தை விற்கலுற்றான் ;
அன்னத்தைப் பார்த்தால் அழகா யிருக்குதம்மா !
கண்ணிட்டுப் பார்க்கவே காண முடியாது ;
எங்கிலும் பார்த்ததில்லை இயலான அன்னமிது ;
வைத்து வளர்க்கலாம் வாங்குமம்மா ஆய்ச்சி " யென்றார்
அவ்வார்த்தை தான் கேட்டு அன்ன நடைமாது,
'அந்த நல்ல வேடுவனை அழைத்தோடி வாரு,' மென்றாள்.
ஓடினார் தாதியரும் ஒரு நொடியில் வேடனண்டை ;
"ஆரடா வேடுவனே ! ஆய்ச்சி அழைக்கின்றாள் ;
அன்னத்தைக் கொண்டுவாடா, அழகுள்ள வேடுவனே ! "

என்றது சொல்லையிலே இசைந்துவழி நடந்தான் ;
பவழக்கொடியாள் பத்தினியாள் முன்னே வந்தான் ;
கண்டாள் பவழக்கொடி, கட்டழகி யன்னமதை
'என்னப்பா வேடுவனே ! என்னவிலை யன்ன'மென்றாள்.
'ஆயிரம் பொன் கொடுத்தால் அன்னம் தருவ'னென்றான்
'ஆரடி தாதியவள் அளந்துபொன் கொடுத்தி'டென்றாள்
(வேடன் போயினன் - அதன் பின் பவழக்கொடியாள்)

## அன்னத்தைப் போற்றல்

[அன்னத்தைக் கையில் வாங்கி அழகாய் மடியில் வைத்தாள்]

'ஆரடி தாதியாளே ! அலங்காரச் செங்கமலம் !
இந்த அன்ன மெவ்வெப்போ திரைகள் எடுத்ததோ,
போசனங்கொண்டு வாடி, பொற்கொடியே," என்றாளே.
மாம்பழமும், பலாப்பழமும், மலைவாழை, ரஸ்தாளி,
கரிவாழை, செவ்வாழை, கர்ட்டு விளாம்பழமும்,
கொண்டு வந்து வைத்தாளே கொம்பனையாள் முன்னேதான்.
அன்ன மதற்கூட்டி ஆவல் தெளியவைத்து,

## அன்னத்துக்குக் கூண்டு அமைத்தல்

"ஆரடி தாதிகளே ! அழையுங்கள் தச்சனைத்தான் ;
ஈழத்துத் தச்சனை இக்ஷணமே யழையு" மென்றாள்
ஓடினார் தாதியர்கள் ; ஒருநொடியி விட்டுவந்தார் ;
வந்து பணிந்தானே வரிசையுள்ள தச்சனவன் ;
'என்னை அழைத்தது ஏது கருமம் ?' என்றான்.
அன்னமது தானிருக்க அழகுகூண்டு பண்ணு' மென்றாள் ;

சொன்னதுந் தச்சனவன் செப்பனிட்டான் சீக்கிரத்தில் ;
செம்பொனொரு நூறும்பெற்றுத் தெண்டனிட்டுப் போய்நடந்தான்;
அன்னத்தைத் தானெடுத்து ஆவலுடன் முத்தமிட்டுக்
கூண்டில் அடைத்தவளும் கொப்பனவே தானெழுந்தாள்.

சோரம்பு நாட்டில் பவழக்கொடி ஆண்டாள். அவளை பாண்டவரில் அருச்சுனன் மணந்த வரலாற்றைக் குறிக்கும் கதை பவழக்கொடிமாலை. இதனை எழுதியவர் புகழேந்திப் புலவர் என்பர்.

செய்யுள் அடி :—

1. ஆயர் பெருமாள் - கிருஷ்ணன்.
   செட்டை - சிறகு.
8. அச்சுத, ஆனந்த, அரி - கிருஷ்ணனின் வேறு பெயர்கள்.
   ஆயர் - இடையரான கிருஷ்ணபகவான்.

12,—13. ஆயுதங்களின் பெயர்கள்.

17 ஆர் அணங்கு-அழகு பொருந்திய தெய்வம் போன்றவள்.

28 அன்னம்போல் நடக்கும் மாது.

45 கொம்பனையாள் - பூக்கொம்பைப் போன்றவள்.

88 ஈழம் - இலங்கை. இக்ஷணம் - இப்பொழுதே.

## 2. காகம் நாகத்தைக் கொல்வித்தது

### பஞ்ச தந்திரம்

கோடுறு சினையிற் காகம்
　　கூடுவைத் தனேக காலம்
பேடொடு கூடிவாழும்
　　பெருமரப் பொந்தில் வந்தே

ஆடிய கரும்பாம் பொன்றங்
 கதுபெறும் முட்டை யெல்லாம்
நாடியே குடித்துப் போட
 நலிந்துளம் மெலிந்து வாடி, (1)

தன்னுயிர்ப் பாங்கனை
 சம்புகன் அருகுபோய் " இங்
கென்னசெய் குவன்நான் ?" என்ன,
 " இதைக்கொலல் அரிதோ ! நீ போய்
மன்னவன் தேவி யாடும்
 மஞ்சனச் சாலை புக்குப்
பொன் அணி கொண்டுவந்து
 போடுக பொந்தில் " என்ன (2)

காகம்அப் படியே செய்யக்
 காவலன் ஏவ லாளர்
ஏகிமா மரத்தின் பொந்தை
 ஈர்ந்தனர் ; ஈரும் போதில்
நாகம்அங் கிருந்து சீற
 நறுக்கினர் இரு துண்டாக.
ஆகையால் உபாயத் தாகா
 திலையென அறையும் பின்னும். (3)

பஞ்சதந்திரக் கதைகளை எளிய தமிழில் பாடியவர் வீரமார்த்தாண்ட தேவர். இவர் காலம் உறுதியாகக் கூறக்கூடவில்லை.

1. கோடு - சினை. உறு - பொருந்திய. சினை - கிளை. பேடு - பெட்டை. நாடி - தேடி. நலிந்து - வருந்தி.

2. பாங்கன்-தோழன். சம்புகன்-நரியின் பெயர். மஞ்சனச்சாலை-நீராடும் அறை.

3. ஏகி-போய். ஈர்ந்தனர்-பிளந்தனர். அறையும்-சொல்லும். பின்னும்-மேலும்.

## 3. பாரி காதை

### கபிலர் பாரியுடன் நண்புற்ற திறம்

பரண ரொடுவாதம் பண்ணி உலகில்
முரணில் புகழ் விளங்கு முன்னோன்—தரணிக்(கு)
ஒரு புலவன், வான் கபிலன், உம்பர்கோன் ஒப்பாற்கு
அரு(கு) இலக மேயினன் ஆங்கு. (1)

அகத்தில் தெருள் விளக்கம் அங்கபிலன் செய்ய
முகத்தில் பொலிய முதல் வேள்—மிகத்தன்
விழிகவர நின்ற விழுமியோற்(கு) " இன்பம்
பொழிக வர(வு)" என்றான் புகன்று. (2)

பாட்டரையற்(கு) ஏற்ற பகல்செய் மணி இருக்கை
நாட்டரையன் வேண்ட நயந்(து) அமர்ந்து,—வேட்(டு)
கேளாருங் கேட்பக் கிளந்தான் விழுப்பொருள்கள் [இனிது
மாளாப் பெரும்புலவர் மன். (3)

இன்ன இவை யென்(று) இயம்பி, " இனியனவும்
பன்ன(து) உணரப்படும்" என்றான்—அன்னான்வாய்க்
" கேளா தனவெல்லாம் கேட்டாம் " என உவந்தார்
வேளார் அவையோர் வியந்து. (4)

ஆரிய் மன்னன் அரும்பிரம தத்தற்(கு) ஒண்
சூரியன் என்னச் சுடர் கொளுவிச்—சீரிய
தென்தமிழ்நல் இன்பம் தெருட்டினன் ; பாடினன்
இன்(று) அமிழ்தம் பெய்தாங்(கு) இவை. (5)

—ரா. இராகவையங்கார்

பாரியின் சரிதத்தைக் கூறும் பாரி காதை வெண்பாவால் ஆகியது. பாரி கல்வி கேள்விகளிலும், கொடையிலும், நட்பிலும் மிகச் சிறந்தவன் ; கடை எழு வள்ளல்களில் ஒருவன். கடைச்சங்கப் புலவருள் மேம்பட்டவரான கபிலர் இவனுக்கு உயிர்த்துணைவரா யிருந்தார். இவன் ‘ வேள்பாரி ’ எனவும் வழங்கப்பெறுவான்.

இந்நூலை இயற்றியவர், இராமநாதபுரம் சேதுபதி ஸமஸ்தான வித்துவானும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே தமிழாசிரியரு மான பாஷா கவிசேகர ரா. இராகவையங்கார் ஆவர். இவர் தமிழிலும் வடமொழியிலும் புலமையோடு, கவித்திறனும் சொல் லாற்றலும் உடையவர். வடமொழிச் சாகுந்தல நாடகத்தின் தமிழ் மொழிபெயர்ப்பும், பாரி காதையும், புவியெழுபதும், மற்றும் சில ஆராய்ச்சி வசன நூல்களும் இவர் இயற்றியவை.

1. பரணர் கடைச் சங்கப்புலவருள் மிகவும் பெருமை வாய்ந் தவர். இவர் பெயரோடு கபிலர்பெயரும் சேர்த்துக் ‘ கபில பரணர் ’ எனப் பலராலும் வழங்கப்பெறும். முரணில் - மாறுபாடில்லாத. வான் - தூய. உம்பர்கோன் ஒப்பான் - தேவராசனுக்கு ஒப்பான பாரி.

2. ‘ அகத்தின் அழகு முகத்தில் தெரியும் ’—பழமொழி. விழுமியன், மேம்பட்டவன். முதல்வேள் - பாரி.

3. பாட்டரையன் - கவிராசன். கேளாறும் வேட்டு இனிது கேட்ப ; ‘ கேட்டார்ப்பிணிக்கும் தகையவாய்க் கேளாரும் வேட்ப மொழிவதாம் சொல் ’ (திருக்குறள்) நாட்டரையன் - அரசன். பகல் செல்மணி இருக்கை - ஒளி வீசும் இரத்தின ஆசனம்.

4. 'இன்னு இவையென்று இயம்பி' என்றது, இவர் இன்னு நாற்பது என்னும் நூல் செய்தமையைக் குறிக்கும். கேளா தன (அதற்கு முன்) கேட்டறியாத சிறந்த விஷயங்கள். பன்னுது சொல்லாது.

5. ஆரிய மன்னனுன பிரமதத்தன் தமிழை இகழ அவனுக்குச் சூரியன் போலும் அறிவுச் சுடர் உண்டாக்கவும் தமிழின் அருமை விளங்கவும் கபிலர் குறிஞ்சிப் பாட்டுப் பாடியதை இச்செய்யுள் விளக்குகிறது.

## VI. பல்சுவைப் பாடல்கள்

### 1. தொழிற்சாலை பல

இரும்பைக் காய்ச்சி உருக்கிடுவீரே !
யந்திரங்கள் வகுத்திடு வீரே !
கரும்பைச் சாறு பிழிந்திடு வீரே !
கடலில் மூழ்கிநன் முத்தெடுப் பீரே !
அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்
ஆயிரந் தொழில் செய்திடு வீரே!
பெரும்புகழ் நுமக்கே இசைக்கின்றேன்
பிரமதேவன் கலையிங்கு நீரே !

—பாரதியார்

### 2. "எல்லார்க்கும் ஒவ்வொன்று எளிது"

வான்குருவி யின்கூடு வல்லரக்குத் தொல்கறையான்
தேன்சிலம்பி யார்க்கும் செய்யரிதால்;- யாம்பெரிதும்
வல்லோமே யென்று வலிமைசொல வேண்டாங்காண்;
எல்லோர்க்கும் ஒவ்வொன் றெளிது.

## 3. மோர்

காரென்று பேர்படைத்தாய் ககனத்(து) உறும்போது;
நீரென்று பேர்படைத்தாய் நெடுந்தரையில் வந்ததற்பின் ;
வாரொன்று மென்கூந்தல் ஆய்ச்சியர்கை வந்ததற்பின்
மோரென்று பேர்படைத்தாய்; முப்பேரும் பெற்றாயே.

—காளமேகப் புலவர்.

## 4. மழை வரப்பாடியது

காரேயுன் நீரையெலாம் கள்ளன் கவர்ந்தானோ ?
நீரே உதவாய் நெறியாமோ ?-நேரேதான்
வாரியுண்டு வாரிமொண்டு வாரியுண்டு வானிருண்டு
பேரிகொண்டு நீதிரண்டு பெய்.

—வேதநாயகம் பிள்ளை.

## 5. கடன்

ஈன்றுபுறந் தருதல் என்றலைக் கடனே
சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே
ஒளிறுவா ளருஞ்சம முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே.

—பொன் முடியார்.

## 6. உபதேசம்

ஒன்(று) என்(று) இரு ; தெய்வம் உண்(டு) என்(று) இரு ;
செல்வ மெல்லாம் [உயர்
அன்(று) என்(று) இரு; பசித்தோர் முகம்பார் ; நல்
அறமும் நட்பும்

நன்(று) என்(று) இரு ; நடுநீங்காமலே நமக்(கு)
இட்டபடி
என்(று) என்(று) இரு ; மனமே உனக்கோர் உப
தேசம் இதே.

—பட்டினத்தார்.

## 7. இரு சொல் அலங்காரம்

கீரை விதைப்பதேன் கீழோர் செல்வரைச் சுற்று
வதேன்—பிடுங்கித்தின்ன !

## 8. முச்சொல் அலங்காரம்

அக்குத்தொக்கு இல்லாதான் ஆண்மையும்
வெட்கம் இல்லாதான் வீரமும்
மிக்க உழைத்து உண்ணுதான் சோறும்
இம்மூன்றும், கக்கித் தின்னும் நாயோடொக்கும்

## 9. தமிழ்ப்பணி

யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவ தெங்கும் காணோம் !
பாமரராய், விலங்குகளாய், உலகனைத்தும்
இகழ்ச்சிசொலப் பான்மை கெட்டு,
நாமமது தமிழரெனக் கொண்டிங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ ? சொல்வீர் !
தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும்வகை செய்தல் வேண்டும். (1)

யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்,
வள்ளுவர்போல், இளங்கோவைப்போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை,
உண்மை ; வெறும் புகழ்ச்சி யில்லை ;
ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய்
வாழ்கின்றோம் ; ஒருசொற் கேளீர் ;
சேமமுற வேண்டுமெனில், தெருவெல்லாம்
தமிழ்முழக்கம் செழிக்கச் செய்வீர். 2

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும் ;
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும் ;
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை யில்லை ;
திறமான புலமையெனில் வெளிநாட்டோர்
அதைவணக்கம் செய்தல் வேண்டும். 3

—சி. சுப்பிரமணிய பாரதியார்.

## அரும்பொருள்

(1) புவி - பூமி. (2) கறையான் - சிதலை, செல் (3) கார் - மேகம். ககனம் - ஆகாயம், விண். வார் ஒன்று - நீண்டுள்ள. ஆய்ச்சியர் - இடைச்சியர். (4) வாரி உண்டு - கடல் இருக்கிறது. வாரிமொண்டு-கடலில் முகந்து. வாரி உண்டு - கடல் நீர் குடித்து. வானிருண்டு - மேகங்கருத்து. பேரிகொண்டு - பேரிகைபோல் இடி இடித்துக்கொண்டு. (5) ஈன்று - பெற்று. புறந்தருதல் - காப்பாற்றல். நன்னடை - நல்லொழுக்கம். நல்கல் - கொடுத்தல்.

வேந்தன் - அரசன். ஒளிறு - ஒளி வீசும். சமர் - போர். முருக்கி - வென்று. களிறு - யானை. எறிந்து - வெட்டி. (9) பாமரர் - கல்வி யறிவு இல்லாதவர். தேமதுரம்-மிகவும் இனிமை. சேமம் - மிகவும் நன்மை. உற - அடைய.

**வேதநாயகம்பிள்ளை.** இவர் மாயூரத்தில் டிஸ்டிரிக்ட் முனிசீபா யிருந்தவர். சிறந்த தமிழ்ப் புலவரும் புரவலருமாகத் திகழ்ந்த கிறிஸ் தவ அன்பர்.

**பொன் முடியார்.** இவர் சங்ககாலத்துப் பெண்பால் நல்லிசைப் புலவர். அக்காலத்தில் தமிழ்ப் பெண்மணிகளின் கல்வி நிலைமை யையும், கடமை உணர்ச்சியையும் விளக்கச் சான்றாவார். இவர் பாடல் சங்க நூலாகிய புறநானூற்றில் சேர்க்கப்பட்டுள்ளது.

**பட்டினத்தார்.** இவர் சிறந்த தமிழ்ப் புலவரும் ஞானியும், துற வியுமாவார். உலகிற்கு நல்வழி காட்டியவர்.

TB 031(6) N49
தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம் சென்னை-600 008.
88538

RJR/1262